காவேரி

November-194
பார்த்திப-கார்த்திகை

23 NOV 1945
MADRAS
1790



idest Circulated Monthly

குறித்த நேரத்தில் லாரிகள்



தென்னிந்தியாவின் 21 பிரதான நகரங்களை கால அட்டவணைப்படி இணைப்பது T.V.S. லாரி சர்வீஸ்

T.V.சுந்தரம் அய்யங்கார் & ஸன்ஸ் லிட்

மதுரை & மதறாஸ்.

T.V.S.K.18A

இந்திய மக்களிடையே
புகழ்பெற்று விளங்கும் நமது
வாசனைத் திரவியங்கள் சுமார் அரை
நூற்றாண்டுகளாக வினியோகிக்
கப்பட்டு வருகின்றன.

விஜயபுரம்

கே. டி. ஆர்.

சரக்குகள்—பன்னீர், அரைக்கீரை, சந்தனாதி தைலங்கள், கிருஷ்ணா அகர்பத்தி, ராஜா பற்பொடி — மணத்திற்கும் குணத்திற்கும் பெயர்போனவை — எங்கும் கிடைக்கும்

K·T·R

சந்தனாதி தைலம்

...SOLE DISTRIBUTORS...

GIRISON & Co...MADRAS

Calcutta Agent :— **A. NATARAJAN,**
118 Rash Behari Avenue, Calcutta.

Guntur District Agent:— **A. SRINIVASA IYER,**
Madras Club, Narasaraopet, Guntur Dist.

வட இந்தியாவிலுள்ள மற்ற பாகங்களுக்கும் ஏஜண்டுகள் தேவை.

"இவ்வருடம் எனக்கு 55 வயது பூர்த்தியானது. வேலையினின்றும் விலகினேன். அதுபற்றி கவலைப்பட்டேனா என்ன? கிடையவே கிடையாது. ஏனென்றால், ஓய்வு நாட்களைப் பணத்தொல்லையின்றிக் கழிக்கப் போதுமான பணம் சேமித்திருந்தேன். எப்படியென்று கேட்கிறீர்கள்? அது ரொம்பச் சுலபமானது! சிறு வயதிலிருந்தே பணம் சேமிக்கப் பழகி வந்தேன். அந்தக் காலத்தில் எனக்குப் பெரிய சம்பாத்தியமொன்றுமில்லை; என்றாலும், ஒவ்வொரு மாதமும் ஏதோ கொஞ்சம் சேமித்து, அப்பணத்தை பத்திரமான இடத்தில் வட்டிக்குப் போட்டு வந்தேன்............"

1000, 5000-மென்று பெரிய பெரிய தொகைகளை எல்லோருக்கும் சேமிக்க முடியாதுதான். பல சமயங்களில், ஜனங்கள் தங்கள் செலவுபோக மீரும் பணம் வெகுச் சொற்பமென்றுகண்டு, அவ்வளவு சொற்பத் தொகையை சேமித்துத்தான் என்ன பயனென்று நினைப்பதுண்டு. அப்படி நினைப்பது தவறு. பிரதி மாதமும் ஒரு சிறிய தொகை—எவ்வளவு சொற்பமாயினும் சரி, சேர்த்து வைப்பதுதான், வெற்றிகரமாக பணம் சேமிப்பதின் சுலபமான இரகசியம். அச்சிறிய சேமிப்புகள் நாளாவட்டத்தில் பெருகிப் பெருகி, ஒரு உபயோககரமான தொகையாகி விடுவதைக் காண நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். கிரமப்படியாகச் சேமிப்பதுதான் இலாயமான வழியாகும்.

எதிர்காலத்தின் பொருட்டு இப்போதே திட்டமிடுங்கள். உங்களால் இயன்ற வரை மிச்சப்படுத்துங்கள்.

ஆனால், உங்கள் சேமிப்புகளை பத்திரமாகவும் தேவையாகும்பொழுது எடுத்துக் கையாளக் கூடியதுமான முறையில் வட்டிக்குப் போட வேண்டுமென்பது ஞாபகமிருக்கட்டும்.

வெகு சிறிய தொகைகளையும் நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்ட்டிபிகேட்டுக்கள், சர்க்கார் கடன் பத்திரங்கள், போஸ்டாபீஸ் ஸேவிங்ஸ் பாங்கி அக்கௌண்டுகள், இன்ஷூரன்ஸ், கூட்டுறவு சங்கங்கள், ஸேவிங்ஸ் பாங்கி அக்கௌண்டுகள்—ஆகியவைகளில் வட்டிக்குப் போடலாம். அங்கு உங்கள் பணம் பத்திரமாயிருப்பதோடு, நாளாவட்டத்தில் பெருகியும் வரும். பண்டங்கள், உற்பத்திச் சரக்குகள், நகைநட்டுக்கள், நிலம், கட்டிடங்கள் முதலியவை வாங்கி பணத்தை நஷ்டத்திற்குள்ளாக்காதீர்கள். அவைகளின் விலை மதிப்பு குறையக்கூடும். வருங்காலத்திற்காகப் பத்திரமாகச் சேமியுங்கள்.

கவர்ன்மெண்ட் ஆப் இந்தியா, பைனான்ஸ் இலாகா வெளியீடு.

AAA 152

ஆபரணங்களுக்கும்
வைரங்களுக்கும்
P.A. ராஜசெட்டியார் & பிரதர்
கடைத்தெரு, கோயமுத்தூர்
போன் 218A - தபால்பெட்டி 139 - தந்தி "ராஜா"

ஓடத்துறை—

பணக்காரனே ஏழையோ, அவசரமோ இல்லையோ எப்படியும் ஆற்றைக் கடக்கப் படகுக்குக் காத்துத்தானாகவேண்டும். நெடுந்தூரம் வெய்யிலில் மீன் சுமையை விற்கக் கொண்டுபோகும் செம்படவனுக்கும் அவன் மனைவிக்கும் ஒரு கோப்பை தேனீர் வேண்டியதுதான். பொழுது போக்குக்காக வெளியே செல்பவர்களும் வழியே கிடைக்கும் சிற்றுண்டிகளை வாங்கித் தின்பதையும் தமாஷாகவே நினைக்கிறார்கள்.

கடலையடுத்த கீழ்வங்காளம், மலையாளம், ஆந்திரதேசம், கத்யவார் போன்ற எல்லா இடங்களிலும் ஓடத் துறைகளுண்டு. அநேகமாக, கங்கை, சிந்து, காவேரி போன்ற மஹாநதிகளைக் கடக்கப் பாலங்களைவிடப் படகுகளையே உபயோகிக்கிறார்கள். இரு கரைகளிலும், இல்லை ஒரு கரையிலாவது நீங்கள் விரும்பும் தேனீர்க் கடையுண்டு. ப்ரூக் பாண்ட் தேனீர் அருந்துவதால் படகுக்காகக் காத்திருக்கும் சிரமம் தோன்றாது.



இடைவிடா விநியோகம்—
எப்போதும் புது மணம்.

ப்ரூக் பாண்ட்

"இரு இலையும் ஒரு மொட்டும்"

இசை உலகில் புரட்சி

இன்றைய தென்னிந்திய கர்னாடக சங்கீத உலகில் இணையற்று பிரகாசித்து புகழ் மாலைகளும் பொற்பதக்கங்களும், சன்மானங்களும் பெற்று எல்லோரது ஆசியும் ஆதரவையும் அடைந்து திலகமாய் விளங்கிவரும்

கர்னாடக சங்கீத வித்வான் கும்பகோணம்

இசை ஒளி A.D. சுல்தான்

அவர்களின் இசையரங்குகள் கீழ்க்கண்ட தேதிகளில் குறிப்பிட்ட இடங்களில் நடைபெறும்

1—11—45	-	பவானி
14—11—45	-	திருச்சி
17—11—45	-	திருச்சி ரேடியோ
20—11—45	-	மேலப்பாளயம்
30—11—45	-	சின்னமனூர்
4—12—45	-	புவனகிரி
7—12—45	-	திருச்சி
8—12—45	-	திண்டுக்கல்
26—12—45	-	சென்னை

வாழ்க்கையின் வெற்றி

ஸ்திரீகளுக்கு
ஏற்படும் சகலவித
கர்ப்பாசய நோய்களை
நீக்கி வாழ்க்கையில் வெற்றியை
அளிக்கக்கூடிய சிறந்த டானிக்

அருணா

ஆயுர்வேதாஸ்ரமம்
மதறாஸ்

வண்டியின் ஜன்னலிலிருந்து எல்லாம் சரியாகத்தான் தோன்றுகிறது

ஆனல் பிரயாணி புன்னகை புரிவதில்லே. செழிப்புறத் தோன்றும் நிலங்களும் பழத் தோட்டங்களும், விரைவில் மறைந்து விடுகின்றன. அவைகளுக்கப்பாலுள்ள ஒன்றும் விளேயாத விசாலமான வெட்டை வெளிகளே அவர் எண்ணத்தை கவர்கின்றன.

அதன் காரணத்தையும் அவர் அறியாமல் இல்லே. இந்தியாவில் உள்ள ஏழு லட்ச கிராமங்களில் பெரும்பாலானவை ரஸ்தாக்களினின்று தனித்தே நிற்கின்றன. கிராம வாசிகள் உணவுப் பொருள்களே அதிகமாக விளேவித்தாலும் அவைகளே மார்க்கட்டுக்கு அனுப்ப இடமில்லே. ரஸ்தாக்கள் ஏற்பட்டால் அவர்கள் அதிகமாக தானியங்களே விளேவிப்பதன்றி கைத்தொழில் சாமான்களேயும் வாங்க ஏதுவாகும் விவசாயமும் கைத்தொழிலும் ஒன்றை ஒன்று சார்ந்தன. ஒன்றின் அபிவிருத்தியே மற்றென்றின் வாழ்விற்கு காரணமாகும்.

பிரயாணி முன் நோக்குகிறர். கிராமங்களுக்கும், பட்டினங்களுக்கும், நகரங்களுக்கும், தேசத்தின் சுகாதாரத்திற்கும், சுபிக்ஷத்திற்கும் உயிர்ப்பொருளாயுள்ள சாமான்களே அனுப்ப, உடம்பிலுள்ள ரத்த குழாய் போலவும் வலே பின்னலேப்போலவும் உள்ள ரஸ்தாக்களே உடைய வருங்கால இந்தியாவைப் பார்க்கிறர்.



நல்ல ரஸ்தாக்கள் செழிப்பிற்கு மார்க்கமாகும்

லோத்ரா ★★★

கர்பாசய ரோக நிவாரணி

கர்பாசய கோளாறுகளால் ஏற்படக்கூடிய பல்வேறு உபாதைகளிலிருந்து காப்பாற்றி ஆரோக்யத்தை அளிக்கிறது

கேசரி குடீரம் லிட், மதராஸ்

நிஜாம் சமஸ்தானம், ஆந்திரா ஜில்லாக்கள், தமிழ்நாடு முதலிய இடங்களுக்கு ஏஜண்டுகள்:-

சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்

சகிந்திராபாத், பெஜவாடா, மதுரை.

பொருளடக்கம்

பார்த்திப மலர் 5 | கார்த்திகை இதழ் 4

கொலைபாதகத்வம் ... 5

விட்டு வைத்தியர்—விமர்சனம் 6

கதம்பம் ... 7

அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள் 9
ராமய்யா

சிசு வளர்ப்பு ... 15
தி. சே. சௌ. ராஜன்

உத்தரகிரி யாத்திரை ... 20
ரா. ஸ்ரீதேசிகன்

பட்டு ... 25
ஆர். கே. விசுவநாதன்

அம்பாச்சாரி ... 33
கே. சுந்தரம்மாள்

புரட்சிக் கோமாளி ... 43
யோகி சுத்தானந்த பாரதியார்

அழகாயி ... 48
"புனர் ஜன்மி"

தீபாவளி ... 57
டாக்டர் வே. ராகவன்

"ஆனை—ஐயா" ... 61
டாக்டர் வே. ராகவன்

சலனம் ... 66
விஜயஸ்ரீ

கண்ணும் கண்ணனும் ... 74
வள்ளுவன்

அம்மாளின் வீரச்செயல் ... 78
கௌரீ

குறிப்பு:—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்கள் அவற்றை எழுதியவர்களுடையனவே. அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்லர்.

சென்னை-600 008
219019

தாய்மார்கள் அறிவர்

—உட்வர்ட்ஸ் க்ரைப் வாட்டரின்—
மதிப்பு தாய்மார்களுக்குத் தெரியும்.
அது குழந்தைகளை நன்கு பாதுகாக்கும்

WOODWARD'S
GRIPE WATER

keeps baby well

I-WW108-III W. WOODWARD LTD LONDON, ENGLAND

Agent:— **T. T. KRISHNAMACHARI,**
12A Lingha Chetty Street, :: G. T. MADRAS

காவேரி

பார்த்திப மலர் 5	"சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்—" பாரதியார்	கார்த்திகை இதழ் 4

கொலைபாதகத்வம்

பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இன்று கொலை பாதகத்தில் முனைந்துள்ளார்கள். ஆசியாவில் எங்கே தேசீயக் கிளர்ச்சி நடந்தாலும் அதைச் சமாப்தி செய்ய, தமக்குட்பட்ட படைகளை ஏவி, சுதந்திர தாகம் கொண்டு எழும் மக்களின் வாயில் மண்ணைப்போட்டுச் சுட்டுவீழ்த்தி வருகிறார்கள். இது இந்தியர்களுக்குப் புதிதல்ல; தெரிந்த விஷயம். ஆனால் பிரிட்டிஷ் பிரசாரத்தில் சிக்குண்ட உலக மக்களுக்கு இது அவ்வளவாகத் தெரியாது. இந்தோசைனா, இந்தோனேஷ்யா இந்நாடுகளில் நடந்துவரும் சுதந்திரக்கிளர்ச்சியை அடக்குவதில் முதன்மை ஸ்தானம் வகிப்பவர் நமது பிரிட்டிஷார்தான். உண்மையில் இவர்கள் அக்கிளர்ச்சிகளில் தலையிடவேண்டிய அவசியமேயில்லை. என்றாலும் பிரான்ஸுக்கும் ஹாலந்துக்கும் உதவ எண்ணி இக் கொலைபாதகத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

இதுமட்டுமல்ல, இந்தியத் துருப்புக்களை இதில் உபயோகிக்கிறார்கள். இந்தியா முழுதும் இதற்கு எதிரிடையாகக் கிளர்ச்சி செய்தும் அதற்குச் செவிசாய்க்காமல் இதைச் செய்துவருகிறார்கள். இது அநீதி என்பது மட்டுமல்ல. நம்முடைய சுதந்திர இயக்கத்தைக் குலைப்பதற்கு இந்தியப் படைகளை உபயோகிப்பதோடு, உலகில் எங்கே சுதந்திரக் கிளர்ச்சி நடந்தாலும் அதை அடக்க இப்படைகளை உபயோகிப்பது பிரிட்டிஷார் நம் தேசத்துக்கு இழைக்கும் பெருத்த துரோகமுமாகும். இதைத் தடுப்பதற்கு நாடெங்கும் கூக்குரலிட்டும் செவிடன் காதில் ஊதிய சங்காக இருக்கிறது.

இந்திய தேசீயக் கிளர்ச்சிக்குத்தான் பிரிட்டிஷார் எதிரி என்றால் ஆசியாவிலுள்ள இதர அடிமை நாடுகளின் விடுதலைக்கும் இவர்கள் எதிரியாக இருக்க வேண்டிய அவசியம் என்ன என்பது பரிசீலனை செய்யத்தக்கது. ஐரோப்பாவில் பிரான்ஸ், ஹாலந்து இந்நாடுகளின் தொடர்பைப் பிரிட்டன் எதிர்பார்த்து நிற்கிறது. ருஷ்யாவுக்கு எதிரிடையாக மேற்கு ஐரோப்பாவிலுள்ள நாடுகளை ஒன்று திரட்டி ஒரு முனை ஏற்படுத்தி வருகிறது. மேலும் தூரக்கிழக்கிலுள்ள இந்தோசைனா, இந்தோனேஷியா போன்ற பிரதேசங்களெல்லாம் சுதந்தர நாடுகளாகி விட்டால், அத் தீ தூரக்கிழக்கு முழுமையும் பரவி, "வெள்ளையனே ஆசியாவை விட்டு வெளியேறு" என்ற கிளர்ச்சி பலத்துவிடும். இந்தியாவிலும் பர்மா முதலிய காலனிகளிலும் பிரிட்டிஷ் ஆதிக்யத்திற்குச் சாவு மணி அடித்தாகிவிடும். எனவே வெள்ளையர்களெல்லாம் ஒன்று சேர்ந்து ஒருவருக்கொருவர் ஐக்யபாவத்துடனிருந்தால்தான் அடிமை நாடுகளை அடக்கி ஆள முடியும். இம்மனோபாவம்தான் பிரிட்டிஷார் இக்கிளர்ச்சிகளில் நேரடியாகத் தலையிடுவதின் காரணம். மேலும் இந்தோனேஷியாவிலுள்ள எண்ணெய்க் கிணறுகளிலிருந்து அடிக்கப்படும் கொள்ளையில் பிரிட்டனுக்கும் பெரும் பங்குண்டு. இந்தோனேஷியா சுதந்தர தேசமாய்விட்டால் தூரக்கிழக்கில் பிரிட்டிஷ் ஆதிக்யத்திற்கு உற்ற துணை அற்றுவிடும். வெள்ளையர்கள் கொஞ்சம் கொஞ்சமாக வெளியேற வேண்டியதே. இதை எல்லாம் உணர்ந்துதான் பிரிட்டன் சுதந்தரத் தீ எங்கு மூண்டாலும் அதை அணைக்கத் தன் துருப்புக்களை உபயோகப் படுத்துகிறது. கொலைபாதகத்வம் இது என்று பிறர் சொன்னாலென்ன? பிறகு பிரசாரத்தினால், வாய்ப்பந்தலினால் அதை அவர்கள் சமாளித்து விடுவார்கள்.

இது இவ்வாறிருக்க, இந்தியாவிலும் நிலைமை கொஞ்சம் பிரிட்டிஷாருக்குக் கடினமாகத்தான் இருந்துவருகிறது. யுத்தம் என்ற பூச்சாண்டியினால் தேசீயத் தலைவர்கள் சிறையிலடைக்கப்பட்டிருந்தனர். இன்று அவர்கள் வெளிவந்து பிரிட்டிஷாரின் சூழ்ச்சிகளைப் பகிரங்கமாகப் பிரகடனம் செய்யவே பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் கலகலத்துவருகிறது. மக்களின் எழுச்சி

கங்குகரையற்றுப் பொங்கி வருகிறது. இந்தியாவின விடுதலைக்காகப்பாடுபட்ட இந்திய தேசிய ராணுவத்தில் சேர்ந்தவர் களைச் சிறையிலடைத்து விசாரணைக்குக் கொண்டுவந்திருக்கிருர்கள். பிரிட்டிஷ் கவர்மெண்டார்மீது மக்களிடையே மனக் கொதிப்பு ஏற்பட்டுக் கிடக்கிறது. மறுபடியும் அடக்குமுறையைக் கையாளப் பிரிட்டிஷ் கவர்மெண்டார் யோசிப்பதாகத் தெரிகிறது. மதியீனத்தினல் அப்படி ஏதேனும் செய்வார்களாளுல் இந்தியா கொந்தளித்து எழும். சுதந்திரக் கொலை பாதகத்தில் மற்ருென்று விளங்கப் பிரிட்டிஷார் சந்தர்ப்பம் தேடிக்கொண்டவர்களாவார்கள். செய்த கொலை பாதகத்திற்குப் பிராயச்சித்தம் தேடுவதே மேல். காலம் இனி பொறுக்காது. பிரிட்டிஷார் இதை உணர்ந்து இந்திய மக்களின் கோரிக்கைக்கு முட்டுக்கட்டையிடாமல் இணங்குவதே மேல். இல்லையேல் இந்தியாவில் அடாமிக் பாமைக்காட்டிலும் சக்திவாய்ந்த சுதந்திர பாம வெடிக்கும். அதன் பிறகு வெள்ளைப் பூண்டு இந்தியாவில் முளைக்குமா என்பது சந்தேகம்தான்.

விமர்சனம்

வீட்டு வைத்தியர்

தி. சே. சௌ. ராஜன்

கலைமகள் பிரசுரம், சென்னை. விலை ரூ. 7

வீட்டு வைத்தியர் என்னும் பெயர்பெற்ற இச் சிறு புத்தகம் ஓர் அரிய வைத்திய நூல் என்று அழைக்கப்படவேண்டும். ஏனெனில் அது வியாதிகளின் சூசகங்கள், அவைகளைக் கண்டுகொள்ளும் முறை, சிகிச்சை, ஆகாரம்—இவைகளைத் தெளிவுறக் குறிக்கின்றது.

தமிழ் மொழியில் இத்தகைய புத்தகம் நெடுங்காலத் தேவை. இப்பொழுதுதான் முதன் முதலாக வெளியிடப்பட்டுள்ளது.

புத்தகத்தில் கண்டுள்ள அம்சங்களும் விஷய விளக்கமும் தனிப் பெருமை வாய்ந்தவை. ஆசிரியரின் பலதரப்பட்ட அகன்ற வைத்திய அனுபவங்களைக்கொண்டு நோய் வாய்ப்பட்டவர்களிடம் காணப்படும் குறைபாடுகளை நன்குணர்ந்து எழுதப்பட்டிருக்கிறது இந்நூல்.

இப் புத்தகத்தினும் பன்மடங்கு பெரிதான அரிய நூல்களில் காணப்படும் மிகவும் உபயோகமான விஷயங்கள் அனைத்தும் இச்சிறிய புத்தகத்தில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. உபயோகமில்லாத எந்த விஷயத்தையும் இதில்காணமுடியாது.

ஆசிரியர் அலோபதிக் மருந்துகள், இஞ்சக்ஷன், எனிமா முதலியவைகளை அடிக்கடி குறிப்பிடுகிருர். இவைகளைக் கையாளுவதில் மிக்க சாமர்த்தியமும் கைத்திறனும் தேவை. கிராமவாசிகள் இவைகளைத் திறனுடன் கையாண்டு தாங்களே சிகிச்சை பெற முடியுமா என்பது விவாதத்திற்குரிய விஷயம். வைத்திய முறையின் உடற்கூறு நூலின் கோட்பாடுகளை அறியாத ஒருவர் வியாதி என்ன என்று தெளிவுறக் கண்டுகொள்வது மிகக் கடினம் என்பதை மறுக்கமுடியாது. ஓர் அளவுக்கப்பால் அவரால் இத்தகைய புத்தக உதவியைக் கொண்டே சிகிச்சை செய்துகொள்ள முடியுமா என்பதும் பெரும் பிரச்னைதான். ஆனல் இத்தகைய நூல்கள் இதைச் சமாளிக்க முயலுவதும் உண்மை. குறிப்பிட்ட வரம்பிற்குட்பட்டு இப் புத்தகம் மிகவும் போற்றத்தக்கதாக அமைந்திருக்கிறது.

ஆசிரியருடன் சிற்சில சிகிச்சை முறையிலோ, உபயோகப்படுத்தவேண்டிய மருந்து வகைகளிலோ அபிப்பிராயபேதம் இருக்கக்கூடும். அது எப்படியிருப்பினும் நோயாளிகளுக்கு இப்புத்தகம் மிகவும் பயன்தரக்கூடியது என்பதில் ஐயமில்லை.

குடும்ப வைத்தியப் புத்தகமாக எழுதப்பட்டிருப்பினும், நர்ஸுகள், சுகாதாரப் பார்வையாளர்கள் (Health Visitors), சித்த, ஆயுர்வேத வைத்தியர்கள் மேல்நாட்டுச் சாஸ்திரீய முறையை அறியவும், அதன்படி சிகிச்சை செய்யவும் தெரிந்துகொள்வதற்கு இது ஒப்புயர்வற்ற புத்தகமாகும். இவர்களுக்கும் இது பெரும் பயனளிக்கக் கூடியது.

முகவுரையில் ராஜாஜி பொருத்தமாகக் கூறியபடி இப்புத்தகம் சரியான வகையில் உபயோகப்படுத்தப்படுமானல் மிக்க பயனளிக்கும். அத்யாபத்தான நோயைக் கவனிக்க டாக்டர் வர நேரமாகும்பொழுதும், உயிர் கால அளவைப் பொறுத்து ஊசலாடு கையிலும் இப்புத்தகம் சமயசஞ்சீவியாகும்.

புத்தகத்திலுள்ள விஷயங்கள் வாசிப்பதற்கு மிக்வும் ருசிகரமாயிருப்பதோடு, எல்லா அம்சங்களையும் சாஸ்திரோக்தமாய் எடுத்துரைப்பதாயும் அமைந்துள்ளன. இது ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டிய நூல்.

எம். கே. சுப்பிரமணியம்

கதம்பம்

மூன்றாவது உலக மகாயுத்தம்!

இரண்டாவது மகாயுத்தமே இன்னும் முடிவாகவில்லை, அதற்குள் மற்றொரு யுத்தமா, அட கண்ணில்லாக் கடவுளே என வினவலாம். பெரியார்கள் பலர் மூன்றாவது மகாயுத்தம் நடைபெறுவதற்குப் பிரசாரம் செய்வதைக் கவனித்தால் உண்மை விளங்கும்.

"இப்பொழுது உலகமானது கொந்தளிப்பான அபாயமான நிலைமையிலிருக்கிறது. நேச தேசங்களுக்குள் ஒற்றுமையில்லை. அதற்கு எதிரான நிலைமையைக் காண்கிறோம். மூன்றாவது மகாயுத்தம் மனித வர்க்கத்தையே அழித்துவிடும்"—இது ஈடன் துரையவர்களின் விளக்கம்.

ருஷ்ய பத்திரிகை Red Star எழுதியுள்ளதைக் கூர்ந்து கவனிப்போம். "ருஷ்ய வீரர்கள் தங்கள் ஆயுதங்களைத் துருப்பிடிக்க விடாமல் பாதுகாக்கவேண்டும். படை கலைப்பு என்ற எண்ணத்தைக் கொள்ளவே கூடாது."

இனி அமெரிக்க மாமா அலறுவதைக் கவனிப்போம். "பயங்கரமான புதுப் புது ஆயுதங்களைத் தயாரித்தாலே நாம் சமாதானத்தை நிலைநிறுத்த முடியும். ஒவ்வொரு யுத்தம் முடிந்ததும் நாம் தூங்கிவிட்டோம். இப்பொழுதும் அப்படிச்செய்தால் தொலைந்தோம்." அமெரிக்க தளபதி ஜார்ஜ் மார்ஷல் இவ்வாறு கர்ஜிக்கின்றார். அவர் கிடக்கிறார் 'மோட்டா பேர்வழி,' பிதற்றுகிறார் என்று நாம் எண்ணம் கொள்ளாமலிருக்க ஜனாதிபதி ட்ரூமன் துரை அவர்களே திருவாய் மலர்ந்தருளியுள்ளார். "எல்லோரும் கட்டாய ராணுவப் பயிற்சி பெறவேண்டும். சீர்கேடான நிலைமையில் உலகமிருக்கையில் அப்படிச் செய்யாவிடில் அழிவை நாம் தேடவேண்டிவரும். பலத்தைக்கொண்டே இனி உலகில் சமாதானத்தைக் காண முடியும்."

ஆகவே அடுத்த யுத்தத்தின் வரவை நாம் எதிர்பார்ப்பது நம்முடைய கடமையாகும். அடுத்த யுத்தமானது இப்பொழுது உள்ள நேசதேசங்களுக்குள்ளேயேதான் நடக்கலாமெனப் பிரபல யுத்த ஜோஸ்ய நிபுணர்கள் கூறுகின்றார்கள். அவர்கள் கூற்றுக்கு ஆதாரமில்லாமலில்லை. பொது எதிரியான ஜெர்மனியை ஒழிக்க நேசதேசங்கள் தற்காலிகமாக ஒன்று சேர்ந்ததேயொழிய ஒற்றுமை மனப்பான்மை கொண்டல்ல. சமீபத்தில் லண்டனில் நடந்த மகாநாட்டில் மூன்று தேச ராஜ தந்திரிகளும் ஒருவருக்கொருவர் கேவலமாகத் தாக்கிக்கொண்டார்கள். பேச்சில்தான்! அது போதாதா?! லண்டன் மகாநாடு முறிந்ததில் ஆச்சரியமென்ன?

வெண்டல் வில்கி என்ற அறிவாளி "ஓர் உலகம்" என்று புத்தகம் எழுதி மறைந்தார். இப்பொழுது திரிமூர்த்திகளான ருஷ்யாவும், பிரிட்டனும், அமெரிக்காவும் "தங்கள் தங்கள் தனி உலகத்தையும் ஆதிக்கத்தை"யுமே அதிகமாக வற்புறுத்துகின்றன. ஐரோப்பாவில் பாதி ருஷ்யாவின் ஆதிக்கத்தில் உள்ளது. மத்திய கிழக்கிலும் தூரக்கிழக்கிலும் ஆதிக்கம் பெறவும் ருஷ்யா முயல்கின்றது. சைனாவில் நடக்கும் உள்நாட்டுக் கலகம் ருஷ்யாவும், அமெரிக்காவும் நடத்திவைக்கும் ஆரம்பப் போர் என்பதாகப் பலர் கருதுகின்றனர்.

போதாக் குறைக்கு எந்த ராகுகால வேளையில் அணு குண்டை அமெரிக்கா தயாரித்ததோ தெரியவில்லை. அந்த அணு குண்டே அடுத்த யுத்தத்துக்குக் காரணமாகலாம் என்றுகூடச் சொல்லலாம். அதன் ரகசியத்தை யாருக்கும் வெளியிட அமெரிக்காவுக்கு மனமில்லை. பிரிட்டனோ தனக்குமட்டும் சொல்லித் தன்னை ஆட்கொள்ள வேண்டுமென அமெரிக்க மாமாவைக் கெஞ்சுகிறது. ஒருவருக்கொருவர் சந்தேகம். எல்லாவற்றிலும் வேற்றுமை மனப்பான்மை. மூவரும் முதன்மையான வல்லரசாக விளங்கப் போட்டியிடுகின்றனர். முடிவு தெளிவாக வேண்டாமா? ஆகவே மூன்றாவது மகாயுத்தத்தை அதி விரைவில் எதிர்பாருங்கள் என்று விஷயம் அறிந்தோர் அறிவிப்பதில் தவறில்லை.

அவன் தம்பி அங்கதன்!

"நம்ம ஆளு அட்லிதுரை வந்துட்டாரு. இனிமே வாலை சுருட்டி மடிலே வை" என்று பெருமையுடன் பேசி, போலீஸ்காரன் கன்னத்தில் சுளீரென்று அறை கொடுத்த அண்ணாத்தையைப் பற்றிப் பத்திரிகையில் படித்தோமல்லவா? அந்த அட்லி, சர்ச்சில், அமெரி எல்லோரும் ஒரே திருக் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள்தான் என்பது இப்பொழுது விளங்கிவிட்டது. ஒரு கூடை செங்கல்லும் பிடாரி!

தொழிற்கட்சி பதவிக்கு வந்தவுடன் இந்தியாவின் தலையெழுத்து மாற்றி எழுதப் படுமெனச் சில முட்டாள்கள் நம்பினார்கள் அல்லவா? அவர்களுக்கு மண்டையில் அடி!

இந்தியா விஷயமாக அமெரி பச்சைப் புளுகுகளாகப் பேசினார். அட்லி வெள்ளைப் புளுகளாக அளக்கின்றார்.

சர்ச்சில் பட்டவர்த்தனமாகவும் பிடிவாதமாகவும் இந்தியாவுக்குச் சுதந்திரம்கொடுக்க மறுத்தார். அட்லி மச மசவென்று குட்டை குழப்பி, முடியாது என்று சொல்லுகின்றார்.

சமீபத்தில் லண்டன் மேயர் வழக்க விருந்தளித்தார். அட்லிதுரை வாயைப் பிளந்துவிட்டார்!

"நமது குடியேற்ற நாடுகள், சாம்ராஜ்யப் பகுதிகள் இவைகளெல்லாம் ஜனநாயக அரசியல் துறையில் வெகு முன்னேற்றமடைந்துள்ளன" என்று ஒரு போடு போட்டார். இந்தியாவைப்பற்றியும் குறிப்பிட்டார்.

"1942ஆம் வருஷத்தில் கிரிப்ஸ் திட்டகால முதல் சுதந்திரம் இந்தியாவின் காலடியில் கிடக்கின்றது. எடுத்துக்கொள், எடுத்துக்கொள் என்று மன்றாடுகிறோம்"!

இன்னும் அட்லியின் அட்டகாசத்தைக் கவனிப்போம்.

"1921ஆம் வருஷமுதல் பொருளாதாரத் துறையில் சர்வ சுதந்திரம் இந்தியாவுக்கு, நாங்கள் தலையிடுவதில்லை"

கோடி கோடியாக இந்தியாவின் பணத்தைச் சீமையில் தேக்கி வைத்துக்கொண்டு நேர்மையற்ற முறையில் அத்தேக்கத்தினின்றும் விடுவிக்கப் பிரிட்டிஷ் அரசாங்கம் மறுத்த விஷயம் மறக்க முடியுமா? ரூபாயின் மதிப்பைத் தங்கத்துடன் இணைத்து நஷ்டம் விளைவித்துள்ள படலம் நினைவில்லையா? அமெரிக்காவில் சாமான்கள் வாங்குவதில் தடைகள் விதிப்பது யார்? வைசிராய் யார்? இந்தியர்களால் நியமிக்கப்பட்டவரா? அவருடைய சர்வாதிகாரம் நாளுக்கு நாள் அந்த ஹிட்லரைவிடப் பெருகி விடுகிறதே, அதற்குப் பொறுப்பாளி யார்?

முடிவாகச் சொல்லிவிட்டார் அட்லி. "சகல சமூகத்தாரிடமும் ஒற்றுமை ஏற்படாவிடில் நாங்கள் ஒன்றும் செய்வதற்கில்லை. வேற்றுமைகளிடையே ஜனநாயக அரசியல் செழிக்காது"!

ஜன நாயகச் செடியை வளரவிடாமல் அதன் வேரை நீர் கல்லிக்கொண்டிருந்தால் அது எப்படி செழித்து வளரும்?

போகட்டும், உமக்கு எங்கள் வந்தனம். நீரும் அவன் தம்பி அங்கதன் என்று நிரூபித்தது எங்கள் பாக்யம். இனி நம்பி மோசம் போகமாட்டோம்!

ஆல்போஸாங்: இது **A. B. C. D.** வைடமின்கள் அடங்கிய ஒரு சிறந்த **(Tonic)** உணவு. சரீரத்திற்கு நல்ல போஷணை அளித்து இரத்தவிருத்தி செய்கிறது.

பொதுஜன வைத்ய உதவி (Peoples' Medical Service) இது 8 மருந்துகள் அடங்கிய ஔஷத நிலையம் தினசரி ஏற்படும் சகல நோய்களையும் நிவர்த்தி செய்யும்.

ஸ்போலாக்ஸ்: வழக்கமான மலபந்தத்தையும் மூல வியாதியையும் நிவர்த்தி செய்கிறது.

ரிபாண்டோ: காயங்கள், புண்கள், சொறிசிரங்கு, கடி முதலிய வியாதிகளைப் போக்கும் களிம்பு.

Head Office:- **J. & J. டிசேன்,** ரெஸிடென்ஸி ரோட், ஹைதராபாத், (Dn.)

தஞ்சை தென் ஆற்காடு டிப்போ:—
பெரியதெரு, காந்திபார்க் வடக்கு, கும்பகோணம் (S.I.Ry.)

அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்

ராமய்யா

"பேசிப் பேசித் தாளும் வலியெடுத்து விட்டது" என்று யாராகிலும் சொன்னால் அதைக் கேட்டு அம்மாஞ்சி "அதிகமாய்ப் பேசாமல் நன்றாய்க் காது கொடுத்துக் கேட்பவன் தான் சமர்த்தன்" என்று சொல்லுவான். அம்மாஞ்சியுடன் அதிகமாகப் பழகின எனக்கு இந்த வாக்கியத்தின் நீதி நன்றாகத் தெரியும். நன்றாகப் பேசத் தெரிவதைவிட நன்றாகக் கேட்கத் தெரிவது கஷ்டமான காரியம். பேசுபவனைப் பேசவிட்டு, அவனுடைய சமத்காரத்தை வெளிப்படுத்தவோ அல்லது அசட்டுத்தனத்தைத் தோண்டி யெடுக்கவோ, இரண்டுக்கும் சாமர்த்தியம் வேண்டும். பிறகு ஆணியடித்த மாதிரி இரண்டொரு வார்த்தைகள் சொல்லி அவனை நிறுத்தவும் செய்யலாம். மனித வாழ்க்கையில் கற்றுக் கொள்ளவேண்டிய சங்கதிகள் பலவகைகளைக் கேள்வியிலேயே கற்கலாம். ரசிகத் தன்மையை விருத்திசெய்வதற்கு இலவசமான வழி, பலவித மனிதர்களுடன் பழகுவதேயாகும். பிச்சைக்காரன் பணக்காரன் என்று பாராமலும், படித்தவன் படிக்காதவன், உத்தியோகஸ்தன் ஊர் சுற்றுபவன், சாத்திரம் படித்தவன் சட்டம் செலுத்துபவன், சகலவித வர்க்கத்தினருடனும் சமத்துவம் பாராட்டிச் செவிகொடுத்துச் சொல்வதைக் கேட்டால் எவ்வளவு விஷயங்கள் அறியலாம் தெரியுமா?

இரண்டொரு தினங்களில் நடந்த சம்பவங்களைப்பற்றி இப்பொழுது எழுதுகிறேன், கவனியுங்கள். ஒருநாள் காலையில் நானும் அம்மாஞ்சியும் வீற்றிருக்கும்போது ஒரு நண்பர் வந்தார். அவர் நல்ல ரசிகர், சட்டம் படித்தவர், சங்கீத அபிமானி. ஒரு சபைக்குக் காரியதரிசி. சபையின் ஆதீனத்தில் சில கச்சேரிகளை நடத்துவதற்காகப் பிரயத்தனம் செய்துகொண்டிருந்தார். நண்பருடைய பெயர் குப்பு என்று வைத்துக்கொள்ளுவோம். அம்மாஞ்சிக்கும் அவருக்கும் நடந்த சம்பாஷணை பின்வருமாறு:

அம்: என்ன குப்பு, உன்னுடைய சபைக் காரியங்களெல்லாம் எப்படி இருக்கின்றன?

குப்: அந்த வெட்கக்கேட்டை ஏன் கேட்கிறாய்? கச்சேரிகள் நடத்துவதற்காக வித்வான்களைப் போய்க் கூப்பிட்டால் நம்முடைய மானம் போகிற மாதிரியிருக்கிறது. பெரிய வித்வான் ஒருவரிடம் போனேன்; அவர் ஒரேயடியாய், தமக்கு மாத்திரம் அறுநூறு ரூபாய் வேண்டுமென்று கேட்டார். ஏனையா, உமக்குமாத்திரம் இவ்வளவு பெரிய தொகை கொடுக்கும்படி கேட்கிறீர் என்று கேட்டதற்கு, தமக்குப் பம்பாயிலும் டில்லியிலும் இதற்கு அதிகமாகக் கொடுத்து உபசாரம் சொல்லி அழைத்திருப்பதாகவும், இதற்குக் குறைந்தால் கட்டாது என்றும் சொல்லிவிட்டார். பிறகு ஒரு நண்பர் மூலமாக இந்த விபரீத ரேட்டுக்குக் காரணம் என்னவென்று விசாரிக்கச் சொன்னதில் விளங்கியது என்ன தெரியுமோ? அந்த வெட்கக் கேட்டையும் சொல்லவேண்டுமா?

அம்: என்ன குப்பு, சொல்லேன், கேட்போம்!

குப்: சொல்லுவதற்கே எனக்கு வெட்கமாயிருக்கிறது. ஆனாலும், ரகசியமாக உன் காதில் போடுகிறேன். எங்க சபை தலைவர் (பிரஸிடண்ட்) இருக்கிறாரே, அவர் பிள்ளைக்குக் கலியாணம் செய்தார், சமீபத்தில். அந்தக் கலியாணத்தில் நம்முடைய வித்வானுடைய கச்சேரியை ஏற்பாடு செய்யாமல் வேறு யாரோ ஒருவருடைய கச்சேரி நடந்துவிட்டதாம். "நீங்கள் எல்லாரும் சேர்ந்து அந்தமாதிரி என்னை அவமரியாதை செய்தபிறகு, நான் எதற்காக உமக்கு ரேட்டைக் குறைக்க வேண்டும்" என்கிறாராம் வித்வான்! நன்றாயிருக்கோ இல்லையோ நியாயம்?

அம்: வித்வான் சொல்லுவதும் நியாயம் தான் என்று தோன்றுகிறது!

குப்: பேஷ், பேஷ்! உன்னிடத்தில் நான் இதைச் சொல்லி, குறையைத் தீர்த்துக் கொள்ள வந்தால், நீ அவர் பக்கம் பேசுகிருயே!

அம்: உன் குறையிருக்கட்டும், குப்பு! உன்னுடைய ஆதரவு வேண்டுமென்று அவர் ரேட்டைக் குறைத்துச் சொன்னுல், அதனுல் அவருக்கு ஏதாவது சமயோசிதமாக அனுகூலம் கிடைத்தாலல்லவோ திருப்தியாயிருக்கும்? சங்கடத்தில் "நாராயணு" "நாராயணு" என்று முறையிட்ட நம்பூதிரி, சங்கடம் தீர்ந்தபிறகு "நாராயணு, கூராயணு" என்பதுபோல், கச்சேரி சிறப்பாக நடைபெறவேண்டுமானுல் வித்வான் வேண்டும், பாக்கி நாளில் வேண்டாம், என்று ஒதுக்கி வைத்தால், அவருக்கும் அகங்காரம் வருமோ, வராதோ? சகஜந்தானே!

குப்: எங்கேயோநடந்த சம்பவத்தை வைத்துக்கொண்டு, சபை மேலே கோபம் காட்டினுல் நியாயமாகுமோ?

அம்: 'சபை' யென்ருல் என்ன? மனுஷக் கூட்டம்தானே? பத்துப்பேர் சேர்ந்தால் ஒரு 'சபை'. பத்துப்பேரும் ஒரு விஷயத்தில் ஏகோபித்து ஈடுபட்டுச் செய்வது சபையின் காரியம். சபையின் கொள்கை யென்னவோ, அதையே சபையோர் ஒவ்வொருவரும் அங்கீகரித்து, கொள்கைகளின் நெறி தவருது நடந்துகொள்ளவேண்டும். சபையின் சார்பு ஒரு கொள்கை, தம் சார்பு ஒரு கொள்கை யென்று வைத்துக்கொண்டால், சபைக்காகத் தாமும் கஷ்டப்பட வேண்டி வரும், தமக்காகச் சபையும் கஷ்டப்பட வேண்டி வரும்! இதுதான் உலக ரீதி.

குப்: நீ சொல்வது பெரிய வேதாந்தப் பேச்சாயிருக்கிறது! பத்துப்பேர் சேர்ந்து நடத்தும் காரியத்தில், ஒவ்வொருவருடைய அந்தரங்க மனப்போக்கும் லயித்து இருக்க வேண்டும் என்ருல் அது நடவாத விஷயம் அல்லவா?

அம்: அல்ல, அந்தக் காரியம் சம்பந்தப்பட்ட வரையில் லயித்துத்தானிருக்க வேண்டும். அப்படியிருப்பது கஷ்டமாயிருந்தால் சபையிலிருந்து விலகிக்கொள்ள வேண்டும். எந்தக் காரியத்துக்கும் முன் வந்து நிற்பவன் மேலேதான் பாரம் விழும். அந்தப் பாரத்தைத் தாங்கச் சக்தியுள்ளவன் தான் முன்வரலாம். பேசுவதற்கும், கௌரவம் வகிப்பதற்கும் முந்திக்கொண்டு, விவகாரத்தில் தம்மிஷ்டப்படியே நடந்து கொள்ள மனங்கொண்டவர்கள் அசந்தர்ப்ப சச்சரவுக்குத்தான் ஹேதுவாயிருப்பார்கள்.

* * * *

குப்பு வெளியே சென்ருரோ இல்லையோ, இன்னெருவர் உள்ளே நுழைந்தார். அவருடைய பெயர் ஊர் எமக்குத் தெரியாது. நாமகார்த்தமாகச் சுப்பு என்று வைத்துக் கொள்ளுவோம்!

சுப்: நீங்கள் தானே, அம்மாஞ்சி? "காவேரி" பத்திரிகையிலே எழுதுகிறீரே நீங்கள்தானே?

அம்: எழுதுவது இவர், நானல்ல. தப்பு தண்டா பேர்வழி நானல்ல. ஆனுல் அம்மாஞ்சி நான்தான். என்ன விசேஷம் சொல்லுங்கள்.

சுப்: என் மனதில் ஒரு பெரிய குறையிருக்கிறது. அதை உம்மிடத்தில் சொல்லித் தீர்த்துக்கொள்ளலாம் என்றுதான் வந்தேன். தியாகப்பிரும்ம ஆராதனை சபை யென்று ஒன்று இருக்கிறதல்லவா? அந்தச் சபையார் சில வருஷங்களாக உற்சவத்தை நடத்தி வைத்துக்கொண்டிருக்கிருர்கள். அது உங்களுக்குத் தெரிந்திருக்கலாம்.

அம்: நேராகத்தெரியாது, கேள்வியுண்டு. நேராகப் போய் சுஸ்வரத்தைக் கேட்டதில்லை, ரேடியோ மூலம் அபஸ்வரத்தைக் கேட்டதுண்டு!

சுப்: ஹி, ஹி, ஹி, பேஷ்! ரொம்பசரி! நேரிடப்போனீராலுல் நல்ல சங்கீதம் கேட்பதுதவிர நல்ல சண்டையையும் பார்க்கலாம். தஞ்சாவூர் ஜில்லா கலியாணங்களில் சம்பந்திகள், தம்முடைய பண்ணையாட்களுக்குச் சரியாக மரியாதை செய்யவில்லை யென்று முரண்டிக்கொள்வார்களே அது போலே சங்கீத வித்வான்கள் தம்முடைய சிப்பந்திகளுக்குச் சரியான சந்தர்ப்பம் கொடுக்கவில்லை என்று கரடிக்கத்தலாகக் கத்துவதும், சுற்றுப்பக்கத்திலுள்ளவர்கள் எல்லோரும் அவர்கள் காலைப் பிடிப்பதும் வெகு வேடிக்கையாயிருக்கும்!

அம்: இதெல்லாம்கூடக் கேள்வியுண்டு. அய்யர்வாள் சன்னிதியில் பாடல் மாத்திரம் போதுமா! ஆடலும் வேண்டாமா?

சுப்: ஆடல் தான். எல்லாம் ஆடலாகவே யிருக்கிறது. கோஷம், கரகோஷம் இவையிரண்டும்தான் அதிகம். இது நிற்க. தியாகய்யர்வாளுடைய கீர்த்தனைகளை யெல்லாம் பங்கிடுசெய்து புஸ்தகமாக அச்சிடப்போவதாக ஓர் இயக்கம் உண்டாயிற்று. அது 1947-ஆம் வருஷம் அய்யர்வாளுடை சமாதி கழிந்த நூற்ருண்டில் பூர்த்திசெய்யவேண்டும் என்று தீர்மானித்தார்கள். இன்னும்

பதினான்கு மாதம்கூட இல்லையே! இதற்குள் இந்தப்பெரிய காரியம் முடிவுபெறுமா! எப்படி, என்று விளங்கவில்லையே?

அம்: எனக்கும் விளங்கவில்லை.

சுப்: இந்தக் காரியத்தில் மிகவும் ஊக்கத்துடன் ஈடுபட்ட ஒரு பெரியவரிடத்தில் சுமார் அறுநூறு உருப்படிகள் சப்தார்த்தத்துடன், ஸ்வரப்படுத்தி, தெலுங்கிலும், தமிழிலும் தயாராகியிருக்கின்றன. அந்தச் சபையார் அதை அங்கீகரித்துக்கொண்டால் ஒரு பெரிய காரியம் வெகு சீக்கிரம் கைகூடலாம். இந்த விஷயத்தை நீங்கள் பிரசாரப்படுத்தலாகாதா?

அம்: பிரசாரப்படுத்தக் கூடியவன் நானல்ல,(என்னைக்காட்டி) இவர்தான். இவர் பெயர் அதிகப்பிரசங்கி ராமய்யா என்பார்கள். ஆனால் ஒன்று சொல்லுகிறேன். அய்யர்வாளே அந்தச் சபையார் கூட்டத்தில் நுழையப் பயப்படுகிறீரே! உங்களுக்கு மாத்திரம் என்ன அவ்வளவு தைரியம்?

சுப்: சிவ, சிவ! அதென்ன அப்படிச் சொல்லுகிறீர்.

அம்: ஒரு கதை சொல்லுகிறேன் கவனியுங்கள். அமெரிக்காவில் கிறிஸ்தவர் தேவாலயங்களில் கறுப்பு தேவாலயம், வெளுப்பு தேவாலயம் என்ற இரண்டு ரகம் உண்டு. வெளுப்பு தேவாலயத்தில் வெள்ளையர்கள் மாத்திரமே புகுதலாம். கறுப்பு தேவாலயங்கள் நீக்ரோ ஜாதியருக்கே பிரத்தியேகமாகக் கட்டப்பட்டவை. இது நிற்க, ஒருஞாயிற்றுக்கிழமை, ஒரு வெளுப்பு தேவாலயத்துக்குள் நூற்றுக் கணக்கான வெள்ளையர்கள் சென்றனர். அப்பொழுது ஒரு நீக்ரோவும் உள்ளே செல்ல முயன்றான். அவன் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலைக்குச்சென்று பெரிய பரீக்ஷைகள் தேறின சமர்த்தன்; தத்வஞானி; ஒரு நீக்ரோ பிரபுவின் குமாரன். அவன் பெயர் "ராஸ்டஸ்". உள்ளே செல்லுமுன் தேவாலயத்தின் பாதிரியான வெள்ளையர் ராஸ்டஸை நிறுத்தி, "தம்பி, நீ உள்ளே பிரவேசிக்கலாகாது" என்றார். ராஸ்டஸ் "ஏன் இப்படிச் சொல்லுகிறீர்! நான் கிறிஸ்தவன் தானே! இது தேவாலயம் தானே! யாவர்க்கும் உரிய ஸ்தலம் அல்லவா? என்னை நிறுத்த உமக்கென்ன அதிகாரம்" என்றான். தத்துவ ஞானிபோல் பேசின ராஸ்டஸைப் பார்த்து, பாதிரி சிறிது சஞ்சலங்கொண்டு, சமயோசிதமாக, "நீ சொல்வதெல்லாம் சரி! ஆனால் உன்னை உள்ளே விடக்கூடாது என்று கடவுள் என்னிடம் நேற்றிரவு கனவில் சொன்னார். ஆதலால் ஓர் உபாயம் சொல்லுகிறேன், கேள்! இன்றிரவு நீ கடவுளை நினைத்துக்கொண்டு நித்திரைக்குச் செல். கடவுள் உனக்குக் கனவில் பிரத்தியக்ஷமாவார். அப்பொழுது அவரைக் குறுக்கு விசாரணை செய்வாய்! ஏன் உன்னை இந்த தேவாலயத்தில் பிரவேசிக்கக்கூடாது என்ற கட்டளைக்குப் பதில் சொல்லுவார்" என்றார் ராஸ்டஸ் இதைக்கேட்டதும் திரும்பிவிட்டான். பத்துத்தினங்கள் கழிந்து கடைவீதியில் பாதிரியும் ராஸ்டஸும் திரும்பவும் சந்தித்தார்கள். அப்போது பாதிரியார்" "ஓய்! ராஸ்டஸ்! கடவுள் கனவில் என்ன சொன்னார்" எனவே, ராஸ்டஸ் பதில் சொன்னான். "பாதிரியாரே! கடவுள் என்ன சொன்னார் தெரியுமா! அந்தத் தேவாலயம் ஸ்தாபித்து இருபது வருஷங்களாயின. இந்த இருபது வருஷங்களாக நானே அதற்குள் செல்ல முடியவில்லையே! நீ மாத்திரம் ஏன் வீணாக வருந்துகிறாய்? எனக்கில்லாத இடத்தில் உனக்கென்ன வேலை, என்றார்" இதைக் கேட்டதும் பாதிரி தலை குனிந்தவண்ணம் நழுவிவிட்டார். அதுபோலவே, தியாகப்

மாதவிடாய் நின்றிருந்தால்

குமாரி (TABS) உபயோகித்தால் மீண்டும் ஏற்படுவதுடன் பிற்காலத்திலும் தொந்தரவு ஏற்படாது. தீங்கற்றது. விரைவில் பலன் தரும். விலை ரூ. 3. கடுமையானதற்கு ரூ. 5. கர்ப்பத்தடை 6 மாதங்களுக்கு ரூ. 4. (வி. பி. அணா 12 பிரத்யேகம்)

Mrs. P. DEVEE, F. D. S., (C. M.)
Tollygunge, Calcutta.

Available also from :—

(1) HARRY & SON, 93, China Bazar Road, Madras.

(2) RAJA MEDICAL HALL, 31, Dharmaraja St., Bangalore Contt.

(3) NATHAM & CO. Mattancheri, Cochin

(4) K. C. MATHEW & Co., Kozhancheri, Travancore.

பிரும்ம ஆராதனை சபையார் செய்யும் கோஷத்திலும் கர கோஷத்திலும் தியாகய்யரே திக்குமுக்கலாடித் திகைக்க, உமக்கும் எனக்கும் அங்கேசென்ருல்தண்டடி தடியடி தான் ஸ்வாமி! நன்ருய் ஞாபகம் வைத்துக் கொள்ளும்!

* * * *

மணி சுமார் ஐந்து, சாயங்காலம். அம்மாஞ்சியும் நானும் தோட்டத்தில் நாற்காலிகளில் அமர்ந்திருந்தோம். வழக்கம் போல் அம்மாஞ்சி வெற்றிலை சீவல் போட்டுக்கொண்டு கொனக்கோல் திர்மானங்களில் சிலவைகளை முனகிக்கொண்டிருந்தான். அந்தச் சமயத்தில் ஒரு அமெரிக்கா தேசத்து ராணுவ காப்டன் ஒருவன் உள்ளே வந்தான். என்னிடம் அவனுக்குச் சிறிது பரிச்சயம் உண்டு. நமது தேசத்து நாகரிகத்தை நன்ருக அறியவேண்டும் என்ற அவா அவனுக்குண்டு. ஆனல் நான் அவனுக்கு இடங்கொடுத்ததில்லை. பெவர்லி நிக்கல்ஸ் ஒருவன் ஒரு யுகத்துக்குப் போதுமல்லவா? ஆதலால் வழியில் செல்லும் சனியன்களை விலைக்கு வாங்குவதேன் என்பது போல், நமது வாழ்க்கை ஸ்திதியை அறிய வேண்டின் வெள்ளையர்களிடம் எனக்குப் பசையே கிடையாது. சாதி இரண்டொழிய வேறில்லை, மேதினியில் மேல்நாட்டார் பெரியோர், கீழ்நாட்டார் இழிகுலத்தோர், என்ற நீதியை நான் (அகௌரவமாக) அங்கீகரித்துக்கொண்டேன்! ஆதலால் காப்டன் வந்ததும் என் முகத்தில் சிறிது வெறுப்புத்தட்டியது. அம்மாஞ்சி கண் சைகை செய்து, மெல்ல, "அவன் வரட்டுமே, அவன் வாயைப் பிடுங்கி வயிற்றெரிச்சல் செய்யலாம்" என்று சொல்லி, காப்டினை அமரச் செய்தான்.

அம்: என்ன, கையில் "ஆனந்த விகடன் தீபாவளி மலரை" எடுத்து வந்திருக்கிறீர். உமக்குத் தமிழ் தெரியுமா?

காப்: படிக்கத் தெரியாது. படம் பார்ப்பேன். அதற்குத்தான் வாங்கினேன்.

அம்: பாஷை தெரியாமல் படத்தைப் பார்ப்பது மிகவும் விபரீதமான வழக்கமாச்சுதே?

காப்: ஆதலால்தான் இங்கு வந்தேன். இந்தப் படங்களைப் பார்த்து எனக்கு விஷயங்களைச் சொல்லுவீரென்று.

நான்: ஐயா! அந்தப் படங்களில் சிலவைகளுக்கு எமக்கே அர்த்தம் தெரியாது. உமக்கு எப்படிச் சொல்லமுடியும்? பழைய புராணங்களும் புதிய சித்திரங்களும் எங்களுக்கே தலை கிறுகிறு வென்கிறது. நீரும் வந்தீரா?

காப்: அது போகட்டும். ஒரு கேள்விக்குப் பதில் சொல்லவேண்டும். மேல் நாட்டாருடைய பத்திரிகைகளில்தான் அநேகவித பெண் உருவங்களின் சித்திரங்கள் பதிக்கப் படுகின்றன. உங்களுடைய பத்திரிகைகளிலும் இந்த வழக்கத்தைக் கைப்பற்றினீர்கள் போலிருக்கிறதே? இதுதான் புது நாகரிகமா? நீங்களும் "பெண் உருவமே கண் குளிர்ச்சி" என்பீர்களோ?

அம்: ஆம்! இதுதான் எங்களுடைய நவீன சம்பிரதாயம். எமக்குச் சம்மதமில்லாத காரியத்தைப் பிறர் செய்தால் நாங்கள் பார்த்துச் சந்தோஷிப்போம். எங்கள் வரையில் மிகவும் "வைஷ்ணவ"மாக இருப்போம்! படங்களில் உள்ள பெண் உருவங்கள் படங்கள் சம்பந்தப்பட்டவரையில் எங்களுக்குச் சம்மதம். நிஜ உருவில் பார்த்தால் கல்லைவிட்டு அடிப்போம்.

காப்: ஹி! ஹி! ஹி! ரொம்பசரி. இன்ஞெரு விஷயம். "வருங்கால நாட்டிய மணிகள்" என்ற படங்கள் இருக்கின்றனவே, எல்லாம் சின்ன குழந்தைகளாகவே இருக்கிருர்களே! உங்களுடைய சம்பிரதாயப்படி வயசுவந்த பெண்மணிகள் நாட்டியமாடவே மாட்டார்களோ?

அம்: ஆடுவார்கள்! ஆனல் தற்கால அனுசரணை எப்படியென்ருல் "குட்டியைக் கொண்டு கடல் ஆழம் பார்" என்ற பழமொழிப்படிதான். ஆடுவது என்பது ஏதோ ஒரு தமாஷாக இப்பொழுது தமிழ் நாட்டிலே பழக்கத்தில் இருந்துவருகிறது. சிறுசுகள் ஆடினல் வேடிக்கையாக இருக்கிறது. விஜாதியமாயிருக்காது என்ற கொள்கை. சிறுசுகள் பெரிசுகள் ஆய்விட்டால், கல்யாணம் கார்த்தி எல்லாம் பண்ணணும். ஆடிண்டேயிருந்தால் இதுக்கெல்லாம் சௌகரியப்பிசகாய்விடும். "வருங்கால நாட்டியமணிகள்" என்பதெல்லாம், சும்மா "ஆப்டிமிஸம்" (optimism) என்பீர்களே அவ்வளவுதான். வருங்காலம் வந்தபிறகு கவனிக்கவேண்டிய விஷயம் அது. ஆடலையே தொழிலாக எடுத்துக் கொண்ட பெண்கள்கூட, இருபது இருபத்தைந்து வயதிலேயே ரிடையர் செய்துவிட்டதுகள் பாவம். நாட்டியத்தினுடைய நிஜ சுவை என்னவென்றே ஜனங்களுக்குத் தெரியாது! அவர்களைச் சொல்லி என்ன லாபம், சட, பட, சட, படவென்று ஆடும் குழந்தைகளைப் பார்த்து பட, பட, பட,

படவென்று கைதட்ட ஏராளமா ஆட்கள் இருக்கின்றனர். அபினயம் என்ற வித்தையை மூட்டைகட்டிச் சேந்தியில் வைத்திருக்கிறோம். இப்பொழுது நடனம்தான் பிரதானம். உன்னைப்போன்ற ஆளுக்குக் குஷியாயிருக்கும்.

காப்: இந்திய உடைகள் என்கிற சித்திரங்கள் இருக்கின்றனவே, அவற்றைப் பார்த்தால், உங்களுடைய ஸ்திரீகள் எல்லாரும் பட்டுப் புடவைகள்தான் கட்டிக்கொள்ளுவார்கள் போலிருக்கிறதே.

அம்: ரொம்பசரி! ஆமாம்! ஐம்பது ரூபாய் சம்பாதிக்கும் குமாஸ்தாகூட, கடன் வாங்கியாவது பட்டுப் புடவைதான் எடுப்பான்! சென்னை ராஜதானியில், அதுவும் பிராமண வகுப்பிலே, நிலம் நீரை விற்றுக் கூடப் புடவைகளையும் ரவிக்கைகளையும் வாங்கிவிடுவோம்!

காப்: அப்படியிருந்தபோதிலும், ஸ்திரீகளுக்கு நீங்கள் ஜாஸ்தி மதிப்புக்கொடுப்பதில்லையென்று மாத்திரம் சொல்லுகிறார்களே, என்ன தவறு?

அம்: நன்றாயிருக்கிறது! உம்முடைய வாய்க்குச் சர்க்கரைதான் போடவேண்டும்! ஸ்திரீகளுக்கு நாங்கள் கொடுக்கிற மதிப்போ, ஸ்திரீகள் பட்டுச் சேலைகளுக்குக் கொடுக்கும் மதிப்போ, விஷயம் தெரிய வேண்டும் என்றால் ஒரு பாட்டுக் கச்சேரிக்குப் போய்ப்பாரும்!

காப்: அது போகட்டும், சில்பிகண்ட சிமான்கள் என்ற சித்திரங்களைப் பாருங்கள். எல்லாரும் என்னவோ ஒரு மாதிரி இருக்கிறார்களே!

அம்: ஒரு மாதிரியா! ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரிதானே இருக்கிறார்!

காப்: அதில்லை! எல்லாரும் என்னவோ கோபத்துடனும், துக்கத்துடனும் இருக்கிறார்களே!

அம்: எங்களுடைய பெரியமனுஷாள் எல்லாருமே கொஞ்சம் கடுகடுவென்றுதானிருப்பார்கள். ஜாஸ்தி சிரித்தால் ''என்னடா வெறும்மே பல்லைக்காட்டுறாய்'' என்பார்கள். யாராவது எங்களைப் பார்த்துட்டால், கடுகடுப்பு அதிகமாய்விடும். அந்தஸ்து அதிகமாக அதிகமாக எங்களுடைய முகக்குறியும் குறைந்துவிடும். நெற்றியைச் சுருக்குவது, புருவத்தைத் தூக்குவது உதட்டைப் பிதுக்குவது எல்லாம் எங்களுடைய பெரியவாளுக்குச் சுபாவமாயிருக்கும். எங்களவாளில் ஒருவர்கூட உங்களுடைய ப்ரெஸிடெண்ட் ட்ருமன் மாதிரி எப்போதும் சிரிச்சுண்டு இருக்கமாட்டா.

காப்: ஹி, ஹி பேஷ்—பேஷ் சரி. உங்களுடைய பிரசாரப் படங்கள்கூட கொஞ்சம் குயுக்தியாயிருக்கின்றனவே.

அம்: உதாரணம்?

காப்: பிருத்வி இன்ஷ்யூரன்ஸ் படம் பாருங்களேன். ஒரு சர்க்கஸ் குட்டி படம் போட்டு இன்ஷ்யூரன்ஸ் பிரசாரம் செய்கிறீர்களே!

அம்: அப்படியல்ல. பெரிய அபாயமான காரியங்களை இலவசமாய்ச் செய்துவிடுவோம். சின்ன சர்க்கஸ் வித்தையைக் கண்டால் நாங்கள் ஏகமாகப் பயப்படுவோம்! பத்துவயது குழந்தையை தன்னந்தனியே தைரியமாகப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிவிடுவோம். வண்டியும் காடியும் ஓடும் ரஸ்தாவில் குழந்தை தப்பித்துப் போய்வருவான். வீட்டுக்கு வந்து சின்ன டெனிஸ் பால் வைத்துக்கொண்டு விளையாடும்போது, ''வாண்டாண்டா கண்ணு, கண்ணிலே அடிபடும், விளையாடாதே, பேசாமே ஒரு இடமா உட்கார்ந்துகொண்டு எதிராளாத்திலே பையன்கள் விளையாடறானே அதைப்பார்த்துக்கொண்டிரு என்போம். இதுதான் எங்களுடைய முன்னோக்க வலிவு.

* * *

நமது நண்பர் செம்மங்குடி ஸ்ரீனிவாஸய்யருக்கு, திருவாங்கூர் சமஸ்தானத்தில் ''ராஜ காரிய விரத'' என்ற பட்டம் கொடுத்திருப்பதாக அறிகிறோம். அம்மாஞ்சிக்குப் பரம திருப்தி; பட்டம் பெறுவது என்றால் இப்படிப் பெறவேண்டும் என்கிறான். செம்மங்குடி சென்ற ஜன்மத்தில் ஏராளமாகச் சிவபூஜை செய்திருக்கவேண்டும்; ஆதலால்தான் இந்த ஜன்மத்தில் சமஸ்தான ஆதரவும் கௌரவமும் பெற்று வாழுகிறார். சமீபத்தில் பட்டணத்துக்கு வந்திருந்ததாகக் கேள்வி. பட்டம் பெற்றதற்காக சங்கித அபிமானிகள் யாராவது அவருக்கு ஒரு டீ பார்டியோ, டின்னர் பார்ட்டியோ கொடுத்தார்களோ என்னவோ தெரியவில்லை. ஒரு வேளை மழைக் காலமாயிருப்பதால் சௌகரியப்படவில்லையோ என்னமோ? பார்ப்போம் அடுத்த முறை!

இந்திய தேசியப்படையினரின் வழக்கை விசாரிப்பவர்கள்

இந்திய தேசியப்படையினருக்காக வாதாடுபவர்கள்

சிசு வளர்ப்பு

இ. சே. சௌ. ராஜன்

தாயின் பாலை அருந்தி சிசு வளர்கிறது. இது இயற்கை முறை. தனது உணவு முழுதுக்கும் இந்தப் பாலையே நம்பி வளர்கிறது. தாகத்திற்குத் தேவையான தண்ணீரும் இந்தப் பாலிலேதான் அடங்கியுள்ளது. பசியுள்ளபொழுதும், தாகமெடுத்தபொழுதும் அழுது தனது தேவையைத் தெரிவித்து, தாயின் கவனத்தைக் கவர்ந்து பால் குடிக்கிறது. பிறந்த சிசு "நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக" வளர்க்கப்படுகிறதென்பது உண்மையிலும் உண்மை. பிறந்து ஒரு வருஷ காலத்தில் வளரும் வேகமும், எடையின் மிகுதியும், அபிரிமிதமானது. இவ்வளவும் தாயின் பாலிலிருந்துதான் குழந்தை பெறுகிறது. வயது வளர வளர, உணவு அதிகரித்து வந்தாலும்கூட முதல் வருஷத்தைப்போல அவ்வளவு வேகமாக மற்ற வருஷங்களில் குழந்தைகள் வளருகிறதில்லை. இவ்வளவு சக்திவாய்ந்த தாய்ப்பாலின் மகத்துவம் தான் என்ன? இதை நாம் அறிந்து கொண்டால்தான் மனிதர்களாவோம். இல்லையேல், நமக்கும் விலங்குகளுக்கும் வேறுபாடு கிடையாது.

தாய்ப்பாலை ஒரு பாத்திரத்தில் பீச்சி வைத்து, அதை மாட்டின்பால், ஆட்டின் பால் இவைகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால், இரண்டிற்குமிருக்கும் வித்தியாசம் சுலபமாகத் தெரிந்துகொள்ளமுடியும். மற்றப் பாலைப்போலத் தாய்ப்பால் வெண்மையாக இருக்காது. தண்ணீர் கலந்த பால்போலக் காணப்படும். வாயில் ஒரு சொட்டுப்பால் விட்டு ருசிபார்த்தால் தாயின்பால் அதிக இனிப்புள்ளதாகவும், உடற் சூடுகொண்டதாகவும் இருக்கும். தாயின்பால் சரியான புஷ்டியுள்ளதாகவும், குழந்தையின் தேவைக்குப் போதுமானதாகவும் இருக்கவேண்டுமானால் தாயின் உடல்நிலை குன்றாமலிருக்கவேண்டும். தாயின்பால் தாயின் உடற்கட்டு, உணவின் தரம் இவைகளைப் பொறுத்திருக்கிறது. நம் நாட்டில் பழைய காலத்துப் பாட்டிமார்கள் பிள்ளைத்தாய்ச்சிகளைப் பராமரிப்பதில் வெகு சாமர்த்தியமும், பழக்கமும் உள்ளவர்களாக இருந்திருக்கிறார்கள். தாய்மார்களுக்கு இந்த உணவுதான் கொடுக்கவேண்டும், இந்த விதம்தான் ஸ்நானம், உடை, வேலைநேரம் முதலியவைகளிருக்க வேண்டுமென்று திட்டமாகச் சொல்லுவார்கள். குழந்தைக்கு வயிற்றுக்கோளாறு ஏற்படுமானால் தாய்க்கு மருந்தும், பத்தியமும் செய்து, சிசுவின் நோயைத் திருத்துவார்கள். குழந்தை வைத்தியத்தில் தாயின் வைத்தியம் எவ்வளவு முக்கியமெனத் தற்காலம் தாய்மார்களுக்கும், வைத்தியர்களுக்கும் புரிவதில்லை யென்பது எனது அபிப்பிராயம். குழந்தைக்கு மருந்து கொடுப்பது வழக்கமாகிவிட்டதே தவிர தாயைப்பற்றிய விசாரணையோ, பராமரிப்போ செய்யவேண்டியதவசியம் என்பதுகூடப் புலப்படுவதில்லை.

சிசுவிற்குப் பால்கொடுக்கும் தாயைச் சிசுவைக் கவனிப்பதுபோலவே கவனிக்க வேண்டும். தற்சமயம் கிராமங்களில் பிரசவத்திற்கெனத் தயாரிக்கும் லேகியம், தாய்மார்களுக்கு மூன்றுமாதங்கள் வரையில் கொடுத்து வருகிறார்கள். அந்த லேகியத்தின் மருந்துவகைகளின் பட்டியல் வயதுமுதிர்ந்த பாட்டிமார்களுக்குத் தெரியும். சாப்பிடுவதற்குக் காரம், இனிப்புக் கலந்து, தாயின் வயிற்றில் சமிப்புக் கோளாறுகள் ஏற்படா வண்ணமிருப்பதற்கும், குழந்தைகளுக்கும் வயிற்றில் மந்தம், உப்புசம், வலி வராமலிருப்பதற்காகவும் இந்த மருந்து உபயோகிப்பது நல்ல முறை. தற்காலம் நவீன நாகரிகத்தில் வளரும் நமது இளந்தாய்மார்கள் இம்முறையை அறியார்கள். இந்த வழக்கத்தைக் கைவிடாமல் பின்பற்றுவது நன்மை பயக்கும். தாயின் உணவு சுலபமாகச் சமிக்கக்கூடியதாகவும் புஷ்டியுள்ளதாகவுமிருக்கவேண்டும். முக்கியமாகப் பால், தயிர், நெய், பழவர்க்கங்கள், கீரை வகை இவைகள் உணவில் சேரவேண்டும்.

சிறிதளவு உள்ளிப்பூண்டும் உணவோடு கலந்து தயாரிக்கவேண்டும். பருப்பு வகைகள், கிழங்குகள், இவைகளைத் தள்ளிவிட வேண்டும். காலாகாலத்தில் ஸ்நானம், உணவு, உறக்கம் எல்லாம் ஒரு ஒழுங்காக நடத்துபவளாகவுமிருக்க வேண்டும். இரவில் கண்விழிப்பது, கூத்து சினிமா நாடகங்கள்போல மனதிற்கு அதிர்ச்சி கொடுக்கக்கூடிய இடங்களுக்கு போவது கூடாது. பிள்ளைத்தாய்ச்சி ஏழு மாதம் வரையில் பிறந்த வீட்டிலிருந்து பாதுகாக்கப்படுவது பழைய வழக்கம். இது சிசு வளர்ப்பிற்குத் தக்க சாதனமாகவிருந்தது. குழந்தைக்கு மாதங்கள் அதிகம் ஆக ஆக, தாயின்பால் குணமும் அதற்கேற்றவாறு சற்று அதிகமுள்ளதாக மாறிவரும். தாய்ப்பால் கொடுத்து வளர்க்கும் குழந்தை நல்ல எடையுள்ளதாயும், மாதங்களுக்கு ஏற்ற தேகக் கட்டுடனுமிருக்கும். நைந்து அடிக்கடி அழாது. விழித்திருக்கும் காலங்களில் கைகால்களை அடித்து உதைத்து, புன் சிரிப்புடனிருக்கும். பசியோ, தாகமோ, அல்லது மூட்டைப்பூச்சி, கொசு, இவைகள் கடிப்பதிலுலோ அழுதால் அழலாமே தவிர, ஒரு நாளொன்றுக்குக் குறைந்தது பதினெட்டு மணி நேரம் தூங்கும். மலம் கழிவது யாதொரு மருந்தும் இல்லாமல் இரண்டு அல்லது மூன்று தடவையும், மூத்திரம் பத்துமுதல் பன்னிரண்டு தடவை வரையிலும் வெளியாகும். ஆறு அல்லது ஏழு பவுண்டு எடையுடன் பிறக்கும் சிசு, வருஷ முடிவில் இருபதுமுதல் இருபத்திரண்டு பவுண்டு வரையில் இருக்கும். சராசரி மாதம் ஒன்றுக்கு ஒரு பவுண்டு எடை ஏறிக்கொண்டே போகும். இவ்விதம் வளரும் குழந்தை இளம்பிள்ளை நோய்களுக்கு இடங்கொடாமல் வளரும். இதுதான் இயற்கை முறை. இம்முறை நன்கு கையாளப்பட வேண்டுமானால், தாயின் உடல்நிலை குன்றாது இருக்க வேண்டும். கிரந்தி முதலிய மேகநோய் தாய்க்கு இருக்குமானால், சிசு பிறந்து ஒன்றிரண்டுமாதங்களுக்குள் மெலிந்துகொண்டேபோய் இறந்துவிடும். குழந்தை பிறக்கும் காலையில் தாய்க்கு வெட்டை நோயிருக்குமானால், குழந்தையின் கண்களுக்கு ஆபத்து. குழந்தை வெளிவந்தவுடன் அதன் கண்களைச் சுடுதண்ணீரில் நனைத்த மிருதுவான பஞ்சைக்கொண்டு கண்ணிமைகளையும், அதன் உட்பாகத்தையும் நன்ருகத் துடைக்கவேண்டும். இதுசெய்தால் குழந்தைகளின் கண்ணிற்கும், பார்வைக்கும் குறைவு உண்டாகாது. நோயின் காரணத்திஞல் குழந்தைக்குத் தேவையான பால் தாயினிடத்து இல்லாமல் போனுல் பிறகு அதை எப்படி வளர்ப்பதென்பதைப்பற்றி யோசனை செய்ய வேண்டும்.

தாயின்பால் அவசியம் வேண்டும். அதில்லாவிட்டால் மாற்றுந்தாயைக் கொண்டு பால் கொடுக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டும். இதுவும் பழைய காலத்து வழக்கம். நம் முன்னோர்கள் இதன் அவசியத்தை நன்கு உணர்ந்திருந்தார்கள். மாற்றுந் தாய்மார்களும் கிடைத்துக்கொண்டிருந்தார்கள். மாற்றுந்தாய் வைப்பதற்கு முன்பாக அவள் எப்படிப்பட்டவளாகவிருக்கவேண்டுமென்பதை நன்கு தெரிந்து கொள்ளவேண்டும். இல்லையேல் சிசுவிற்கு ஆபத்து உண்டாகக்கூடும். வளர்க்கவேண்டிய குழந்தையின் வயதுள்ள தன் குழந்தை அவளுக்கு இருக்கவேண்டும். இரண்டு குழந்தைகளுக்குத் தேவையான பால் அவளிடமிருக்கவேண்டும். க்ஷயம், காசம், குஷ்டம், கிரந்தி, வெட்டை முதலிய நோய்கள் இல்லாதவளாகவும், மதுபானம் போன்ற பழக்கங்கள் இல்லாதவளாகவுமிருக்கவேண்டும். பால் கொடுக்கப்படும் குழந்தையுடன் வசிக்கவேண்டும். உணவு, முதலியவற்றை நன்கு புசித்து, ஊட்டம் பெற்றவளாக இருக்கவேண்டும். வளர்க்கும் குழந்தையிடத்து அன்பும், கருணையும் கொண்டவளாகவும், சுத்தமான சுக வழிகளை அறிந்தவளாகவும் இருக்க வேண்டும். பெற்றெடுத்த தாய் எவ்விதம் கவனிக்கப்பட்டு வளர்க்கப்பட வேண்டுமோ அவ்விதமே மாற்றுந்தாயும் கவனிக்கப்படவேண்டும். இந்த நிபந்தனைகள் ஒன்றுகூடக் குறையாமலிருந்தால்தான், மாற்றுந் தாயைக் கொண்டு பால் கொடுக்க ஏற்பாடு செய்யலாம். குழந்தை குறிப்பிட்ட கால அளவிற்கேற்றபடி எடை ஏறிக்கொண்டு வர வேண்டும். இதைக் கொண்டுதான் மாற்றுந்தாயின் பயனைக் கண்டுகொள்ளக்கூடும். சிசுவின் எடை குறைந்துகொண்டு போனுல் மாற்றுந்தாயை மாற்றவோ அல்லது நீக்கி, கைப்பால் கொடுத்து

வளர்க்கும் முறையைக் கையாளவோ வேண்டும். மாற்ருந்தாயை நல்ல தேர்ந்த வைத்தியர் பார்த்து, அனுமதித்தாலொழிய வைக்கக்கூடாது. பரிசோதிக்காமல் கண்டவர்களை வைத்துக்கொண்டால் குழந்தைக்குப் பலவித நோய்களும், சுகக்கேடும் உண்டாகலாம். இப்படிப் பால் கொடுப்பவர்கள் கிடைக்காவிட்டால் கைப்பால் கொடுத்து வளர்ப்பதே மேலானது.

கைப்பால் கொடுத்து வளர்ப்பதில் பலவித கஷ்டங்கள் ஏற்படக்கூடும். கூடிய மட்டில் கறந்த பாலைத் தாயின் பால்போல மாற்றி, கொடுக்கவேண்டும். எந்தப்பால் குழந்தைக்கு மேலானது என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும். நம் நாட்டில் நாம் கழுதையை நன்கு வளர்ப்பதில்லை. அவைகளை வேலைக்கு உபயோகப் படுத்தும் சலவைத் தொழிலாளர்களும் அதற்கேற்ற தீனி போட்டுப் போஷிப்பதில்லை. தெருக்களில் பொறுக்கவிட்டுத் தங்களுக்குத் தேவையானபொழுது கட்டி அடிக்கிருர்கள். எனினும் கழுதைப் பால் குழந்தைகளுக்கு அருமையான ஆகாரம். குணத்திலும், அமைப்பிலும், தாயின் பாலைப்போன்றது. கழுதையைச் சுத்தமாகப் பாதுகாத்து, தீனி வைத்து ரக்ஷிப்போமானல்அதன் பாலைக்கொண்டு அநேக சிசுக்களின் உயிரைக் காப்பாற்றலாம். கழுதைப் பாலைக் கறந்து, நல்ல சுத்தமான துணியைக்கொண்டு வடிக்கட்டிவிட்டு, அப்படியே காய்ச்சாமல் உபயோகப் படுத்தவேண்டும். ஒரு குழந்தையின் நன்மையை உத்தேசித்துப் பால் கொடுக்கக் கூடிய கழுதையைப் பராமரிப்பதில் லாபமுண்டு. யாதுகாரணத்தாலோ கழுதை தீண்டக்கூடாத ஒரு பிராணி யென்கிற பொது அபிப்பிராயம் நமக்குள் பரவி யிருக்கிறது. மனிதர்களையே தீண்டப் படாதவர்களென்று ஒதுக்கிவைக்கும் சமூகத்தில் இந்தக் கழுதைத் தீண்டாமையைக் கண்டு ஆச்சரியமடைவதற்கில்லை.

அடுத்தபடியாக ஆட்டுப்பால் குழந்தைகளுக்கு நன்மை பயக்கும்; கிராமங்களில் சுலபமாகக் கிடைக்கக்கூடியது; அதிகச் செலவில்லாமல் ஏழைகளுக்கும்கூடக் கிடைக்கும். ஆனல் அதைக் கறந்தபடியே கொடுக்கக்கூடாது. தாயின் பாலைக் காட்டிலும் கெட்டியாகவும் கொழுப்புச் சத்து அதிகம்கொண்டு இனிப்புக் குறைந்திருக்கிறது. இவற்றை மாற்றவேண்டியது அவசியம். ஆட்டுப்பாலைக் கறந்தவுடன் சுத்தமான மெல்லிய துணியைக் கொண்டு வடிக்கட்டவேண்டும். பிறகு சுத்தமான காய்ச்சின தண்ணீர் கலக்கவேண்டும். குழந்தையின் வயதிற்குத் தகுந்தபடி தண்ணீர் கலக்கவேண்டும். முதல் மூன்று மாதம் வரையில் சரிக்குச் சரி தண்ணீர் கலக்கவேண்டும். ஒரு சிறிய கரண்டி சர்க்கரை சேர்க்கவேண்டும். தாயின் பாலின் இனிப்பிற்கு அதிகமாகச் சர்க்கரை சேர்க்கக்கூடாது. ஒரு தடவை தயாரித்த பாலை இரண்டு வேளைக்குமேல் வைத்திருக்கக்கூடாது. ஒரு நாளைக்கு நான்கு தடவையாகிலும் தயாரிக்கவேண்டும். மாட்டின் பாலாகவிருந்தால் அதை அவசியம் காய்ச்சின பிறகு ஆட்டுப்பாலைப் போலவே தண்ணீர் கலந்து, இனிப்புச் சேர்த்து உபயோகப்படுத்தவேண்டும். ஆட்டுப்பாலைக் காய்ச்சவேண்டிய அவசியமில்லை. முதல் மூன்று மாதங்களான பிறகு சரிக்குச்சரி தண்ணீர் கலக்காமல் பால் மூன்று பாகமும் தண்ணீர் ஒரு பாகமுமாகக் கலந்துகொண்டால் போதுமானது. ஆறு மாதத்திற்குப் பிறகு நாலில் ஒரு பாகம் தண்ணீர் கலந்தால் போதுமானது. கைக் குழந்தைகளுக்கு இளம் மாட்டுப்பால் உபயோகப்படுத்த வேண்டும். தண்ணீர் கலக்கும் விஷயத்தில் நமது வீடுகளில் நமது கண் பார்வையில் கறக்கப்படும் பாலுக்குத் தான் மேற்கூறிய ஏற்பாடுகள் அவசியம். கிராமங்களிலும், நகரங்களிலும் விலைப்பால் வாங்கினல் தேவைக்கு மேலாகவே தண்ணீர் கட்டாயம் கலந்திருக்கும். மேன்மேலும் நாம் தண்ணீர் கலந்தால் குழந்தைக்குப் போதிய அளவு உணவு கிடைக்காது.

கைப் பால் கொடுத்து வளர்க்கும் குழந்தைகளுக்குப் போதிய அளவு உயிர்ச்சத்து (Vitamins) கிடைப்பதில்லை. அதன் காரணமாகப் பல நோய்கள் உண்டாகும். அவற்றைத் தடுக்கப் பழரசம் ஏதாகிலும் சேர்க்கவேண்டும். பணம் கொடுத்து வாங்கக்கூடியவர்கள் ஆரெஞ்சுப்பழரசம், தினசரி அரைப் பழத்தைப் பிழிந்து, விதைகளைக் களைந்து, சரி சமானமாகத் தண்ணீரும், சிறிதளவு சர்க்கரையும் கலந்து கொடுக்கவேண்டும். இது நகரங்களில்

செய்யக்கூடும். கிராமங்களில் முள்ளங்கிக் கிழங்கு சாறு பிழிந்து, ஒரு சிறு கரண்டி ரசத்துடன் தண்ணீர் கலந்து புகட்டலாம். இது சுலபமாகச் செய்யக்கூடியது. பப்பாளி, மாதுளை, சீமைத் தக்காளி, போன்ற பழங்களின் ரசத்தையும் பிழிந்து தண்ணீர் கலந்து கொடுக்கலாம். மொத்தத்தில் வேக வைக்காத பச்சைப் பழ ரசம் கொடுத்தாகவேண்டும். தற்காலம் அன்னிய நாடுகளிலிருந்து, தயாரிக்கப்பட்ட பலவிதப் பால், டப்பிகளிலும், புட்டிகளிலும் தூளாக அடைக்கப்பட்டு உயர்ந்த விலையில் விற்கப்பட்டு வருகின்றன. அவைகளைக் கூடியமட்டில் உபயோகப்படுத்தாமலிருப்பது நலம். வேறு ஒரு விதத்திலும் பால் கிடைக்காவிட்டால் நகரங்களிலுள்ளவர்கள் காயவைத்து அடைக்கப்பட்டுள்ள பால் தூள்களை உபயோகப்படுத்தலாம். ஆனாலும் பழச் சத்துள்ள ரசம் உபயோகித்துத்தான் ஆகவேண்டும். இவைகளில் கிளாக்ஸோ (Glaxo), ஆஸ்டர் மில்க் (Oster milk), இறுகின கட்டிப் பால் (condensed milk), ஆலன்பரி (Allenbruy) பால் மூன்று நம்பர்கள் குழந்தைகளின் மாதத்திற்கு தகுந்தாற் போல, கடைசியாக ஆர்லிக்ஸ் (Horlicks malted milk) மூன்று மாதமான குழந்தைகளுக்கும் உபயோகிக்கலாம். அப்படி உபயோகிக்குமுன்பு, அதன் விபரம் முற்றிலும் அந்தந்தப் புட்டிகளின்பேரில் எழுதப்பட்டுள்ள அளவுபோலத் தயாரித்துக் கொடுக்கவேண்டும்.

கைப்பால் புகட்ட வேண்டிய முறையில் எவ்விதம் கொடுக்கவேண்டியதென்பதின் முறையைத் தெரிந்துகொள்ளவேண்டும். கண்ணாடி சீசாக்களில் போட்டு, ரப்பர் சூப்பிகளின் மூலமாகக் குழந்தை உறிஞ்சி இழுத்துக்கொள்ளும்படியாகக்கொடுப்பது நவீன முறை. சங்குப் பாலாடைகள், வெண்கலம், வெள்ளிப் பாலாடைகள் மூலமாகக் குழந்தைகள் விழுங்கும்படி மடியில் வைத்துக்கொண்டு புகட்டுவது பழைய காலத்து முறை. இப்போதும் பெரும்பாலோரான ஏழைகளிடமும், கிராமங்களிலும் வழக்கத்திலிருந்து வருகிறது. நவீனமான பால் புட்டி முறை பல விதத்திலும் கவலையையும், கஷ்டத்தையும் கொடுக்கக் கூடியது. முதலாவது செலவு அதிகம். திடீரெனக் கீழே விழுந்தால் புட்டி உடைந்து பால் சிதறிப் போவதோடு பொறுக்கி எறியவேண்டிய கஷ்டமும் உண்டு. ரப்பர் சூப்பிகள் கிடைப்பது தற்காலம் வெகு துர்லபம். ஒவ்வொரு தடவையும் பால் கொடுத்தவுடன் புட்டியையும், சூப்பிகளையும் நன்ருகச் சுடுதண்ணீரில் கழுவி, தினம் சுத்தமாகத் தயாரித்த போரிக் லோஷனில் மூழ்கியிருக்கும்படி வைக்கவேண்டும். மறுபடி உபயோகிக்கும்பொழுது நன்ருகக் கழுவி உபயோகிக்கவேண்டும். இவ்வளவு கவலையும், உழைப்பும் இல்லாவிட்டால், புட்டிகள் அழுக்கடைந்து, நோய்க்குக் காரணமாகும். குழந்தைகள் உறிஞ்சி, சூப்பிக்குடிப்பதில் பிரியப்படும். பாலாடைகள் சுத்தப்படுத்துவது மிகவும் சுலபம். அதில் பால் முதலியவை புகட்டும்பொழுது குழந்தைகள் வீரிட்டுக் கத்தும் நிலையில் கட்டாயப்படுத்திப் புகட்டக் கூடாது, குழந்தைக்குச் சரியான பசியிருந்து, பாலும் தாய்ப்பாலைப்போலத் தயாரிக்கப்பட்டிருக்குமேயாகுல் குழந்தை அழாமலே பாலாடையில் விழுங்கும். பசியில்லாமலோ அல்லது ருசியில்லாததைக் கொடுக்கும்பொழுதோதான் அலறும். இதைத் தாய்மார்கள் அறியவேண்டும். கத்தும்பொழுது பால் புகட்டுவது பலவிதத்தில் கெடுதலை உண்டுபண்ணும். பாலோடு காற்றும் உட்புகும். அதனுல் வயிறு உப்புசம் கொடுக்கும். பால் துளிகள் மூச்சுக் குழாயில் புகுந்து, புரையேறி, கபக் காய்ச்சல், மாந்தம் முதலிய நோய்களை உண்டாக்கும். குழந்தைகளுக்கு மரணமும், நோயும் பாதிக்குமேல் தாயின் அறியாமையாலே உண்டாகின்றன. குழந்தை வளர்ப்பதற்குச் சற்று நல்ல பழக்கமும், அனுபவமுமுள்ளவர்களைக்கொண்டு அறிந்துகொள்ளவேண்டியது அவசியம். தாமே பால்கொடுக்கும் தாய்மார்களுக்கு இந்தப் படிப்பினை அதிகம் தேவையில்லை.

உங்கள் சௌந்தர்யத்தைக்

காப்பாற்றிக் கொள்ளுங்கள்

ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ், லிமிடெட், பம்பாய் 15

உத்தரகிரி யாத்திரை

ரா. ஸ்ரீதேசிகன்

நான் ஒரு பௌதிக சாஸ்திரி. இந்திரியங்களுக்கு அப்பாலுள்ள விஷயங்களில் எனக்கு வெகுநாளாய் நம்பிக்கை இல்லாமலிருந்தது. நம்நாட்டுப் புனித வேத மொழிகளைப் பைத்தியக்காரனின் ஓலங்களென்று கருதிவந்தேன்; சாத்திரங்களை அர்த்தமற்ற கூச்சல்களென்று நினைத்தேன்; புராணங்களைக் குப்பைகளென்று ஒதுக்கினேன்.

என்னுடைய வீட்டில் பாகவதர்கள் கூடுவார்கள். என் தகப்பனார் அச்சமெல்லாம் தீர்ந்து அருளமுதம் உண்டவர்போல நடந்துகொள்ளுவார். ஆண்டவனுடைய அருளைப் பற்றித்தான் சதா பேசுவார்.

"ஆண்டவன் அருளா?— அருளிருந்தால் குற்றமற்ற சான்றோர்கள் சிறைச்சாலையில் புழுங்குவானேன். புலைத்தொழில் புரிகின்ற நீசர்கள் வேந்தர்கள் போல ஆடம்பரமான வாழ்வு வாழ்வானேன். ஒன்றும் அறியாத குழந்தைக்குத் தாங்க முடியாத நோய் வந்து மாண்டு போவானேன், பூவும் பிஞ்சும் உதிர்வதில் என்ன நியாயம் இருக்கிறதோ ஒன்றும் தெரியவில்லை. ஏதாவது ஒன்று பழுத்து விழுந்தால் அதில் துயர் ஏற்படுகிறதில்லை.

மனத்தைத் திகைக்கச்செய்யும் உலகச் சிருஷ்டியின் மாயத்தை என் மனம் துருவி ஆராய முயலும்; ஆராய்ந்தென்ன? மனக் கிலேசம், அவநம்பிக்கை, ஆத்ம சூன்யம், இவைகள்தாம் எனக்கு வரும். ஆனால் இயற்கையில் ஓர் ஒழுங்கைமட்டும் கண்டேன். இத்தனை ஒழுங்கான சூழ்நிலையில் விபரீதங்கள் தோன்றுவானேன் என்று என் மண்டையை உடைத்துக்கொள்ளுவேன்

வானவீதியில் சூரிய சந்திரர்களின் இடையறாத பவனிகள், தாரகா கணங்களின் ஒப்பிலாத் தெய்வ நடனங்கள், மாறி மாறி வரும் பருவங்களின் ஊர்வலங்கள் - இவைகளைப் பார்க்கும்பொழுது இத்தனையையும் நடத்துகின்ற எல்லாம் வல்ல ஏதோ ஒரு சக்தி இருக்கவேண்டும் என்ற எண்ணம் வரும். ஆனால் வாழ்வின் ஓலங்கள் என் செவியில் விழும்பொழுது அர்த்தமற்ற ஒரு குருட்டுச் சக்தியோ அல்லது உலக இன்னல்களிலே களிக்கின்ற இரக்கமற்ற பேய்தானோ இத்தனைக்கும் காரணமென்று நினைப்பேன். மாறி மாறி எழும் கடலின் அலைகளைக் காணுந்தோறும், மறைந்து நின்று இசைக்கும் ஓர் அபூர்வ சக்திக்காக இவைகள் குதித்தாடுகின்றன என்ற இன்னொரு எண்ணம் குறுக்கே பாயும். பாவியத்தில் அர்த்தம் விளங்காமல் மனனம் செய்த பாட்டு என் சிந்தையில் ஒலிக்கும்.

தன்னுளே திரைத்தெழும்
தரங்கவெண் தடங்கடல்
தன்னுளே திரைத்தெழுந்து
அடங்குகின்ற தன்மைபோல
நின்னுளே பிறந்திறந்து
நிற்பவும் திரிபவும்
நின்னுளே யடங்குகின்ற
நீர்மைநின்கண் நின்றதே

என் வீடு கடற்கரை ஓரமாயுள்ளது. மேல்மாடத்தில் நின்று அடிக்கடி நான் கடலை நோக்குவேன். ஓரிடத்தில் நீலம் தோன்றும்; மற்றோரிடத்தில் பச்சை ஒளி வீசும்; இன்னோரிடத்தில் ஊதாப் பாயும். எத்தனை விதமான வர்ணங்களின் விளையாட்டுகள்! இயற்கையின் அழகை அள்ளிக் குடிப்பேன். ஆனால் என் வீட்டில் வேதாந்த விசாரம் செய்யும் பாகவதர்களிடம் எனக்குச் சிரத்தை ஏற்படுகிறதில்லை. அவர்கள் தங்களையே ஏமாற்றிக்கொள்ளுகிறார்களா? அல்லது பேரொளிகண்டு ஆடி ஆடி அகங்கரைகின்றார்களா? ஒன்றும் விளங்கவில்லை. ஆனால் உத்தரகிரி உத்தமனைக் கண்டால் உதயமாகும் என்று அவர்கள் அடிக்கடி சொல்லுவார்கள். அதைப் பார்க்கவேண்டுமென்ற ஆசை என் மனத்திலே எழும். மோனைக்காக ஏற்பட்ட சொல் தொடரா? அதில் ஓர் உண்மையிருக்கிறதா? என்றெல்லாம் எண்ணுவேன்.

அங்கேயுள்ள பிரானுக்கு வருஷத்தில் ஆறுமாத காலந்தான் பூசையாம். மற்ற ஆறுமாதத்தில் அவ்விடத்தை ஒருவரும் அணுகமுடியாது. தேவர்கள் விண்ணிலிருந்து இறங்கிப் பூஜை செய்வார்கள்; அவர்களால் அர்ச்சிக்கப்பட்ட மலர்கள் வாடாவாம். வாடாததற்குக் காரணம் பனிக்கட்டிகள் நிறைந்த சூழ்நிலைதான் என்று அவர்களைப் பரிகசிப்பதுபோல் என் மனம் எண்ணமிடும்.

மலைகளைப்பற்றி வாசித்த செய்திகள் என் கண்முன் ஒன்றன்பின் ஒன்றாய் வரும். கணக்கிலாத் தெளிந்த நீர்ச்சுனைகள், பாடி வரும் பல்லாயிரம் அருவிகள், அடர்ந்த

அடவிகள், மலர்கள், மண்டிக்கிடக்கும் பள்ளத் தாக்குக்கள், இருளடைந்த குகைகள்—இவைகளை என் மனம் சித்திரிக்கும்.

இவைகளைக் காண வேண்டுமென்ற ஆசை வளர ஆரம்பித்தது. ஆசை கருகிப் போய்விடுமோ என்ற ஐயம் என் மனத்தில் குடிகொள்ளும். ஆண்டுதோறும் விடுமுறை நாட்களில் புறப்படுவது என்ற தீர்மானத்திற்கு வருவேன். எதிர்பாராத நிகழ்ச்சிகள் என்னைத் தடுத்துவிடும். கடைசியில் உள்ளத்தே வளர்ந்துவந்த ஆசையும் வெம்பி உதிராமல் கனிந்துவிட்டது. நானும் உத்தரகிரியை நோக்கிப் புறப்பட்டேன்.

காலை ஆறு மணி இருக்கும். இளங்காற்று வீசிக்கொண்டிருந்தது. காற்றில் ஓர் இன்பம் இருந்தது. நான் ரயில்வண்டியில் உட்கார்ந்தேன். கண்ணுக்கெட்டின வரையில் பரந்துகிடந்த கடலின் காட்சி என் உள்ளத்தை விரியும்படி செய்தது. வண்டியும் நகர்ந்தது. கடலும் என்னை எண்பது மைல் தூரம் வரையில் தொடர்ந்து வந்தது. கடலின் தோற்றம் கொஞ்சம் கொஞ்சமாய்த் தூர நீலத்தில் மறைந்தது. வண்டி உள்நாட்டுப் பிரதேசத்தில் புகுந்து விட்டது. மணி மூன்று இருக்கும். உஷ்ணக்காற்று அடித்தது. அதன் வெப்பத்தை என்னால் தாங்க முடியவில்லை. "இதேன்? இப்படி அனல் வீசுகிறதே" என்று என் பக்கத்தில் உட்கார்ந்திருந்தவர்களில் ஒருவரைக் கேட்டேன். "அது தெரியாதா, எட்டுமைலுக்கு அப்பால் ஒரு பாலைவனம் இருக்கிறது. அங்கிருந்து காற்று வருவதால் அனல் சொரிகின்றது" என்றார்.

மணற்கடல்கள், அவைகளில் உண்டாகும் மணல் அலைகள், பேய்ப் புயல்கள் எழுப்பும் கொந்தளிப்புக்கள், அவைக்கிடையே தத்தளிக்கும் ஒட்டகங்கள்— இக்காட்சிகளெல்லாம் என் முன் உலாவின.

ரயில் கடகடவென ஓடிக்கொண்டிருந்தது. இரவும் வந்தது. எனக்குண்டான தாபமும் நீங்கிற்று. வண்டியிலேயே என் உடன் கொண்டுபோன உணவை அருந்தினேன். களைப்புத் தீர்ந்தவுடன் வெளியில் எட்டிப்பார்த்தேன். எத்தனையோ ஊர்கள் கும்பல் கும்பலாகத் தோன்றின. அவ்வூர்களில் குடிசைகளில் ஏற்றப்பட்ட விளக்குக்கள் இருட்டில் மின்னின. அக்குடிசைகளில் வாழும் மனிதர்களின் இன்பதுன்பங்களைப்பற்றி நான் சிந்தையில் ஆழ்ந்தேன். நடுநிசி ஆனதும் என் கண்கள் குவிந்தன. மெய்ம்மறந்து தூங்கிவிட்டேன்.

பொழுது விடிந்தது. நான் மலை அடிவாரத்திற்கு வந்துசேர்ந்தேன். நிரம்ப தூரம் பிரயாணம் செய்ததால் மிகச் சோர்வு வந்துவிட்டது. ஒரு சத்திரத்தில் அன்று முழுவதும் தங்கினேன். மனம் மட்டும் உத்தர கிரியின் காட்சிகளைக் கற்பனை செய்துகொண்டே இருந்தது. அடிவாரத்திலிருந்து இருநூறு மைல் போகவேண்டும். உத்தரகிரி அப்பன் கோயில்வரையில் பஸ் போகிறதென்று கேள்விப்பட்டேன். அது விடியற்காலம் புறப்பட்டு மறுநாள் கோழி யழைப்பதன் முன்னம் சேர்ந்துவிடுமாம். பஸ் போகிறவிஷயத்தில் எனக்குச் சந்தோஷந்தான். ஆனால் பக்தியுள்ள யாத்திரிகர் அதை வெறுத்தனர். பஸ் போவதற்குப் பாதை அமைத்ததே ஒரு பெரும் பாதகமென்று அவர்கள் கருதினர்.

காலைக்கதிர்கள் சத்திரத்தில் என் அறையில் நுழைவதற்கு முன்பே நான் புறப்பட்டேன். கீழ் வானம் வெளுத்துக் கொண்டிருந்தது. பெரும் இருட்டிலிருந்து விரிந்த சிருஷ்டியென மலைக் காட்சிகள் தென் பட்டன. சூரியனின் சுடர் வெள்ளத்தில் எல்லாம் தோய ஆரம்பித்தன. நான் பஸ்ஸில் உட்கார்ந்தேன். அது மெல்ல நகர்ந்தது. நடைப் பாதையில் போய்க்கொண்டிருந்த யாத்திரிகர் "நாராயணா நாராயணா" என்று உச்சரித்தனர். அம்முழக்கத்திற்கு மலைகள் எதிரொலி கொடுத்தன. இரு பக்கங்களிலுள்ள பள்ளத்தாக்குக்களில் பல்வேறு வர்ணங்களையுடைய மலர்கள் பூத்துக் கொட்டின. பகற் கடவுளுக்குப் பூக்களினால் அஞ்சலி செய்தனவோ மலைகள் என்று சொல்லும்படி இருந்தது அம்மலர்க்காட்சி. காலை இளங்காற்றின் மீது பலவித மணங்கள் மிதந்துவந்தன. என் கண்கள் எங்கும் திரிந்து இறைந்து கிடக்கின்ற வனப்பை மண்டிப் பருகின. தாவி வருகின்ற அருவிகளின் நாதம் நல்லிசைக் கானமென என் செவியில் விழுந்துகொண்டே இருந்தது.

காலை தேய்ந்துவிட்டது; நடுப்பகல் வந்தது. பஸ் மலைப்பாதையில் ஓரிடத்தில் தங்கிற்று. மணி மூன்று ஆனதும் அது புறப்பட்டது. மலைகளின்மீது ஓர் அமைதி படர்ந்தது. ஆனால் அதைக் குலைக்கப் போகிற மேகங்கள் ஊர்ந்தன. "இத்தனை புழுக்கமாயிருக்கிறதே—மழை வருமோ" என்று அஞ்சினர் என்னோடு கூட வந்தவர். இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கும் பொழுது வானம் கறுத்தது. மின்னல் வீசிற்று; இடியும் கேட்டது. மின்னல்கள் பல்லாயிரம் பாம்புகள்போல நெளிந்தன ஒரு சமயம்; மற்றொரு சமயம் ஆகாயத்தில் அருவி போலச் சுடர்விட்டுப் பாய்ந்தது.

கதைக் கோவை

— நான்காம் தொகுதி —

75 - எழுத்தாளரின் சிறுகதைகள் - 75
514 - பக்கங்கள் ... ரூ. 10—8—0

புகழ் மொழிகளிற் சில

தினமணி:- * தமிழ்நாட்டில் சிறுகதைகளின் வளர்ச்சிக்கு அல்லயன்ஸ் கம்பெனியார் குறிப்பிடத்தக்க அளவு சேவை செய்திருக்கின்றனர் 4-ஆம் தொகுதியில் சிறந்த சிறுகதைகள் அடங்கியிருக்கின்றன. * புத்தகத்தின் அமைப்பு அழகாக இருக்கிறது. வாங்கி வைத்துக்கொண்டு நினைத்தபொழுது வாசிப்பதற்கும், கல்யாணம் போன்ற சந்தர்ப்பங்களில் பரிசாகக் கொடுப்பதற்கும் ஏற்ற புத்தகம்.

பாரததேவி:- * ஒவ்வொரு கதையும் ஒவ்வோர் அம்சத்தில் மிகவும் சிலாக்கியமாகவே விளங்குகிறது. * தமிழுக்கும் தமிழ்நாட்டுக்கும் அல்லயன்ஸ் கம்பெனியார் பல வருஷங்களாக அபாரத் தொண்டியற்றிவருகின்றனர்.

சக்தி:- * பொதுவாக எல்லாக் கதைகளுமே ஒவ்வோர் அம்சத்தில் சிறந்து விளங்குகின்றன. * தமிழ்நாட்டின் சிறுகதை வளர்ச்சியின் சரித்திரத்திலே அல்லயன்ஸ் கம்பெனியாரின் கதைக் கோவைகள் ஓர் உயர்ந்தஸ்தானம் பெறும் என்று உறுதியாகக் கூறலாம்.

சந்திரோதயம்:- * பல ஆசிரியர்களுடைய பலதரமான கதைகள் இந்தக் கோவையில் அடங்கியிருக்கின்றன. அதில் சந்தேகத்துக்கு இடமே இல்லை. கதைகளில் எல்லா ரகங்களும் இடம் பெற்றிருக்கின்றன.

ஆனந்த விகடன்:- * கதைக் கோவையின் முதல் மூன்று தொகுதிகள் நமக்கு மகிழ்ச்சியை அளித்தன என்றால், இப்போது வெளிவந்திருக்கும் 4-ஆம் தொகுதி நமக்கு மகிழ்ச்சியுடன் ஆச்சரியத்தையும் அளிக்கின்றது. * மற்ற 3 தொகுதிகளைப் போலவே ஒவ்வொரு குடும்பத்திலுமட்டுமின்றி, ஒவ்வொரு வாசகசாலையிலும் அவசியம் இருக்கவேண்டும்.

அல்லயன்ஸ் கம்பெனி,
-மயிலாப்பூர், சென்னை-

எங்கே பார்த்தாலும் சூரியன் விழுவதற்கு முன்னமேயே இருள் சூழ்ந்துவிட்டது. இடைவிடாது முழங்கும் மேகத்தின் குரல், பாறைகள் உருளுகிற முழக்கம், மழையின் சளசள சப்தம், பேய்க்காற்றுக்களின் ஓலம், பல அருவிகள் பாயும் இரைச்சல்-இவை எல்லாம் கலந்து என் செவியில் ஒலித்தன.

இப்பெரும் ஓலங்களுக்கிடையே மணி பன்னிரண்டானதும் கவலையற்றுத் தூங்கவும் ஆரம்பித்தேன்.

பொழுது விடிந்தது; ஒரு மேகங்கூட வானவீதியில் உலாவவில்லை. இரவில் எழுந்த ஓலங்கள் அவிந்துவிட்டன. மலை உச்சிகள்மீது காலைக்கதிர்கள் குதித்தன. மலை அருவிகள் பாடி நகர்ந்தன. அப்பாட்டுச் சூழ்நிலையின் அமைதியை அதிகப்படுத்திற்று. அமைதியின் மடியிலா குழப்பம் உறங்கிக்கிடந்தது, அல்லது குழப்பத்தின் மடியிலா அமைதி துயின்றுகொண்டிருந்தது. இரவின் கர்ப்பத்திலா ஒளி வளர்ந்தது, அல்லது ஒளியின் மடியிலா இருள் தூங்கிற்று—இப்படியெல்லாம் என் மனதில் எண்ணங்கள் ஓடின. வேதங்கள் முழங்கிய 'இருளுக்கப்பால்' என்ற உபதேசம் என்மனத்தில் எழுந்தது. பிரபஞ்சகோர நாடகத்தில் அழகின் தாண்டவத்தைக் கண்டேன். பிரபஞ்ச இடி முழக்கத்தில் அமர கானத்தைக் கேட்டேன். ஊழிக் கூத்தில் சிவபிரானின் மோனங்கண்ட பாரதியின் பாட்டு என் உள்ளத்தில் ஒலித்தது.

"காலத்தொடு நிர்மூலம் படுமூ
வுலகும்—அங்கே
கடவுள் மோனத் தொளியே தனி
யாயிலகும்—சிவன்
கோலங்கண்டுன் கனல்செய் சின
மும் விலகும்—கையைக்
கொஞ்சித் தொடுவாய், ஆனந்தக்
கூத்திடுவாய்
அன்னை, அன்னை
ஆடுங் கூத்தை நாடச் செய்தா யென்னை.

நீர்க் குமிழிபோல வாழ்வு நடத்தும் மனிதன் பஸ்ஸை நடத்தினான். அவன்மீது நம்பிக்கைவைத்து மெய்ம் மறந்து தூங்கினேனே, ஆனால் அகில புவனங்களையும் சாட்டையில்லாப் பம்பரம்போல ஆட்டி வைக்கும் ஆண்டவனிடத்தில் நம்பிக்கை இழந்து சஞ்சலப்பட்டேனே என்று மனம் நொந்தேன். அவ் வேதனையில்—அச்சுடு சோகத்தில்—என் கண்களிலிருந்து நீர்த்திவலைகள் என் கன்னங்களிலே என்னை அறியாமல் வழிந்தன.

டெல்லியிலுள்ள பிரக்யாதிபெற்ற செங்கோட்டை. இங்கேதான் இந்திய தேசிய ராணுவ் விசாரணை நடக்கிறது.



இந்திய தேசிய ராணுவ தற்காப்புக் கமிட்டி—புலாபாய் தேசாய், பண்டிட் நேரு, அஸப் ஆலி, கட்ஜு, ரகுநந் ஸரன்.

இந்திய தேசிய ராணுவ ஆபீஸில்
பண்டிட் நேரு.

மேஜர் லக்ஷ்மி

ஜான்ஸி ராணி படை தயாராகின்றது.

பட்டு

ஆர். கே. விசுவநாதன்

ஆடைகளுள் பட்டாடைகளில்தான் எல்லோருக்கும் விருப்பம் அதிகம். பட்டில் இயற்கைப் பட்டு என்றும் செயற்கைப் பட்டு என்றும் இருவகையுண்டு. இயற்கைப் பட்டு, பட்டுப்புழு தயாரிப்பது. செயற்கைப்பட்டு விஞ்ஞானிகள் தயாரிப்பது. பட்டுப் புழுக்களைப் போல் பட்டு நூலைத் தயாரிப்பதென்றால் அதில் எத்தனையோ இன்னல்கள் இருக்கின்றன. அவை ஒவ்வொன்றையும் விஞ்ஞானத்தின் துணைகொண்டு விஞ்ஞானிகள் அகற்றினார்கள். இதன் பயனாக உலகெங்கும் செயற்கைப் பட்டு நூலைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. நம் நாட்டில் இதற்கு வேண்டிய வசதிகள் ஒருங்கே அமைந்திருப்பினும் இத்தொழிற்சாலைகள் ஏற்படவில்லை. காந்தி அடிகள் ஆடை தயாரிப்பது ஒரு கிராமக் கைத்தொழில் என்றும், எல்லோரும் இராட்டினங்களைச் சுற்றி அவரவர்கள் ஆடைக்கு வேண்டிய நூலை அவரவர்களே தயாரித்துக்கொள்ள வேண்டுமென்றும், அப்பொழுதுதான் நாட்டின் வறுமைப்பிணி போகும் என்றும் கூறுகிறார். காந்தி அடிகள் உள்ளவரையில் தான் கதர் இயக்கம் இருக்குமென்றும், அவருக்குப் பின்னரோ அல்லது நாடு சுதந்தரம் அடைந்த பின்னரோ கதர் இயக்கம் இருக்காது என்றும் சிலர் நினைக்கின்றார்கள். எப்படி இருந்த போதிலும் நாட்டுமக்கள் எல்லோரும் பட்டாடைகள் உடுத்திக்கொள்ளுமாறு குறைந்த செலவில் விஞ்ஞானத்தின் துணைகொண்டு செய்வது சாத்தியம். எனவே இத்தொழிற்சாலைகள் சீக்கிரம் ஏற்படவேண்டும். பட்டைப்பற்றிய விஞ்ஞானத்தை இக் கட்டுரையில் கவனிப்போம்.

இயற்கைப் பட்டு பட்டுப் புழு தயாரிப்பது என்று கூறினோம். பட்டுப் புழு என்பது மல்பரி (Mulberry) என்னும் மரத்தில் தானிருக்கும். இதன் இலைகள் தான் இதற்கு ஆகாரம். புழு வளர்ந்து பெரிதானவுடன் அதனின்று பாகு போன்ற ஓர் உமிழ்நீர் வெளிப்படுகின்றது. இது காற்றுப் பட்டவுடன் உலர்ந்து நூலாகிவிடுகிறது. புழு இந் நூலைக் கொண்டு அதைச்சுற்றிக் கூடு ஒன்றை (Cocoon) அமைத்து விடுகிறது. இக் கூட்டைப் பிரித்தால் இதில் சாதாரணமாக ஆயிரம் கஜத்திற்கு நூல் இருக்கும். கூடு கட்டி முடிந்தவுடன் புழு பூச்சியாக மாறி, கூட்டைக் கிழித்துக்கொண்டு வெளியேறிவிடுகிறது. இவ்வாறு வெளியேவந்த ஆண் பூச்சிகளும் பெண் பூச்சிகளும் சேருகின்றன. பின்னர் பெண் பூச்சிகள் முட்டையிடுகின்றன. முட்டைகள் பொரிந்து புழுக்கள் உண்டாகி வளர ஆரம்பிக்கின்றன. முதன்முதலில் இதைக் கவனித்தவர்கள் சீனர்கள்தான். புழுக்கூட்டிலிருந்து சேதமில்லாமல் நூலை எடுக்கக் கற்றுக்கொண்டார்கள், அநேக புழுக்களை வளர்த்துப் பட்டைத் தயார் செய்யலானார்கள். Sericulture எனப்படும் இயற்கைப் பட்டுப் பண்ணைத் தொழில் நாளடைவில் ஜப்பான், இந்தியா முதலிய மற்றத் தேசங்களுக்குப் பரவலாயிற்று. வெகுநாள் வரை பட்டு இவ்வாறே தயாரிக்கப்பட்டு வந்தது. கூட்டைக்கிழித்துக்கொண்டு புழு பூச்சியாக வெளியேறுவதற்கு முன்பே புழுவை நீராவியினால் சாகவடித்து, கூட்டிலிருந்து நூலைப் பிரித்து எடுத்துவிடவேண்டும். இல்லாவிடில் நூல் நன்றாய் இருப்பதில்லை. எனவே இதை உணர்ந்து முட்டைகள் தயாரிப்பதற்கென்று சில பூச்சிகளைக் கொல்லாமல் விட்டுவிட்டு மற்றப் புழுக்களை நீராவியினாலோ அல்லது சூடான காற்றினாலோ பட்டுப் பண்ணைகளில் கொன்றுவிடுவார்கள்.

பட்டுப் புழுக்களின் வாழ்க்கையைக் கவனித்த விஞ்ஞானிகள் இப் புழுக்கள் தின்று ஜீரணித்து வெளிவிடுவதற்குக்காரணமாயுள்ள மல்பரி இலைகளின் சத்தை ஆராயத் தொடங்கினார்கள். இச்சத்து மரம், செடி, கொடி, புல், பூண்டு முதலிய எல்லாத் தாவர வர்க்கங்களிலும் இருப்

பதைக் கண்டார்கள். இதற்குத்தான் செலுலோஸ் (Cellulose) அல்லது மூல தாவரம் என்று பெயர். எனவே மூல தாவரத்தை மட்டும் பிரித்து எடுத்து அதைத் தக்க இரசாயனப் பொருள்களில் கரைத்து அந்நீரை ஒரு சிறிய துவாரத்தின் வழியாகப்பீரிட்டு வரச்செய்து மறுபடியும் அதை மூலதாவரமாக மாற்றிவிட்டால் பட்டுநூலைப் பெற்றுவிடலாம் என்ற முடிவுக்கு வந்தார்கள். இதைச் செயல் முறையில் கொண்டு வருவதற்கு வேண்டிய விஷயங்களை ஆராயத் தொடங்கினார்கள். இவர்களுள் முக்கியமாக Count chardonnet என்ற அறிஞரையும், Topham என்ற அறிஞரையும் குறிப்பிட வேண்டும். முதல் விஞ்ஞானி இரசாயனப் பொருள்களைக்கொண்டு மூலதாவரத்தை நூலாகச் செய்வதற்கு வேண்டியபடி திரவமாக மாற்றும் வழியைக் கண்டு பிடித்தார். இரண்டாவது விஞ்ஞானி இத்திரவத்திலிருந்து நூல் நூற்பதற்கு ஒரு கருவியை (Spinneret) அமைத்தார். தற்காலம் தொழிற்சாலைகளில் பட்டைத் தயாரிப்பதற்கு நான்கு முறைகளைக் கையாளுகின்றார்கள். அவற்றுக்கு (1) Nitro cellulose அல்லது Chardonnet முறை. (2) Viscose முறை (3) Cupraammonium முறை (4) Cellulose acetate முறை என்று பெயர். இவற்றுள் Viscose முறைதான் மிகவும் பிரபலமானது. எனவே அதைச் சற்று விவரிப்போம்.

Viscose முறைக்கு வேண்டிய மூல தாவரம் மரத்திலிருந்தும் பருத்தியிலிருந்தும் பெறப்படுகின்றது. மரங்களை வெட்டி, கட்டைகளைச் சிறு துண்டுகளாகச்செய்து, பெரிய இருப்புக் கொதி கொப்பறைகளில் போட்டு, தக்க இரசாயனப்பொருள்களைச் சேர்த்து, நன்றாகக்கொதிக்கவைப்பார்கள். கொதித்த பின்னர் இதை இயந்திரத்தின் உதவியால் நன்றாக அடித்துக் கூழாக மாற்றி விடுவார்கள். இக்கூழ்தான் மூல தாவரம். இதை வெண்ணிறமாக்கிச் சுத்திசெய்து விடுவார்கள். பின்னர் இதை அட்டைகளாகச்செய்து விற்பார்கள். இம் மரக்கூழ் அமெரிக்காவில் முக்கியமாகக் கானடா தேசத்தில் ஏராளமாக, தயாராகி அயல் நாடுகளில் காகிதம் செய்வதற்கும், செயற்கைப் பட்டு செய்வதற்கும் வியாபாரம் ஆகிறது. பருத்தியிலிருந்து தயாரித்த கூழுக்கு மரக்கூழைக் காட்டிலும் பட்டு செய்வதற்குச் சில மேன்மைகள் இருந்த போதிலும் மரக்கூழ் விலை சரசமாகக் கிடைப்பதினால் அதையே உபயோகிக்கின்றார்கள். பட்டு தயாரிக்கும் தொழிற்சாலைகளில் முதன் முதலில் இம் மரக்கூழ் அட்டைகளை ஸோடாக்காரத்தில் (caustic soda) ஊறவைப்பார்கள். சில மணி நேரம் ஊறிய பின்னர் அச்சு இயந்திரத்தினால் இவற்றைச் சிறு துகள்களாக மாற்றிவிடுவார்கள். நன்றாக ஸோடாக்காரத்தில் கரைந்தபின் Carbon bisulphideஎன்னும் மற்றொரு திரவத்தை இதில் சேர்ப்பார்கள். இதற்கென்று தொட்டிகளுண்டு. தொட்டிகளில் கலவையை நன்றாகக் கலக்கிவிடுவதற்கு வசதி இருக்கும். இரசாயனச் சேர்க்கை முற்றுப் பெற்றவுடன் சுத்தமான தண்ணீரைச் சேர்த்து இதை நன்றாக வடிக்கட்டி விடுவார்கள். இக்கலவைக்குத்தான் Viscose என்று பெயர். இக்கரைநீரை உறையச் செய்வதும் நூலாக இழுப்பதும் ஒரே சமயத்தில் நடைபெறவேண்டும். உறையச் செய்வதற்கென்று சில இரசாயனப் பொருள்களை உபயோகிக்கின்றார்கள். இவற்றில் பலவகையுண்டு, Muller bath என்ற ஒருவகையில் Sodium bisulphate, sulphuric Acid இரண்டையும் சேர்த்து அக் கரைநீரை உபயோகிக்கின்றார்கள். நூல் நூற்பதைச் சற்று விவரிப்போம். படத்தைப் (படம் 1) பார்க்கவும். இதில் இடது புறமுள்ள தொட்டியிலிருப்பது. Viscose நீரை உறையச்செய்யும் கரைநீர். இதனுள்ளிருக்கும் குழாயின் வழியாக Viscose நீர் வெளிவருகின்றது. இக் குழாயின் முனையில் உள்ள மூடியில் சிறு துவாரங்கள் இருக்கும். இம்மூடிக்கு Spinning Jet என்று பெயர். (படம் 2) இரண்டாவது படத்தைக் கவனிக்கவும். இதில் மூன்றுவித மூடிகள் காண்பிக்கப்பட்டிருக்கின்றன. அவை ஒவ்வொன்றிலுமுள்ள துவாரங்களின் எண்ணிக்கை வேறுபடும். தற்காலம் துவாரங்கள் அதிகமாயுள்ள மூடியையே உபயோகிக்கின்றார்கள். இத்துவாரங்களின் வழியாகத்தான் Viscose திரவம் பீரிட்டு வெளிவரும். இது அவ்வாறு பீரிட்டு வெளிவரும்போது தொட்டியில் உள்ள கரைநீரினால் உறையச் செய்யப்பட்டு, இறுகி

நூலாக மாறிவிடுகிறது. எல்லாத் துவாரங்களிலுமிருந்துவரும் பகுதிகளை ஒன்றாகச்சேர்த்து, ஒரு சகடை இழுக்கும். இச்சகடையை முதல் படத்தில் பார்க்கவும். சகடை எப்பொழுதும் நிதானமாகச் சுற்றிக்கொண்டிருக்கும். அதைத் தாண்டி வரும் நூல் ஒரு புனல் வழியாக வந்து அதற்கடியிலுள்ள பெட்டியில் நுழைவதைக் கவனிக்கலாம். இப்பெட்டியும் சுற்றிக்கொண்டிருக்கும். பெட்டி சுற்றும் வேகத்திற்கும் சகடை சுற்றும் வேகத்திற்கும் தகுந்தவாறு நூலில் முறுக்கேறும். பெட்டியின் உட்பக்கங்களிலேயே நூலைச் சுற்றிவிடுவார்கள். இதையும் படத்தில் பார்க்கலாம். பின்னர் நூலைக்கழுவி, வெளுத்து, அதிலுள்ள நீரை உறிஞ்சிவிட்டு, கண்டுகளாகச் செய்துவிடுவார்கள். இதுதான் இம்முறையின் தத்துவம். ஆனால் இதில் அனேக தொழில் நுட்பங்கள் இருக்கின்றன. அவற்றை எல்லாம் இங்கு விவரிப்பது கஷ்டம்.

இவ்வாறு தயாரித்த செயற்கைப் பட்டு முற்றிலும் இயற்கைப் பட்டுபோலிருப்பதில்லை, முதல் வேற்றுமை நிறத்தில்; செயற்கைப் பட்டு இயற்கைப் பட்டைக் காட்டிலும் பகட்டாகவும் பளபளப்பாகவும் இருக்கும். இதை எவ்வாறு நிவர்த்தி செய்வது என்று முதலில் விஞ்ஞானிகளுக்குத் தெரியவில்லை. ஆராயுங்கால் செயற்கைப் பட்டின் முறுக்கையும், நெகிழ்ச்சி வன்மையையும் சற்று மாற்றுவதினால் பளபளப்பை ஓரளவுக்குக் குறைக்கமுடியும் என்று கண்டார்கள். நூலுக்கு ஓரே நிதானமாக முறுக்கேற்றினாலன்றி அதில் இடத்திற்கு இடம் நிறம் மாறுவதையும் கண்டார்கள். சில இரசாயனக் கலவைகளில் நூல்கண்டுகளை ஊறவைத்தும் பளபளப்பைக் குறைக்கலாம் என்று அறிந்தார்கள். இது சம்பந்தமாகச் செய்த சோதனைகளில் எக்ஸ்ரே பட சோதனைகள் பெரிதும் பயனளித்தன. இப் படங்களின் உதவியைக்கொண்டு நூலில் உள்ள துகள்களின் அமைப்பைப் பற்றிய விவரங்கள் பலவற்றை அறிந்தார்கள். இவற்றை எல்லாம் பயன்படுத்தி இயந்திரத்தைச் சீர்திருத்திப் பட்டுநூலைத் தயாரித்து வருகின்றார்கள். இயற்கைப் பட்டுக்கும் இதற்கும் உள்ள மற்றொரு வேற்றுமை நூலின் பலம். இயற்கைப் பட்டுக்கு செயற்கைப் பட்டுக்கு உள்ளது போல் அவ்வளவு பலம் இல்லாமலிருப்பதைக்கண்டார்கள். இது சாயம் போடும் போது தெரியவந்தது. சாயம் போடுவதற்குமுன் பட்டாடைகளை நீரில் நனைக்கவேண்டும். அபொழுதுசெயற்கைப் பட்டுநூல் சுருங்கி, பலம் குறைந்து நிற்பதைக் கண்டார்கள். முன்னர் கூறிய நான்கு முறைகளில் Cellulose acetate முறையில் தயாரித்த நூலுக்குத்தான் பலம் அதிகமாக இருப்பதும் தெரியவந்தது. பெருத்த அளவில் பட்டைத் தயாரிக்கும்போது இம்முறை அவ்வளவு இலாபகரமாக இருப்பதில்லை ஆகையால் மற்ற முறைகளில் தயாரித்த நூலுக்குப்பலத்தை எவ்வாறு அதிகரிக்கலாம் என்று ஆராய்ந்து வருகின்றார்கள். இதுபோல இயற்கைப் பட்டுக்கும் செயற்கைப் பட்டுக்கும் வேற்றுமைகள்பலஉள. இருந்தபோதிலும் தற்காலம் செயற்கைப் பட்டில்



படம் 1

ஏராளமாக ஆடைகள் செய்யப்படுகின்றன. இப்பட்டு சேர்ந்த பருத்தி ஆடைகளும் தயாராகின்றன. மற்று,செயற்கைப் பட்டு மின்சாரத்தைக் கடத்திச்செல்லாது. இது ஓர் உகையாப்பொருள் (Non-conductor). எனவே மின்சாரத்தைக்



படம் 2

கடத்திச்செல்லும் உலோகக் கம்பிகளுக்கு உறையாக இது பெரிதும் பயன்படுகிறது. செயற்கைப் பட்டுத் தொழில் விருத்தியாந்து ஒரு விசித்திரம் என்றே சொல்ல வேண்டும். முதலில் இதற்கு இருந்த எதிர்ப்புக்கு அளவே இல்லை. இதன் வளர்ச்சியைப் புள்ளி விவரங்களிலிருந்து அறியலாம். 1909-ஆம் வருஷத்தில் உலகத்தில் மொத்தம் செயற்கைப் பட்டு ஒன்றரைக் கோடி பவுண்டுதான் தயாராகி விற்கப்பட்டது. 1924-ஆம் வருஷத்தில் இதைப்போலப் பத்து மடங்கு அதிகரித்தது. 1929-ஆம் வருஷம் 1924ல் இருந்ததைவிட நான்கு மடங்கு அதிகரித்தது. பட்டு மேனாட்டில் ஒவ்வொரு இடத்திலும் செய்யப்படுகிறது. எண்ணற்ற துறைகளில் இது உபயோகப்படுகின்றது. எல்லா முறைகளையும்விட Viscose முறைதான் பெரும்பாலும் கையாளப்படுகின்றது. இத் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய எல்லா வசதிகளும் நம் நாட்டில் இருக்கின்றன. ஏன் இவற்றை இங்கும் ஏற்படுத்தக்கூடாது. அப்பொழுதுதான் அயல்நாட்டுப் பட்டாடைகளை வாங்குவதில் செலவழிக்கும் நமது பணம் முழுவதும் நாட்டிலேயே இருக்கச் செய்வதுடன் எல்லோருக்கும் மலிவாக இவ்வாடைகளைக் கிடைக்கும்படி செய்வதும் சாத்தியமாகும்.



ஒரு சுத்தமான ஊற்றிலிருந்து

இயற்கை மைசூர் காடுகளில் மிக உன்னதமான சந்தன மரங்களை உண்டாக்கி யிருக்கிறது. இது தான் நூற்றுக்கணக்கான வருஷங்களுக்கு மிகவும் கீர்த்தியான சந்தன அத்தருக்கு ஆதாரம். இத்துடன் தற்கால விஞ்ஞானமுறைகளும் சேர்ந்து நூற்றுக்கு நூறு சுத்தமான உயர்ந்த மைசூர் சந்தன அத்தர் கிடைக்கிறது. அது மருந்துகள், சோப் அல்லது வாசனை திரவியங்கள் தயாரிப்பதற்கு இன்றியமையாதது.

மைசூர்
சந்தன அத்தர்

MSK 16 TM

மைசூர் கவர்ன்மெண்ட் தயாரிப்பு.

ஜெய்பூரில் நடந்த எழுத்தாளர் மஹாநாட்டிற்குத் தலைவர் ஸ்ரீமதி ஸரோஜினி செல்லுகிறார். அவருடன் ஸர் எஸ். ராதாகிருஷ்ணன் காணப்படுகிறார். பண்டித நேருவும் மற்றும் சில முக்கியஸ்தர்களும் செல்லுகிறார்கள்.

அம் மஹாநாட்டில் கலந்துகொண்டவர்கள்.

தம் பிறந்தநினத்தன்று தம்மைக் காணவந்தவர்களுக்கு கையெழுத்துப் பரிசு அளிக்கிருர் மஹாத்மா.



வைசிராய் அவர்களைச் சந்திக்க காந்திஜி ஸிம்லா சென்றபொழுது எடுத்த படம். ஜி. டி பிர்லா, ஸ்ரீமதி ஆஸப் ஆலி, காந்திஜி, ஆசாரிய கிருபாலினி, முதலியவர்களைக் காணலாம்.

மஹாத்மா காந்தி அடிகள் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட்டின் பெண்களுடன் செல்லும் பொழுது எடுத்த படம்

காந்திஜி பிரார்த்தனைபவனைத் திறந்துவைக்கும் விழா. படத்தில் காந்திஜி, பாபு ராஜேந்திர பிரஸாத் முதலியவர்கள் விழாவுக்குச் செல்லும் காட்சி.

"The TRAVELLER"

பிரயாணியும் கால அளவும்

வியாபார நிமித்தம் குறிப்பிட்ட காலத்தில் பலரைப் பேட்டிகாண வேண்டி பிரயாணம் செய்பவராயினும் அல்லது சாதாரணமாக அலுவல்களில் பஸ், ரயில் இவைகளுக்குச் செல்ல விரும்புகிறவர்களும் வெஸ்ட் எண்டு போன்ற தகுதியான கடிகாரங்களை உபயோகிக்காமல் இருக்கமுடியாது. நவீன அமைப்புள்ளதும், ஆயுள் பூராவும் தவராது உழைக்கக்கூடியதுமாயுள்ள எல்லாரக வெஸ்ட் எண்டு கடிகாரங்கள் சீக்கிரத்தில் ஏராளமாகக் கிடைக்கும் என நம்புகிறோம்.

– and the time factor



ஸெகண்டஸ் நியூ காலிபர் கர்வட்
9-காரட் கட்டித்தங்கம் சாதா டயலுடன் .. ரூ. 125

இந்தியாவுக்கென உயர்தர கடிகாரங்கள் தயாரிப்பவர்கள் என 75 வருடங்களாக பிரக்யாதிப் பெற்றது நமது வெஸ்ட் எண்டு மாடல்கள்.

வெஸ்ட் எண்டு வாட்ச் கம்பெனி
பம்பாய் கல்கத்தா

WEST END WATCH Co.

BOMBAY CALCUTTA

தொடர் கதை

அம்பாச்சாரி

கே. சுந்தரம்மாள்

— 7 —

"ஆ ஆ ஆ ஆ அ அ, குதூகலிப்பதும் ஏனோ" என்று பாடிக்கொண்டே கண்ணாடிமுன் நின்றுகொண்டு, தோட்டக்காரன் மனைவி கட்டிவைத்த மல்லிகையும் கனகாம்பரமும் கலந்த செண்டைத் தலையில் வைத்துக்கொண்டு, ஸ்னோ பவுடர் போட்டு, குங்குமத்தை நெற்றியில் இட்டுக்கொண்டு, அதைச் சரிபண்ணிக்கொண்டிருந்த குந்தளத்தின் பின்பக்கம் வந்த சித்தி, "குந்தளம்! இனி நீ நெற்றிக்குக் குங்குமம் வைத்துக்கொள்ளக்கூடாது, புஷ்பம் சூடக்கூடாது, கையில் கண்ணாடி வளையல் அணியக்கூடாது" என்றாள்.

விபரம் தெரியாத கலவரத்துடன் திரும்பிய குந்தளம், "ஏன் சித்தி, இதுவிஷயம் கூட உன் கட்டுப்பாடா?" என்றாள்

"என் கட்டுப்பாடல்ல; தெய்வத்தின் கட்டுப்பாடு"

"தெய்வத்தின் கட்டுப்பாடா? என்னவெல்லாமோ சொல்லுகிறாயே? எனக்குப் புரியவில்லை. சொல்லுவதை விளங்கச் சொல்லிவிடு" என்றாள் படபடப்பாக.

"நீ கைம்பெண்; அதனால்தான் கூடாது என்றேன்."

மலைபுரண்டு தலையின்மீது விழுந்தது போன்ற உணர்ச்சிதான் தோன்றிற்று. பக்கத்திலிருந்த மேஜையைப் பிடித்துக்கொண்டு, "கைம்பெண்ணா? யார் சொன்னது? இவ்வளவு நாளில்லாமல் இன்று இந்தக் கட்டுப்பாடு ஏன்? எனக்குக் கல்யாணமானதாகக் கனவுகூடக் கண்டதில்லையே" என்றாள்.

"எல்லாம் கனவாகத்தான் நடக்கின்றன. இதுவிஷயம் உன் அப்பா எனக்குக்கூடத் தெரியாமல் மறைத்துவைத்தார். இதனால் தான் தம் மனிதர் என்று ஓர் ஊருக்குச் செல்வதற்கோ, தம் மனிதர்களை இவ்விடம் அழைப்பதற்கோ விருப்பமிருந்தார் போலும். அக்கிரமம் எவ்வளவுநாள் ஜயிக்கும். வேறு அயலார் ஒருவரும் சொல்லவரவில்லை. உன் அத்தை லக்ஷ்மிதான் நேற்று விபரம் சொன்னாள். ரங்கூனில் உன் அம்மா இருக்கும்பொழுது ஆறு வயதில் பத்து வயதுப் பிள்ளைக்கு உன்னைக் கல்யாணம் செய்துகொடுத்தார்களாம். ஆறு மாதத்திற்கெல்லாம் அந்தப்பிள்ளை இறந்து போய்விட்டதாம். அந்த ஏக்கத்திலேயே உன் தாயார் இறந்துபோனாளாம். இந்தக் கல்யாணம் ஒருவருக்கும் தெரியாதாம். சாரதா சட்டத்திற்குப் பயந்து இரகசியமாக நடந்ததாம். லக்ஷ்மி மட்டும் அவ்விடமிருந்ததால் விஷயம் அவளுக்குத் தெரியும். தகப்பனாருக்கு ஒரே பிள்ளையாம், தாயார் இல்லையாம், பிள்ளை இறந்ததும், உன் அப்பாவிடம் சொத்துக்களை ஒப்பித்து, வேண்டுமானால் உனக்கு மறுகல்யாணம் செய்யும்படிக்கும், அப்பொழுது அவரின் ஸ்வீகார புத்திரியாகச் சொத்தை ஸ்ரீதனமாகக் கொடுக்கும்படி சொல்லிவிட்டு யார் பேச்சையும் கேளாமல் இரவே எங்கேயோ சென்றுவிட்டாராம். உன் அப்பா லக்ஷ்மியை இதுபற்றி ஊரில் யாதொன்றும் சொல்லவேண்டாமென்று கேட்டுக்கொண்டாராம். ஆனால் கல்யாணம் செய்து கொடுப்பாரென்று அவள் எதிர்பார்க்கவில்லையாம். நேற்று நான் முகர்ஜி பிள்ளை உன் பக்கத்தில் உட்கார்ந்து கொஞ்சினானே அது தவறு, சீக்கிரம் கல்யாணத்தை நடத்த வேண்டுமென்று சொன்னேன். அதன் பிறகு அவள் முழுவிபரமும் சொன்னாள்."

"என் மனம் இவையொன்றையும் நம்பவில்லை. எனக்குச் சற்றுக்கூட நினைவு தோன்றவில்லை"

"நம்பமாட்டாயா? அந்த அப்பனுக்குப் பிறந்த பெண்தானே, இரு, இதோ நம்ப வைக்கிறேன்" என்று உள்ளே சென்று ஒரு சிறிய போட்டோவைக் கொண்டுவந்து அவள் முன் மேஜையில் வைத்தாள். அதில் சற்று வயிறு முன்தள்ளி, மார்பு எலும்பு எழும்பி, கை ஒட்டவைத்தாற்போல் தொங்க, உடம்பிற்குமேல் பஞ்சகச்ச வேஷ்டியும், மாலையும் கழுத்துமாகப் பத்து வயதுப் பிள்ளை நிற்க, அவன் கையைப் பற்றியவண்ணம், குருவிக்காரப் பெண்ணைப் போல் பாவாடையும் சட்டையும் அணிந்து, தலையில் நெற்றிசரம் முதலியவைகள் கட்டி, கழுத்தில் சங்கிலி காசுமாலை இவைகள் விளங்க, கீழே பார்த்த விழியுடன் நிற்கும் பெண்ணைப் பார்த்ததும் அந்த நிலைமையிலும் அவளுக்குச் சிரிப்பு வந்தது.

"சித்தி! இதுவா என் படம்? நான் நம்ப மாட்டேன். நெல்லுத்தின்ற கன்றுக்குட்டி போலிருக்கும் இந்தப்பிள்ளைக்கா என்னைக் கொடுத்திருப்பார்? ஒருகாலுமில்லை." என்ருள் கோபமாக.

"இல்லையம்மா எல்லாம் உண்மைதான்" என்ருள் அவ்விடம் வந்த லக்ஷ்மி.

"என்ன அத்தை! எவ்வளவு நாட்களாக அடம் வைத்துக்கொண்டிருந்தாய் இப்படிப் பழி தீர்க்க, நான் உன்னை இதுவரை சரியாகக்கூடப் பார்த்ததில்லையே,"

"அம்மா குந்தளம்! என் வயிறு அக்கினியாக இருக்கிறது, உன் வாழ்வை நினைக்க. என்ன செய்வது? எல்லாம் விதி. விதியின் போக்கிற்கு வழிவிடுவது நமது கடமை"

"விதியுமாச்சு, கடமையுமாச்சு. சரி, அப்படியே இருந்தாலும் நான் புஷ்பம் வைத்துப் பொட்டு இட்டுக்கொண்டால் என்னவாம்?"

"அது குடும்பத்திற்கு ஆகாத காரியம். பின்னுள்ள குழந்தைகள், உன் அப்பா யாவரும் சுகமாக வாழவேண்டும்" என்ருள் சித்தி.

"இதைப்பார் சித்தி, வீணாக அவ் விஷயத்தில் குறுக்கிடாதே, நீ சொல்லுவது போல் நான் கைம் பெண் என்ருலும், இதுவரை இருந்ததுபோலத் தான் இனிமேலும் இருப்பேன். சுதாவாகவே கல்யாணம் செய்து கொள்ளாமல் படிக்கவேண்டும் என்று நினைத்தேன். அதன்படி இனி தடையில்லாமல் செய்யலாம். நான் வளைபோட்டுக் கொள்ளுவது முதலிய விஷயங்களால் கெடுதி ஏற்படுமென்ருல் அதை நான் நம்ப மாட்டேன், அப்படி ஏற்படுவதானல் இது வரை ஏற்பட்டிருக்கவேண்டும். அது இல்லை. அப்பாவுக்கு வருஷம்தோறும் சம்பள புரமோஷனும் பதவி உயர்வும் எல்லாம் கிடைக்கின்றன. உனக்கும் பிள்ளையும் பெண்ணுமாக முத்தும் பவழமும் போல் பிறந்து வருகின்றன. என்மட்டில் நிம்மதியாகவே இருந்து வருகிறேன். எதற்காக நான் அவைகளை விலக்கவேண்டும்?"

"இதுவரை விஷயம் தெரியாது. எதற்கும் அறியாமல் செய்வதற்குத் தோஷமில்லையென்று பெரியவர்கள் சொல்லுவார்கள். அதனல் நிச்சயம் நீ அவைகளை விலக்கித்தான் ஆகவேண்டும், நீ பச்சைக்குழந்தையல்ல, விபரமில்லாமல் பேசுவதற்கு. வயது பத்தொன்பது ஆகப் போகிறது" என்ருள் சித்தி.

"அறியாமல் செய்தால் தோஷமில்லை யல்லவா? எனக்கு அறியாமல் செய்த கல்யாணத்தினல் ஏற்பட்ட விளைவிற்குத் தோஷமே கிடையாது. நான் எப்பொழுதும் ஒன்று போலவேதான் இருப்பேன்"

"என்ன லக்ஷ்மி! மரம்போல் நிற்கிறீர்களே? அவளைப் படிக்கவைத்ததிற்கு நன்ருக விதண்டா வாதம் பேசுகிருள். நீங்கள் இதற்கு வழி செய்துவிட்டுத்தான் போகவேண்டும்"

"நான் என்னத்தைச் சொல்லுவது! நான் இவ்வளவு நாட்களுக்குப் பின் இவ்விடம் இக்கொடுமைக்காகவா வந்தேன்? என் தேகமே பற்றி எரிகிறது. மன்னி! போகட்டும். விஷயம் நமக்குள் இருக்கட்டும். அவளைத் தடை செய்யாதே"

"போருமே உங்கள் உபதேசம். இன்று இப்படி. நாளை அந்த மாராட்டியனுடன் கைகோத்துச் செல்வாள். ஏழை என்ருல் என் இஷ்டம் இதனல் உங்களுக்கு என்ன தொந்தரவு என்பாள். அதெல்லாம் வீண் பேச்சு. இது விஷயம் நான் சொல்லுவது போல் நடந்துதானுகவேண்டும்"

"அம்மா குந்தளம்! வேண்டாமே. விதி அப்படிச் சதிசெய்து விட்டது. உன் அம்மாதான் இதற்கு மூல காரணம். ஈசனுக நமக்குவேண்டாம் என்று தள்ளி வைத்ததை நாமாக ஏற்கலாமா?"

அதுவரை தைரியத்துடன் எதிர்த்துப் பேசிய குந்தளத்தின் மனம் அளவுகடந்த துக்கத்தை அடைந்துவிட்டது. "அத்தை விதி சதி என்று என்னைப் பழிசாட்டுகிருள், நீயும் ஒத்துப்பேசுகிருய்; என் அம்மா இருந்தால் இப்படி இரக்கமற்றுப் பேசுவாளா? இப்படி எல்லாம் என்னை ஹிம்ஸிப்பதைவிட விஷம் வைத்துக்கொன்றுவிடுங்கள். யாவருக்கும் நிம்மதி. ஏன் உலகமே நிம்மதியடையட்டும்" என்று விக்கி விக்கி அழுதவாறு கூறினள்.

அந்தச் சமயம் வெளியிலிருந்து உள்ளே வந்த கிருஷ்ணசுவாமி சர்மா, தம்மனைவி கையில் குந்தளம் தலைக்கு வைத்துக் கொள்ளும் புஷ்பச்செண்டு இருப்பதையும் பார்த்து, குந்தளத்தின் கடைசி வாக்யத்தையும் கேட்டுக்கொண்டே வந்ததும், விஷயம் ஒருவாறு விளங்கிவிடவே, தம்மை மறந்தார்.

"லக்ஷ்மி! விசாலம்! என்ன இது?" என்று அவர் கேட்டபாணியும், தோற்றமும் என்று

மில்லாத விதமாக அவர்களை நடுங்கும்படி செய்தன. லக்ஷ்மிக்கு ஓவென்று கதற வேண்டும்போலிருந்தது. கண்களிலிருந்து நீர்வடியப் பதுமைபோல் குந்தளத்தைப் பார்த்தவண்ணம் நின்றாள்.

"லக்ஷ்மி, எல்லாம் உன்னால் விளைந்தது. உன்னுடைய ஸஹோதர அன்பின் செய்கையா இது? விசாலம்! அதிகம் சொல்லப் போவதில்லை. ஆனால் சொன்னபடி நடப்பேனென்பது உனக்குத் தெரியும். குந்தளத்தினிடம் இவ்விஷயம்பற்றி இந்த வீட்டில் எதுவும் பேசக்கூடாது. அவள் எப்பொழுதும்போலவே இருப்பாள். அதனால் விளையும் பலாபலன் என்னைச் சார்ந்தது. மீறி ஏதாவது சொல்லவும் செய்யவும் நேர்ந்தால் அந்த நிமிஷமுதல் நான் உனக்கு அன்னியன். உன் குழந்தைகளுடன் ஊர் போய்ச்சேர். தகப்பனும் பெண்ணுமாக எவ்விதக்கஷ்டத்தையும் ஏற்றுக்கொள்ளுகிறோம். எங்களுக்கு நூறு ரூபாய்போகப் பாக்கி ஆயிரம் ரூபாயையும் உனக்கு அனுப்பிவிடுகிறேன். கஷ்டமில்லாமல், சுகமாக இரு. வேறு பேச்சிற்கு இடமில்லை" என்றார் சர்மா?

"அவளைத்தான் பெற்றெடுத்தீர்களா? இவர்களை விலைக்கு வாங்கினீர்களா? இதென்ன கொடுமைப்பேச்சு" என்றாள் விசாலம்.

"அப்படி நினைப்பது நீ. உன் வயிற்றுப் பெண்ணாக இருந்தால் இவ்விதம் இரக்கமில்லாமல் பேசுவாயா?"

"இப்போ என்ன சொல்லிவிட்டேன்; நம் குலாசாரவழக்கத்தை எடுத்துச் சொன்னேன். அதுவும் என்னைத்தானே உலகம் தூற்றும். வேண்டாம் எக்கேடு கெட்டுப் போகட்டும். அந்தப் பையனை பக்கத்தில் உட்காரவைத்து அழகுபார்த்து ஆனந்தம் அடைந்ததுபோல், அவனுக்கே கல்யாணத்தையும் செய்துகொடுத்து ஆனந்தப்படுங்கள். எல்லோரும் கொண்டாடுவார்கள். பின்னுள்ள குழந்தைககள் எக்கேடும் கெடட்டும்" என்றாள் மனைவி விசாலம்.

"சீச்சீ! வாயைமூடு. பின் குழந்தைகள் முன் குழந்தை எல்லாவற்றின் சுகதுக்கங்களையும் கவனிப்பது என் பொறுப்பு. உனக்கு ஒருவிதக் குறைவும் இல்லாமல் பார்த்துக்கொள். அவ்வளவே. அந்தப் பையன் உன் வீட்டுப் பண்ணைக்காரனல்ல. பணத்திலும் பதவியிலும் அவர்களை மிஞ்சுபவர் இந்த ஜில்லாவிலேயே கிடையாது. அவன்

பிராஞ்சு:
பெரிய தெரு,
கும்பகோணம்.

நமது வீடு தேடிவந்ததினாலேயே அவன் அருங்குணம் தெரியவில்லையா? அப்படி அவன் பிரியப்பட்டுக்கேட்டால், என் குந்தளம் மிக்க பாக்யவதி'' என்று சொல்லிவிட்டு, விசாலத்தின் கையிலிருந்த மல்லிகைச்செண்டை வாங்கி, குந்தளத்தின் தலையில் வைத்துவிட்டு, கைகுட்டையினால் அவள் கண்ணைத் துடைத்து, ''குந்தளம் இவர்கள் பேச்சைக் காதில் வாங்காதே. உன் இஷ்டப்படி நடக்க நான் அனுமதிக்கிறேன். காலேஜுக்குப்போ'' என்றார் சர்மா.

''அப்பா! இவர்கள் சொல்லுவது உண்மைதானா?''

''அதைப்பற்றித் தெரிந்து என்ன ஆக வேண்டும்?''

''இல்லையப்பா, விஷயத்தைச் சொல்லிவிடுங்கள்; நீங்கள் மறைத்துவைத்ததினால் தானே இப்படியெல்லாம் பேசுகிறார்கள். ஏனப்பா, இந்தக் குரங்குமூஞ்சி சூனாவயிற்றுப்பிள்ளைக்கு என்னைக் கல்யாணம் பண்ணிக்கொடுக்க எப்படி மனம் வந்தது?''

''ஐயோ, குந்தளம்! என் அணைந்த தியைப் பற்றவைக்காதேயேன். அந்தப் பிள்ளை படத்தில் இப்படி இருக்கிறான். பார்ப்பதற்கு நல்ல சிகப்பான ஆள்தான். உன் தாயார், அந்தப் பிள்ளைக்குத் தாயார்மூன்று வயதில் இறந்துபோனதினாலும், ஒரேவீட்டில் நாங்கள் குடியிருந்ததினாலும், அவனை வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டாள். அவர் மறுவிவாகம் செய்துகொள்ளாமல் பரிசாரகன் வைத்துச் சமைத்துச் சாப்பிட்டார். அடுத்த வருஷம் நீ பிறந்தாய். வளர்த்த பாசமும், அவளது கர்மவியாதியும் காரணமாக அந்த விவாகம் நடக்கும்படி நேர்ந்தது. நான் செய்த அறியாமையினாலான காரியத்திற்காக உன்னைப் பலியிட விரும்பவில்லை. இதனால் என்ன நேர்ந்தாலும் ஏற்கத்தயார். நீ கவலை இல்லாமலிரு. இன்று மாலை முகர்ஜீ வீட்டில்ஏதோ டீபார்ட்டியாம். உனக்கு எனக்கு இருவருக்குமாக, அழைப்புக்கடிதம் வந்திருக்கிறது. காலேஜிலிருந்து வந்தவுடன் உடுத்துக்கொண்டு தயாராக, காரில் ஆபீஸிற்கே வந்துவிடு, நான் அவ்விடமிருந்து நேராக வந்து விடுகிறேன்'' என்றார் அன்புடன் செல்வியின் கலைந்த் கூந்தலைத் திருத்தியவாறு.

''அவர் சொல்லும், செய்கையும் குந்தளத்தின் மனதில் ஒருவித சாந்தியை அளித்தன. ''அப்பா!'' என்றாள். மேலே பேசவிடாமல் ''குந்தளம்! என் கண்ணல்லவா! இப்பொழுது யாதொன்றும் பேசாமல், காலேஜுக்குச் சென்றுவிடு. அப்பொழுது தான் என் மனம் சாந்தியடையும்'' என்றார்.

ஒன்றும் பேசாமல் சைக்கிளை எடுத்துச் சென்றாள்.

— 8 —

டீபார்ட்டியில் ஒரு மேஜையில், குந்தளம், விமலா, சந்தர், அவன் சித்தி நால்வரும் உட்கார்ந்து டீ அருந்தினார்கள். காலைச் சம்பவம் குந்தளத்தின் மனதை வாட்டி வந்தது. எவ்வளவு முயன்றும் முகத்தில் சாயை தெரிந்தது. விமலாவினிடம் இவ்விஷயத்தைச் சொல்ல வேண்டுமென்ற ஆவல் துடித்தது. சமயம் கிடைக்கவில்லை. எப்பொழுது பார்ட்டி முடியும், தானும் விமலாவும் தனியே சென்று பேசலாம், என்று எண்ணமிட்ட வண்ணம் ஏதோ சாப்பிட்டாள். இவளின் முகமாறுதலைக் கண்ட சந்தர் ''குந்தளம், இன்னும் உடம்பு நன்றாகவில்லையா? ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய்?'' என்றான்.

''இல்லையே, உடம்பிற்கு ஒன்றுமில்லை'' என்றாள்.

சந்தரின் சித்தி சுசீல் குமாரி இவர்களிடம் மிகவும் பிரியமாகச் சிரித்து விளையாடிப் பேசிக்கொண்டிருந்தாள். பார்ட்டி முடிந்ததும், டான்ஸ் ஆரம்பமாயிற்று. சற்றுநேரம் வந்தவர்களை உபசரித்துவிட்டு, விமலா குந்தளம் இருவரையும் அழைத்துக் கொண்டு தனது பங்களா முழுவதும் சுற்றிக் காட்டினாள், அந்தச் சமயம் விமலாவின் மனதில், ''சந்தரை நாம் அடைந்தால் இப்பாக்கியங்களும் இவ்வுத்தம குணமுள்ள சுசீல் குமாரியிடம் வாழும் பாக்கியமும் கிடைக்கும், இதற்கு இடைஞ்சல் இக்குந்தளமாகத்தான் இருக்கவேண்டும், என்ன உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாக முடியுமா?'' என்று நினைக்க, குந்தளத்தின் மீது சற்றே பொறாமை தோன்றிற்று. குந்தளத்தின் மனதில் யாதொரு சலனமும் தோன்றவில்லை. அதைவிட்டுப் பிரியும் சமயத்தையே எதிர் பார்த்திருந்தாள். யாவும் முடிந்து எல்லோரும் புறப்பட்டார்கள். ஒவ்வொருவராக விடை கொடுத்து அனுப்பிவிட்டு, குந்தளமும் விமலாவும் நிற்குமிடம் வந்து, ''குந்தளம், விமலா! உங்கள் இருவரையும் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. நீங்கள் அடிக்கடி இவ்விடம்

வந்துவிட்டுப் போகவேண்டும்.'' என்ருள் சுசீல்குமாரி.

''உங்கள் அன்பு எங்களை மிக்க மகிழ்ச்சிக்குள்ளாக்குகிறது. கரும்பு தின்னக் கூலியா? அவசியம் வருகிருேம், சென்று வரட்டுமா? அம்மா! சந்தர்! போய்வருகிருேம்'' என்று சொல்லிக் கைகூப்பி வணங்கிவிட்டுச் சென்ருர்கள் இருவரும்.

அவர்கள் வண்டி புறப்பட்டதும், ''சந்தர், இருவரும் நல்ல அழகிகள்; உயர்ந்த குணமும் பரந்த நோக்கமும் கொண்டவர்களாக இருக்கிருர்கள். ஆனாலும் அந்த மதராஸிப் பெண்ணின் அடக்கம் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. அவள் மாத்திரம் மராட்டியப் பெண்ணுக இருந்தால் நிச்சயம் மருமகளாக்கிக் கொள்ளப் பிரியப்படுவேன்; உனக்கும் விருப்பமில்லையென்று சொல்ல ஓர் அம்சமும் கிடையாது என்று நினைப்பேன்'' என்ருள் சுசீல்குமாரி.

''ஏன் சித்தி! அப்பெண்ணிடம் அவ்வளவு விசேஷப்பிரியம். விமலாவின் குணம் மட்டும் குறைந்ததா? இருவரும் சமமென்றே நினைக்கிறேன்''

''இருக்கலாம். ஆனால் எனக்கு அந்த மதராஸிப் பெண்ணின்மேல் தான் அதிகப் பற்றுத் தோன்றுகிறது, சில சமயம் காரணமில்லாமல், ஒரிவரிடம் பற்று ஏற்பட்டு விடுகிறது. அதுவிஷயம் மனதின் விசித்ரமா, விதியின் விசித்ரமா! என்று சிந்திக்க வேண்டியதுதான்.''

''உனக்குப் பிரியமானல் எனக்கும் அதுதான் மிகவும் இஷ்டம். உனக்கு அவள் மருமகளாக வரவேண்டும்என்ற விருப்பமானல் சொல்லு, நான் கல்யாணம் செய்துகொள்ளுகிறேன்.''

''அது எப்படியப்பா முடியும்? மதராசிப் பிராமணன் என்ருல் தாழ்மையல்ல. நாம் ஏற்றுக்கொள்ள ஒரு சமயம் இசைந்தாலும் அவர்கள் கண்டிப்பாகச் சம்மதிக்க மாட்டார்கள்.''

''உனக்கு வேண்டும் என்று சொல்லு. அவர்கள் என்ன சம்மதிப்பது. பிருதிவிராஜ் சம்யுக்தையைக் கொண்டுவந்தது போல் கொண்டு வந்து விடுகிறேன்.''

கலகலவெனச் சிரித்துவிட்டு, ''சம்யுக்தை பிருதிவிராஜை வரித்தாள், முடிந்தது. இவள் உன்னை வரிப்பாளா?''

''வரிப்பாள் என்று வைத்துக்கொள்ளேன்.''

''அப்படியானல் இந்தப் பேச்சு........'' என்று முடிக்குமுன்

''விளையாட்டல்ல, உண்மையே சித்தி. இதுவரை, எந்த விஷயமும் அப்பாவிடம் சொல்லத்துணியாது உன்னிடமே சொல்லுவேன். உன் அன்பு என்னை அப்படிச் செய்யச் செய்கிறது. இன்றும் நமது அன்பின் அறிகுறியாக நீயே இப்பேச்சைத் துவக்கினுய்? அவளை நான் மனதில் வரித்து நான்கு வருஷங்கள் சென்றுவிட்டன. அவளும் என்னையே வரித்துவிட்டாள் என்பதை நான்கு மாதத்திற்குமுன் அவள் வாயினுலேயே அறிந்துகொண்டேன். அதனல் எனக்குக் கல்யாணம் நடப்பதென்ருல் அவளுடன்தான். இல்லையேல் இப்படியே இருப்பதாகத் திர்மானம் செய்துவிட்டேன். இதுவரை உன் மனம் எப்படியோ, நீ விரும்பினல் என் சுகத்தைக் கருதாது உனது திருப்திக்காகவே யாரையாகிலும் கல்யாணம் செய்துகொள்வது என்று எண்ணியிருந்தேன். இன்று நம் இருவர் மனமும் ஒரே பொருளை நாடியதால் மனம் விட்டுச் சொல்லிவிட்டேன். பிறகு உன் இஷ்டம்'' என்ருன்.

பதில் சொல்லத் தோன்ருது அவனைப் பார்த்தபடி நின்ருள். சற்றுப்பொறுத்து, தன் இரு கைகளேயும் அவன் இரு தோளின் மீது வைத்து, ''சந்தர்! எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. இது விஷயத்தில் எனக்குப் பூரண சம்மதம். ஊரின் பெயராலும், ஏற்றத்தாழ்வு பார்ப்பதென்பதை என் மனம் ஒருநாளும் ஒப்பாது. உன் தந்தைக்கு நான் இரண்டாந்தாரமாக வாழ்க்கைப்பட்டதாலும், மூன்று வயதுப் பையன் நீ இருக்கிருய், உன் தகப்பனருக்கு முப்பது வயது ஆகிவிட்டது என்பதினுலும் என் தாய், இந்தக் கல்யாணம் கூடாதென்ருள். கிருஷ்ணஜீ, கோவிலுக்குப் போகும்போதெல்லாம் உன் தந்தையைப் பார்ப்பேன். பேசியது கிடையாது. ஆனாலும் எனக்கு அவரையே வாழ்க்கைத் தலைவராகக் கொள்ள வேண்டுமென்ற அவா மிகுந்தது. ஒரே உறுதியாக நின்று தகப்பனர் விருப்பத்துடன் கல்யாணம் செய்துவைத்தார். அதனல் காதல் மணம் எப்படி என்பது எனது சொந்த அனுபவம். உனது காதல் மணவாழ்க்கையைக் கண்டு களிக்கவே என் மனம் விரும்புகின்றது. ஆனல் தீவிரவாதியாகிய உன் தகப்பனர் இதற்குச் சம்மதிக்க வேண்டுமே என்பதுதான் கவலை'' என்ருள்.

''என் மனதைச் சொல்லிவிடுகிறேன். பிறகு அவர் என் நன்மையை நாடிச்செய்யும்

கல்யாணமென்றால் ஒப்புக்கொள்வேன். இல்லையேல் பிளவுபட்ட மனம்தான். என்ன செய்வது? விதியேன் இவ்விதம் விளையாடுகிறது. விளையாட்டை அவ்விதியே வினையாகச் செய்யட்டும். நீ கவலைப்படாதே'' என்றான்.

''சந்தர்! விதி! விளையாட்டு! வினை! யாவும் அவன் செயல் என்றாலும், என் மனம் நம் தூய்மையான பிரயத்தனத்தின் காரணமாக அவனருள் கிடைக்குமென்று நம்புகிறது. நாளை நமது சாந்தினி விஷயத்திலும் இதே முறைதான் கையாளுவேன். மூத்தாள் மகன் என்பதற்காக உன் விஷயத்தில் வேற்றுமையோ, அதிகப் பரிவோ காட்டமாட்டேன். சந்தர், இவை எவ்விதம் நடக்குமோவென்று நினைத்தால் பிரளயம் போல் பயங்கர உணர்ச்சியே ஏற்படுகிறது'' என்றாள் தழுதழுத்த குரலில்.

கலகலவென வாய்விட்டுச் சிரித்துவிட்டு, ''சித்தி உன் கவலை எனக்குச் சிரிப்பைத் தருகிறது ஐந்து வயது சாந்தினியைப் பற்றிய கவலை இப்பொழுது ஏன்? நான் முன்னிற்பேன் அவளது சுதந்திர இன்ப வாழ்க்கைக்கு ஆதரவு அளிக்க. என் விஷயத்திற்கும் நீ கவலையுறாதே. அப்பாவை எதிர்த்து, உலகம் நகைக்க இடமளிக்கமாட்டேன்'' என்று சொல்லிவிட்டு நிமிர்ந்தவன். ''அதோ அப்பா வருகிறார். விஷயம் நம்முடன் இருக்கட்டும்''

''அப்பா நான் வேண்டுவது அவ்வளவே'' என்றாள்.

''என்ன! தாயும் மகனும் ஆழ்ந்த ரகசியம் பேசுகிறாப்போல் தோன்றுகிறதே. சாந்தினி, நாம் என்னடி பேசுகிறது?'' என்று சிரித்தபடி தோளில் தூக்கிவந்த சாந்தினியைக் கேட்டவாறே அவ்விடம் வந்தார் சந்தரின் தந்தை.

''ஒன்றுமில்லை, நீங்களறியாத ரகசியம் என்ன? அந்தப்பெண்கள் விமலாவையும், மதராசிப்பெண் குந்தளத்தையும் பற்றிச் சொன்னேன்.''

''ஆமாம், இரண்டுபேரும் படிப்பில் அதிமேதாவியென்று புரொபஸர் அமலாந்தஜீ அடிக்கடி சொல்லுவார். அதிலும் அந்த மதராசிப்பெண் குந்தளம் குணத்தில் மிக

ஆச்சரியமான பாதுகாப்பு — — மற்றும் பந்தோபஸ்து

நேற்றைய கனவு........
இன்றைய வாழ்க்கை........
நாளைய நம்பிக்கை........

இவ்விதமாக வாழ்நாள் சென்றுகொண்டிருக்கின்றது.

வாழ்க்கையின் பிரயாணத்தில் உங்களுக்கு நாங்கள் உதவி புரிகிறோம்.

மொத்த ஆஸ்தி சுமார் 3 கோடிகள்

லக்ஷ்மி இன்ஷூரன்ஸ் கோ, லிட்., (லாகூர்)

மதராஸ் பிராஞ்ச்:
4/105, அரண்மனைக்காரத்தெரு, ஜி. டி.
ஸி. ஆர். சேஷன், M. A.,
பிராஞ்ச் மானேஜர்.

ஹைதராபாத் பிராஞ்ச்:
அபித் ரோட், (டெக்கான்)

மிகச் சிறந்தவள். அவளைக் கண்டாலே பையன்களுக்கு ஒரு மரியாதை தோன்றும் படி நடந்துகொள்ளுகிருள் என்று சிலாகித்துப் பேசுகிருர். இன்று நேரில் பார்க்கும்பொழுது அது மிகையாகாது என்று தோன்றிற்று" என்ருர்.

— 9 —

சாயங்காலம் நாலரை மணியே ஆயிற்று என்ருலும், வருண தேவனின் பவனியின் ஆர்ப்பாட்டத்திஞல் சந்தியா தேவி தோற்றம்போல் உலகை மயக்கிற்று, இயற்கையின் காட்சிகள். வான முகட்டில் மேக ராஜன் மறைவில் ஜோதிராஜன் மறைந்து நிற்கும்தோற்றம், ஸ்வர்ணமா? வெள்ளியா? என்ற பிரிவினையை நிர்ணயிக்க முடியாத ஒருவித உலோகப் பிரகாசத்தைக் காட்டி, ஜாலவித்தை செய்வதுபோலிருந்தது. மேக ராஜனின் வருகையை அறிவிப்பது போல் அம்பாச்சாரியின் கரையிலுள்ள மரங்கள் சுழன்று சுழன்று நடனமாடின. இவைகளை ஊன்றிக் கவனித்த வண்ணம், பாலத்தின் கம்பிகளின் கட்டத்தில் ஒரு காலைத் தூக்கி வைத்து, அந்தத் துடையின் மீது முழங்கையை ஊன்றி நின்ற சந்தர், இயற்கைக் காட்சியைப் பரிமளிக்கச் செய்ய வந்த ஜோதிபோல் தோன்றிஞன்; அந்த வேளையின் மந்தமாருதத்தின் இன்பஸ்பரிசம் அவன் மனதை இன்ப லாகிரி கொள்ளச் செய்தது. வலது கையிஞல் ஜேபியிலிருந்த கார்டு அளவுள்ள படத்தை எடுத்துப் பார்த்தான். மாணவிகளாகச் சேர்ந்து, சமஸ்கிருதத்தில் நடித்த போஜ சரித்திர நாடகத்தில் குந்தளம் விலாஸவதியாக நடித்தாள். அதில், போஜன் வரவை நோக்கும்பாசாங்கு தூக்கமாக, ஒய்யாரமாக, மஞ்சத்தில் படுத்திருந்த காட்சியும் சீன் ஜோடனையும் அதி அற்புதமாகஅமைந்தபடியிஞல் காலேஜ்பிரியன்ஸ்பால் உடனே தமது கைக் கேமராவில் அதைப் படம் பிடித்துவிட்டார். அப்படத்தை க்ளீன் செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட சந்தர், தனக்குச் சொந்தமாக ஒரு காப்பி எடுத்துக்கொண்டது வியப்பல்ல. எப்பொழுதும் ஜேபியிலேயே இருக்கும். தனிமையில் பார்த்து ஆனந்திப்பான். இன்றும் அதைப்பார்த்ததும், இயற்கையின் இன்பலாகிரியில் (திரே, திரே, ஹாரே, மேரேபுல் புல் சோரஹாயே)" என்ற பாட்டு அவன் வாயிலிருந்து கிளம்பிக் காற்ருேடு கலந்தது.

பாட்டு முடிந்ததும், "ஆஹா! குந்தளம் மிக்க பாக்யவதியே" என்ற சப்தம்கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிஞன். புன் சிரிப்புடன் பின்கையைக்கட்டியவாறு நின்ருள் விமலா. சட்டெனப் படத்தை ஜேபியில் போட்டுக்கொண்டு "உன்னைவிடவா பாக்யசாலி? அதிருக்கட்டும், உன் சகி வரவில்லையா!" என்ருன் பேச்சை மாற்றும் பாணியில்.

"இன்று சுக்ரவாரமல்லவா? இவ்விடம் எப்படி வருவாள்? உங்களுக்குக் கிழமை கூட நினைப்பில்லை போலிருக்கிறது" என்று கண்களைச் சிமிட்டிய வண்ணம் கூறிஞள்,

"சுக்ரவாரம் நினைப்பிலிருந்து என்ன ஆக வேண்டும்? புதிர் போடுவதுபோல் பேசுகிருயே. குந்தளம் ஏன் வரவில்லை யென்ருல்? சுக்ரவாரத்திற்கும் அவளுக்கும் என்ன சம்பந்தம்?"

"உங்கள் கையிலிருந்த படத்திற்கும், நீங்கள் பாடிய பாட்டிற்கும் உள்ள சம்பந்தம் தான்"

"விமலா!" என்று மேலே கேட்கத் தயங்கினவன்போல் நின்ருன்.

"சந்தர் ஏன் தயக்கம்? இன்று இரவு எட்டுமணிக்குத் தாங்கள் அவளைச் சந்திக்குமுன் தங்களிடம் ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றிச் சொல்லவேண்டுமென்றே, சுரேஷ் குந்தளம் இருவருக்கும் தகவல் தெரிவிக்காமல் வந்தேன்"

"என்ன எட்டுமணிக்குச் சந்திப்பா? என்ன விமலா விளையாட்டு என்ருலும் ஓர் அளவு வேண்டும்"

"சந்தர்; விளையாட்டல்ல, இனி விஷயத்தை மறைப்பதில் உபயோகமில்லை. குந்தளம் எனக்கு யாவும் சொன்ஞள். தற்சமயம் அவளைப் பற்றி ஒரு நூதனமான விஷயம் ஏற்பட்டிருக்கிறது. அதுபற்றித் தங்களிடம் சொல்லவேண்டும் என்று என் மனம் துடிக்கிறது. அது விஷயத்திற்காகத் தங்களிடம் நான் பெறும் அவமதிப்பை என் உயிர் நேசியின் நன்மைக்காகச் சுயமதிப்பை இழக்கும் அருந்தியாகமாகக் கொள்ளுவேன்"

"விமலா! என்னை மன்னித்துக்கொள். உன் பேச்சு எனக்கு மனச் சஞ்சலத்தைக் கொடுக்கிறது. விஷயம் தெரிந்துகொண்ட நீ என்னை நோவது புத்திசாலித்தனமாகுமா?"

"சந்தர்! அந்த மரத்தினடிக்குச் செல்லுவோம் வாருங்கள். உங்கள் மீது யாதொரு வருத்தமுமில்லை. மழை வரும் போலிருக்கிறது; சிக்கிரமாகச் செல்லவேண்டும். உங்கள் இஷ்டம் என்ன?"

"சரி வா போகலாம்"

இருவரும். மரத்தினடியில், இருகல்லின் மீது எதிரெதிராக உட்கார்ந்துகொண்டார்கள்.

"விமலா சொல் விஷயத்தை" என்றான் அமைதியற்ற குரலில்.

"குந்தளம் கல்யாணமுதல், சந்தர் பார்த்துவிட்டுச் சென்றது, சித்தி அத்தை அவளைக்கட்டுப்பாடு செய்தது, முதலிய விஷயங்களைச் சொல்லி முடித்துவிட்டு, "சந்தர்! இப்பொழுது அவள் தங்கள் மனதிற்கு எப்படியிருக்கிறாள். மறைக்காமல் சொல்ல வேண்டும்"

சற்று நேரம் அம்பாச்சாரியை உற்று நோக்கியவண்ணம் பதுமைபோல் உட்கார்ந்திருந்தான். கடைசியாகக் கேட்டகேள்வி அவன் மனதில் பலவித அர்த்தத்தைக் கற்பனைசெய்தது. விமலாவின் மனோநிலைமையை நிதானிக்க முடியவில்லை. அவள் மனதை அறிய ஒருமுறையை ஆராய்ந்தான். ஒருமுடிவிற்கு வந்தவனாக; "விமலா; விஷயம் என்மனதைப் பேதிக்கின்றது. தகப்பனாரிடம் எதிர்த்து வாதாட உத்தேசித்தேன். ஆனால் இந்த ஆக்ஷேபனையைத் தகப்பனார் ஒப்புக்கொள்ளமாட்டார். அதற்காக எங்கள் காதல் தொடர்பு அற்றுவிட முடியாது. அதனால் அவரிஷ்டத்திற்குக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டியதுதான். எங்கள் தொடர்பு இரகசியத்தில் இருக்கவேண்டியதுதான். அதற்கான வல்லமையும், பணமும் என்னிடம் இல்லையா? வேண்டுமானால், நம் மனிதர் என்பவர் இல்லாத இடத்தில் அவள் வசிக்க ஏற்பாடு செய்யலாம், என்ன? விமலாநான்சொல்வது சரிதானே" என்றான்.

அவனை உற்று நோக்கிய வண்ணம், "சந்தர் உண்மையாகத் தங்கள் மனம் ஒப்பியா இப்படிப் பேசுகிறீர்கள்?"

"உண்மையாக என் ஹ்ருதயபூர்வமாக, நடப்பதைச் சொன்னேன்."

சட்டென எழுந்து நின்றுகொண்டு, "ஆஹா! என்ன படித்தாலென்ன? உயர்ந்த நோக்கம் கொண்டாலென்ன, கவிகளை அள்ளி அள்ளி வீசினாலென்ன,? ஆண்மையின் செருக்கும், பணத்தின் மமதையும் விடாது போலும். காதல், அதற்கும், தாங்கள் இப்பொழுது சொன்ன விஷயத்திற்கும் பொருள் உண்டா? எந்த நிலைமையிலும் மனம் மாறுது பற்று ஏற்படுமானால், பிரதி பிரயோஜனத்தை எதிர்பாராத நிலைமையில் ஏற்படுமானால், கௌரவ அகௌரவத்தைச் சிந்திக்கத்தோன்றாத நிலைமையில் பதிந்து நிற்குமானால் அதுதான் காதல் என்று சொல்லக் கூடிய மதிப்பைப் பெறும். தங்கள் காதல் மிருக இச்சையைப் பூர்த்தி செய்து கொள்ளும்கீழ்த்தரமான காமத்தைச்சேர்ந்ததே. பெண்கள் என்றால் ஆண்களின் இஷ்டத்திற்குப் பணிந்து நடக்கவேண்டும். அதுதான் இயற்கை என்னும் உங்களின் மனப்பான்மை, எங்களை நிரந்தர அடிமைகளாக நாங்களே ஏற்படுத்திக் கொள்ளுமாறு செய்து விடுகின்றது. எந்த விதத்தில் உங்களைவிட நாங்கள் தாழ்ந்தவர்கள். நீங்கள் செய்யும் எந்தவேலையையும் நாங்கள் செய்ய முடியும், உங்களுக்கு ஒரு மதிப்புக் கொடுக்க எண்ணியே சில விஷயங்களில் முடியாது என்ற பாவனையாக நாங்கள் விட்டுக்கொடுக்கிறோம், ஆதிநாளில் பெண்கள் கல்வியறிவுகளில் தேர்ச்சி பெற்றிருந்தார்கள் என்பதை இன்றும் சரித்திர முகமாக நாம் அறிகிறோம். நடுக்காலத்தில், தங்களை மீறிவிடுகிறார்கள் என்ற மனப்பான்மையில் பெண்களுக்குக் கல்வி அவசியமில்லை என்று தீர்மானித்தார்கள். ஆனால் அதையும் சிந்தித்துப் பார்த்தால், ஆண்களுக்கு மூளைப் பலமில்லை, அதனால் கல்வியறிவினால் அதைப் பலப்படுத்த வேண்டும், பெண்களுக்கு இயற்கையிலேயே அறிவு விசாலமாகிவிடுகிறது, அவளுக்குக் கல்வியறிவு அவசியமில்லை என்று முடிவிற்கும் வரலாம், ஆனால் தற்காலத்தில், பெண் கல்வி முன்னேறிச் செல்லுகின்றது, பொறுமையுடன் எதையும் செய்யும் சக்தி எங்களுக்கே உண்டு. சமயங்களில் எங்கள் பொறுமையே வெற்றி பெறுகிறது என்பதை உங்கள் மனம் அறியாமலிருக்க முடியாது. தாங்கள் அதிமேதாவி என்று நினைத்து ஏமாற்றமடைந்தேன். உங்களுக்கும்உங்கள் நட்பிற்கும் வந்தனம். நான் சென்று வருகிறேன். குந்தளத்தினிடம் "உன்முயற்சியை மெச்சுகிறேன். பிறகு இந்த ஆண் சமூகத்திலேயே நுழையாமல் நாம் படித்து உத்தியோகம் செய்து நம்மை நாமே காப்பாற்றிக்கொள்ளலாம். உலகம் இருவருக்கும் பொது. நாம் தனிவாழ்வு நடத்தமுடியும்" என்று சொல்லிவிடுகிறேன், ஒரு விஷயம் நீங்கள் கேட்பதற்கு முன்னதாகவே சொல்லி விடுகிறேன். 'யௌவனத்தில் இயற்கையின் இச்சையைக் கட்டுப்படுத்த முடியாது. அது உங்கள் பெண்மையினால் முடியாத விஷயம் என்பது.' ஆனால் உண்மையில் பெண்ணின்றி ஆண்களால் சுகவாஸம் செய்யமுடியாது. ஆணின்றிப் பெண் சும

மாக இருக்கமுடியும் என்பதை நானும் குந்தளமும், உங்களுக்கும் உலகிற்கும் காட்டியே தீருவோம். என்ன அகம்பாவம். குந்தளம் தங்கள் வைப்பாட்டியாகவா இருக்க வேண்டும்? சபாஷ்! அன்பினால் அன்பைப் பெறலாம். அகம்பாவத்தினால் அன்பைப் பெறமுடியாது, நமஸ்காரம் சந்தர்'' என்று திரும்பினாள்.

''ஆஹா! விமலா! உனது பிரசங்கத்திற்கு இரண்டு சபாஷ். உங்கள் இருவரையும் பிரசங்கத்திற்கு அனுப்பினால் நிச்சயம் நினைத்த லக்ஷ்யம் நிறைவேறச்செய்து விடுவீர்கள். உண்மையில் நீ என் விஷயத்தில் ஏமாற்றமே அடைந்தாய். ஆனால் அதிமேதாவி என்ற நினைப்பிலல்ல. உன் மனம் இன்னதென்று புரிந்துகொள்ளாத நிலைமையில், அதைத் தெரிந்துகொள்ள ஒரு வெடிகுண்டைப் போட்டேன். நிச்சயம் வெற்றி பெற்றேன். இதைப்பார் கோபித்துக் கொள்ளாமல் நான் சொல்வதைக் கேட்டுவிட்டு, உனதுதீர்ப்பைக்கூறு'' என்று அவன் அவள் கையைப்பிடித்து உட்காரவைத்தான்.

''என்ன சொல்லப்போகிறீர்கள்?'' என்றாள் படப்படப்பாக. உங்கள் நட்பின் அன்பைக் கண்டு என்மனம் பூரிப்படைகின்றது. நான் சந்திக்கும்பொழுதெல்லாம் உன்னை நான் ஏற்றுக்கொள்ள எவ்வித உபாயங்களுண்டோ அவையெல்லாம் பிரயோகிக்கிறாள் குந்தளம். இன்று நீ அவளுக்காக ஆண் சமூகத்தின்மீதே போர் தொடுத்துவிட்டாய். இருவரும் பிரியாதிருக்கவும், உங்கள் கொள்கையை நிலைநாட்டவும், உலகம், சமூகம், என் தந்தை யாரும் ஒப்புக்கொள்ளவுமான மார்க்கம் ஒன்றுதான். உன்னை முதலாவதாக உலக வழக்கப்படி மணம் செய்துகொண்டு, பிறகு அவளையும் நம் வழக்கப்படியே கல்யாணம் செய்துகொண்டால் எதிர்ப்பே இருக்காது. நீயும் என்னை ஒரு சமயத்தில் காதலித்தாய் என்பது நிச்சயம்'' என்றான் புன்சிரிப்புடன்.

''சந்தர்! மன்னிக்கவும். ஒரு காலத்தில் உங்கள்மீது மனம் சென்றது உண்மைதான். ஆனாலும் தீவிரமான பற்று என்று சொல்ல முடியாது. உங்கள் மனம் தெரிந்ததுமே மனம் அமைதி கொண்டுவிட்டது. பிறகு குந்தளத்தின் விஷயம் தெரிந்ததுமுதல் உங்களை என் சகோதரராகவே தெய்வரூபமாகவே என் மனம் எண்ணுகிறது. வளைத்து வளைத்துப் பேசுவதில் உபயோகமில்லை. தங்கள் மனதில் தெய்வீகத்தினால் ஏற்பட்ட காதலென்றால், எந்தவித ஆக்ஷேபணைகளையும் சமாளித்து நேர்மையான முறையில் குந்தளத்தை நம்மவர்போல மணம் செய்துகொள்ளவேண்டும். தங்களைப் போன்றவர்கள் இவ்விஷயங்களில் உறுதியாக நின்றால் உலகமும் சமூகமும் பணத்திற்கு மதிப்புக் கொடுக்கும். பிறகு மற்றவர் தைரியமாகச் செய்வார்கள். நான் உங்களைக் கேட்டுக் கொள்ளுவது இதுவே. உண்மையாக அவளை ஏற்பதானால் இன்று அவள் கேட்கும் கேள்விகளுக்கு யோசித்துப் பதில் கூறவேண்டும். சத்யம் வாங்க இடம் வைத்துக்கொள்ளக்கூடாது. இதை எச்சரிக்கவே இவ்விடம் வந்தேன். உங்கள் அபிப்பிராயமென்ன?''

''விமலா! துவக்கத்தில் நீ குந்தளத்தைப் பற்றிச் சொன்னதும், சமயத்தைப் பயன்படுத்திக்கொள்ளவந்தாய் என்று எண்ணி அவ்விதம் பேசினேன். உனது பரந்த நோக்கம், நட்பின் மேன்மை, தியாக உணர்ச்சி, இவற்றை எந்தவிதமாகப் போற்றுவது என்பதற்குப் பதமே கிடைக்கவில்லை. குந்தளம் என் மனதிற்கு என்றும் ஒன்றுபோலவே. ஹ்ருதயார்ப்பணத்தை மாற்ற அதை ஏற்படுத்திய இறைவனாலும் முடியாது. உன் சகியைப்பற்றிய கவலையை விடு. உன் கோரிக்கையைப் பூர்த்திசெய்கிறேன். அம்பாச்சாரியும் அந்திக் கன்னியின் கர்ப்பத்தில் அமிழும் ஆதவனும் சாக்ஷியாக என் வித்தையின் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன்''

''சந்தர்! தங்களின் உயர் குணத்தில் நம்பிக்கை வைத்தே துணிந்து சந்திக்கவந்தேன். அவள் வாழ்க்கைத் தோணியின் துடுப்பு உங்கள் கையிலிருக்கிறது. அத்தோணி ஆனந்த சாகரத்தில் மிதக்குமானால்தான், என் வாழ்க்கைத் தோணியின் துடுப்பை ஒருவரிடம் ஒப்படைப்பேன். இது முக்காலும் சத்தியம்'' என்றாள். அவள் சொல்லும், நிற்கும் பாணியும் ஓர் வீராங்கனையாகத் தோற்றம் அளித்தது சந்தர் மனதில். தேகம் புல்லரித்தது.

''விமலா! உன்னைப்போன்ற நாரீமணிகள் தோன்றிக்கொண்டேயிருந்தால் ஆண் சமூகமே ஆனந்த வாரிதியில் மிதக்கும்'' என்று அவள் இரண்டு கைகளையும் பிடித்துக் கண்களில் ஒற்றிக்கொண்டு விட்டான்.

(தொடரும்.)

வாழ்க்கையில் ஆரோக்கியத்தை விரும்
பும் பெற்ருேர்கள் ஆகாரத்தில் சிறந்த
தென நம்புவது பெரீஸ் பிஸ்கட்ஸ்

★

குழந்தைகள் விரும்பும் அமிர்தம்
போன்ற உணவு மேலான சத்துக்கள்
அடங்கிய தங்களின் சிற்றுண்டி என்
பதை ஒவ்வொரு தாய், தந்தையரும்
அறிந்திருப்பதால் அவர்கள் எப்
பொழுதும் வாங்குவது

★

பெரீஸ்

பிஸ்கட்ஸ்

PERRY & CO., USILAMPATTI. (Estd. 1917)

புரட்சிக் கோமாளி

யோகி சுத்தானந்தபாரதி

௧

வால்தேர், ரூஸோ—இவ்விருவரும் எழுத்தினால் பிரெஞ்சுப் புரட்சியைத் தூண்டினர். வால்தேரின் உரையும் கவியும் விறுவிறுப்பான உணர்ச்சியும் முறுக்கான நடையும் கொண்டன. அவனது கட்டுரை, கதை, நாடகம், கவிதை எல்லாம் அடிமை மனப்பான்மையைத் தகர்த்தெறிவன. ரூஸோ எத்தனையோ துயர்களைப் பொறுத்து, அனுபவத்தால் மனித சமுதாயத்திற்குச் சுதந்தர வழிகாட்டினான். மனிதனுக்கு மனிதன் அடிமையில்லை; மதத்திற்கோ மன்னனுக்கோ குடிகள் அடிமையில்லை. குடிகளின் நன்மையே அரசின் குறிப்பு. குடிகளாலேதான் குடிகளுக்கு நன்மை வரும். முடியரசும் தடியரசும் ஒழிந்து குடியரசு வரவேண்டும் என்று ரூஸோ தன் சமூதாய ஒப்பந்தத்தில் அழுத்தமாக எழுதிச் சென்றான். அவன் வாக்கே பிரஞ்சுப் புரட்சியையும், அமெரிக்கப் புரட்சியையும் தூண்டியது.

௨

பிரான்ஸில் லூயி XVI தன் ஆஸ்திரிய மனைவியுடன் சுயேச்சாதிகாரம் நடத்தினான். வரிச்சுமை, அடிமைச்சுமை இரண்டும் குடிகளைக் கிட்டிபோட்டு வருத்தின. "உரிமை" என்றால் பஸ்தில்; "குடியரசு" என்றால் கொலைதான். நாடெங்கும் ஒற்றர்; அரசனுக்கு எதிராக மூச்சுவிட்டால் உடனே கைதுசெய்து, சட்டப்படி தண்டித்துத் தலையைத் துண்டித்துவிடுவர் அதிகாரிகள். இந்த எமகண்ட தர்பார் கூட சுதந்தரத்தின் மூச்சைப் பிடிக்க முடியவில்லை. ஜனசக்தி நீறுபூத்த நெருப்பைப்போலிருந்து, மெல்லமெல்லக் கனன்றெழுந்தது. ஓட்டல்களிலும், வீடுகளிலும், நாடகமேடைகளின் பின்புறங்களிலும் இரகசியக் கூட்டம் நடந்தது. ஒத்திகை நடத்துவதுபோல நடிகருடன் புரட்சிக்காரரும் கலந்து கிளர்ச்சி நாடகத்தை ஜோடித்தனர். இந்த நாடகத்தில் பெரும்பங்கு கொண்டிருந்தவன் ஒரு கோமாளி என்றால் வியப்பீர்கள்.

௩

ஆம், லாபுஸ்ஸியேர் (Charles de Labussiere (1768—1802) பாரிஸ் நாடக மன்றங்களில் கோமாளியாக நடித்துப் பிழைத்த வாலிபன். அவன் பெரிய செல்வக் குடும்பத்தில் பிறந்தவன். ஆனால் காற்றுக்குப் பிறந்து தூசிக்கு வளர்ந்த ஏழைகளுடன் ஐக்கியமானவன். அவன் பசித்தபோது கிடைத்ததை உண்பான்; தலை சுழற்றினால் கிடைத்த இடத்தில் தலையைச் சாய்ப்பான்; பணம் கிடைத்தால் தான் உண்டதுபோக மீதியை அப்படியே பிச்சைக்காரருக்குத் தருவான்; அவன் இயற்கையின் செல்லப்பிள்ளை. கட்டுப்பாட்டின் விரோதி. அவன் அறிவும் கட்டுப்பாடில்லாமல், இயற்கையாகவே வளர்ந்தது. தலைவர்கள் பேசுவதை அவன் கேட்பான்; அவர்கள்போலவே அபிநயிப்பான். சமுதாய வாழ்வில் ஆண் பெண் நடையுடை பாவனைகளை அப்படியே நடித்துத் தனது தோழரைச் சிரிக்க வைப்பான். நாடகம் என்றால் அவனுக்குப் பெரு மகிழ்ச்சி; ஏதாவது ஒரு வேலை செய்து உள்ளே புகுந்து தன் சகாக்களுடன் நாடகம் பார்ப்பான். மறுநாள் அவனே ஒரு நாடகம் நடத்துவான். அவன் முதலில் விளம்பரப் பையனாக நாடகமேடையிற் புகுந்தான். தெருத் தெருவாக வீடு வீடாக நாடக அறிக்கை தந்து, நகைச் சுவையுடன் நாடகத்தைப்பற்றிப் பேசி, அனைவரையும் "வாருங்கள், வந்து பாருங்கள், களிகூறுங்கள், ஆசி தாருங்கள்" என்று அழைப்பது அவன் வேலை. இந்தச் சிறுவன் பேச்சுக்கே பலர் நாடகத்திற்கு வந்தனர். பாரிஸில் மேரோ (Mareau) என்ற ஒரு புகழ் பெற்ற நாடகச் சபையுண்டு. அதன் தலைவர் இந்தப் பையனின் நகை ததும்பும் பேச்சையும், நடி—திறனையும் கண்டு, "பையா நீ கோமாளியா யிரு" என்றார்.

லா புஸ்ஸியேர் நாடகக் கோமாளியானான்.

ஆனால் இந்தக் கோமாளி கெக்கெக்கே —கோமாளியன்று; இவனுடைய நகைச் சுவை ஜனங்களைச் சிரிக்க வைப்பதுடன் உணரவைக்கும். ரூஸோ பேனவில் இரத்தம் கக்க எழுதி உணர்ச்சி யெழுப்பினன். லாபுஸ்ஸியேர் வயிறு வெடிக்கச் சிரிக்கும்படி பேசி, மனித சமுதாயம் இவ்வளவு மிருகத் தன்மை யடைந்திருக்கிறதா என்று உணரவைத்தான். அவனுடைய நகைச் சுவை சமுதாய சீர்த்திருத்தத்திற்கும் அரசியல் சுதந்தரத்திற்கும் மருந்தாயிருந்தது. அவனை எல்லாரும் விரும்பினர்.

௪

இந்தச் சமயந்தான் பிரெஞ்சுப் புரட்சி குப்பென்று பற்றிக்கொண்டது. மேரோ நாடகமேடையின் பின்புறம் இரகசியக் கூட்டம் நடக்கும்; முன்புறம், லேபுஸ்ஸியோரின் அரசியல் ஹாஸ்யம் நடக்கும். மதத்தின் பெயராலும், அவதாரப் பெயராலும், குருக்களும், சுயேச்சாதிகாரப் பிரபுக்களும் கொடுங்கோலாட்சியைப் போற்றிய சீர்கேட்டை இந்தக் கோமாளி நகைச்சுவையுடன் ஜனங்கள் மனம்பற்றி யெரியும்படி பேசிவந்தான். மிஷனரிகள் சீறி விழுந்தனர்.

லாபுஸ்ஸியேர்: "ஐயா நீங்கள் மட்டும் ஜனங்களை நரக வர்ணனையால் நரக வேதனை செய்கிறீர்களே; சும்மாகிடக்கிற பேர்களைப் பணம் வாங்கிக்கொண்டு சுவர்க்கத்திற்குப் போகச் சொல்லுகிறீர்களே....."

பாதிரிகள்: நாங்கள் மிஷனரிகள்; மனிதருக்கு ஏசுநாதர் பெயரால் ஆன்ம விடுதலை தருகிறோம்.

லாபுஸ்ஸியேர்: ஐயா சாமியாரே! நீங்கள் மிஷனரிகளானால் நாங்கள் மோஷனரிகள் (Motionaries). மனச்சாட்சியின் பெயரால் ஆன்மாக்களுக்கு அரசியல் விடுதலை தருகிறோம்; கொடுங்கோல் நரகத்தினின்று பொதுஜனங்களை விடுவிக்கிறோம். நாங்கள் பொதுநலத்திற்கே சுற்றித் திரிகிறோம்.

இம்மாதிரி நமது கோமாளி வாதாடினன். "மோஷனரிகள்" என்று இவன் வாக்கில் வந்த பதமே அந்தக் காலப் புரட்சிக்காரருக்கு இரகசியப் பெயரானது. அவர்கள் "டே கோமாளி! அரங்கமேடை போதும்; வா அரசியல் மேடைக்கு" என்றழைத்தனர். உடனே நாடகக் கோமாளி புரட்சிக்கோமாளி யானன். அவன் சேர்த்த பணமெல்லாம் புரட்சிக்கே தந்தான். மோஷனரிகளுடன் ஊர் ஊராய்த் தெருத் தெருவாய்ச் சுற்றிப் பிரசாரம் செய்தான்.

௫

அவன் பேச்சைக் கேட்க அரச பக்தர்கள்கூட மாறுவேடம் போட்டுவந்தனர். ஒற்றர்கூடச் சிரித்துக்கொண்டே குறிப்பெடுத்தனர்; போலீஸ்காரர்கூட மனச்சாட்சியின் குத்தலுக்குப் பயந்தனர் லாபுஸ்ஸியேர் தலைசிறந்த மோஷனரி. என்றால் அவன் தன்னைத் தலைவன் என்று செருக்காடியதில்லை. விருந்தும், மாலையும், 'ஜே'யும், ஊர்வலமும் வேண்டவில்லை; மாலைபோட்டால் அதை அவன் உடனே விற்றுப் புரட்சி நிதிக்குத் தருவான். பத்து மைலுக்குள் இருக்கும் ஊர்களுக்கு நடந்தேசென்று பிரயாணப் படியைப் புரட்சி நிதிக்குத் தருவான். படித்தவர் கூட்டத்தில் மெலுக்காகப் பேசிக் கர கோஷம் பெறும் தலைவனல்ல அவன்; பாமரர் கூட்டத்திலேயே அவன் பெரும்பாலும் பேசுவான்; சந்தை, கடைத்தெரு, யூதச்சேரி, தொழிலாளர்புரம், ஊர்காலிகள் தங்குமிடம், குக்கிராமங்கள், சந்து பொந்துகளிலெல்லாம் அவன் குரல் இடிமுழங்கும். பெரிய பெரிய சர்க்கார் உத்தியோகஸ்தரின் அமுல்களையும், அட்டகாசங்களையும், பதவிச் செருக்குக்களையும் அவன் சிரிக்கச் சிரிக்க அபிநயித்துக் காட்டுவான். லூயி மன்னன், மேரி ஆந்தோநித்—போல நடிப்பான். "கோமாளி ராசாவுக்கு ஜே!" என்று பாமர ஜனங்கள் உற்சாகமாக அவனை வரவேற்பார்கள். "புரட்சிக் கோமாளி வருகிறான்" என்றாலே போதும்; வேறு விளம்பரம் தேவையில்லை. சில ஊர்களில் அவனே ஒரு பறையைத் தட்டிப் பாடிக்கொண்டு தெருக்களில் போவான்; ஊர் முழுதும் அவன் பின்னல் வரும். காலை எழுந்ததும் கால் வண்டியைத் தட்டிவிட்டு வாயைத் திருகிவிடுவான்; பசித்தபோது உண்பான்; களைத்தபோதே உறங்குவான். மீதி நேரமெல்லாம் புரட்சி வேலையிலேயே செலவிடுவான்.

சா

லூயி சர்க்கார் சும்மா இருக்குமா? ஒற்றர் கோமாளியைப் புரட்சிப் புலியாக வர்ணித்துப் புகார் செய்தனர். இந்தக் கோமாளி என்ன செய்துவிடுவான் என்றே பிரபுக்கள் முதலில் அலட்சியமாயிருந்தனர். நாளடைவில் அவனைச் சுற்றும் ஜனக்கடலைப் பார்த்துப் பயந்தனர்.

"பஸ்தில் கொடுஞ்சிறையில் தள்ள வேண்டியதுதான் இவனை" என்று அரசனிடம் கோளேற்றினர். அரச ஊழியரில் கோமாளியின் நண்பர் பலர்; இரகசியப் புரட்சிக்காரர் பலரும் இருந்தனர். அவர்கள் ஒரு தந்திரம் செய்தனர். ஒரு மாதம் புஸ்ஸியேர் பேசாமல் சாதுவாயிருக்கச் செய்தனர்; "ஆள் அடங்கிப் போனான்" என்று ஒற்றர் நம்பும்படி செய்தனர். பிறகு ஒரு தந்திரம் நடந்தது; புரட்சித் தி அரசாங்க ஊழியரிடையே பற்றவே அந்த வேலை. பொதுஜன அமைதி இலாகா ஒன்றுண்டு; நாட்டில் அரசியல் கிளர்ச்சி எழாமல் அது பாதுகாக்கவேண்டும்; அந்தச் சபையில் சில புரட்சிக்காரரும் நுழைந்தனர்; அவர்கள் லாபுஸ்ஸியேரையும் சேர்த்துக்கொண்டனர். "நான் அடிமைச் சேவகம் பார்க்கமாட்டேன்" என்று கோமாளி முதலில் முனிந்தான். விஷயம் தெரிந்த பிறகே ஒப்புக்கொண்டான். அமைதி இலாகாவில் பொது ஜனங்கள் அரசியலில் உள்ள குறைகளை முறையிடும் இலாகா ஒன்றுண்டு. முதன்மையாகக் கைதிகளின் முறையீடுகள் அதில் வரும். பஸ்தில் கைதிகள் அரசாங்கத்தைக் காரமாகத் தாக்கி எழுதுவார்கள். இலாகா உத்தியோகஸ்தரை "மடயா தடியா" என்று தாக்கி மொட்டைவிண்ணப்பங்கள் வரும். இவற்றையெல்லாம் பார்த்துக் கோமாளிக்கு எரிச்சலுண்டானது. "போதுமப்பா வசவு; என்னை விடுதலை செய்" என்று அவன் மேல் உத்யோகஸ்தனிடம் முறையிட்டான். "சே, இப்போது நீ வேலைவிட்டால் உயிரைவிட நேரிடும்? நீ சிறையிலாகாவை மட்டும் கவனி" என்றான் உத்தியோகஸ்தன்.

கோமாளிக்கு மகா சங்கடமானவேலை கிடைத்தது; கைதிகளின் குற்றப் பத்திரங்களை அவன் அடுக்கிவைக்கவேண்

பாத்ருடுவின்

பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

48 வருஷங்காலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக்கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனுல் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறுதீர்கள்

டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை:—
7, சாரங்கபாணி கோவில் கீழவீதி.

திருச்சி கிளை:—
15, புகழியபிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

டும்; மரண தண்டனைக் கைதிகளின் தீர்ப்பில் கோர்ட்டு முத்திரை குத்த வேண்டும். நிரபராதிகளான பலர் கொடுஞ்சிறையிலும் தூக்குமேடையிலும் சாவதை அவன் கண்டு பல்லைக்கடித்தான். "நண்பா! மரண தண்டனைக் கைதிகளைத் தூக்குப்போடுவானேன்? என் உத்யோகத்தில் ஒரு நாள் போட்டாலே போதுமே, நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகலாமே" என்றான் புரட்சிக் கோமாளி. 'பொறு பொறு நண்பா! இந்த அநீதிக்கட்டுக்கள் எல்லாம் நம்மிடம் பத்திரமாயிருக்கவே உன்னை இங்கே போட்டோம்.' என்றான் நண்பன். கோமாளி பிரபுக்களுக்கும் நீதிபதிகளுக்கும் வணக்கம் — நடித்து இங்கே பலவேலைசெய்தான். கைதிகளைக்கண்டு— "உஷாராயிருங்கள்—சிறைக் கதவை உடைக்கும் நாள் வருகிறது" என்று தூபம் போட்டுவிட்டான்.

நீதியிலாகாவில் வஞ்சமும் லஞ்சமும் தாண்டவமாடின. கோமாளி அரசியல் கைதிகளின் குற்றப்பத்திரங்களை மறைத்தான். பலரைக் கொலைகாரர் கையிலிருந்து காத்தான். முக்கியமான பத்திரங்களையெல்லாம் புரட்சி நண்பரிடம் சேர்த்தான்.

"நிரபராதியான பலர் தூக்குமேடை செல்வதை நான் தடுத்தேன்; அவர்கள் புரட்சி வீரரானார்கள். கதியற்ற குடும்பங்களின் பெற்றோர் பலர் சிறையுண்டனர்; அவர்களுக்கு நான் உதவினேன். மரண தண்டனைக்காரர் ரிகார்டுகளை ஒளித்து வைத்தேன்; நீதிபதி இன்று இருபதுபேருக்குத் தூக்குத் தண்டனையிடுவார். அவர்கள் மரணப்பத்திரத்தை நான் கொலைகாரரிடம் தரவேண்டும். பத்திரத்தை நான் மறைத்து விடுவேன்; அல்லது சிலவற்றையே தருவேன்; அல்லது நானே புதிய பத்திரங்களையும் உண்டுபண்ணுவேன். நான் பரபரப்பாகப் பத்திரங்களை எழுதுவதும் அடுக்குவதும் தடபுடல் செய்வதுமாயிருப்பதைப் பார்த்து, அதிகாரிகள் சுறுசுறுப்பான ஊழியன் என்று மெச்சுவார்கள். வரவர தேசாபிமானிகளுக்கே மரண தண்டனை அதிகமானது. இந்த மாதம் என் உயிரான புரட்சிவீரர்—நெலதூர் வில்நீ போன்றவர்களுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப் பெற்றிருந்தது. அவர்களுடைய குற்றப் பத்திரங்கள் கட்டுக் கட்டாயிருந்தன. நான் கொலைகாரரிடம் அவர்களைக் காட்டித்தர வேண்டும்; என் மனச்சாட்சி நரகவேதனைப்பட்டது. குற்றப் பத்திரங்களைக் கிழித்தெறியவும் முடியாது; சத்தம் கேட்டால் ஆபத்து; கொளுத்தவும் இடமில்லை. நான் ஒரு தந்திரம் செய்தேன்; வாளிகளில் நீர்நிரப்பி அதில் ரிகார்டுகளை ஊறவைத்துப் பிழிந்து, பிசைந்து, பந்து பந்தாக உருட்டி அருகில் ஓடும் லூவார் நதியில் விட்டெறிந்தேன்."

எவ்வளவு துணிச்சல்! இது மட்டுமா? மரண தண்டனை பெற்ற புரட்சிவீரர் தப்பியோடவும் வழி செய்து விட்டான் கோமாளி. நீதிபதி தண்டனை விதிக்கிறார்; கொலைகாரன் வாளைத்தீட்டிக் காத்திருக்கிறான்; கைதிகள்மட்டும் மாயமாகின்றனர். ஸான்மூஸ்து, ஹெர்போ, டின்வில் போன்ற பெரிய பெரிய நீதிபதிகளெல்லாம் திகைக்கின்றனர். ஒற்றர் ஆட்களை அலசுகின்றனர். முடிவில் கோமாளி மேல் சந்தேகம், பல உத்தியோகஸ்தர் மேல் சந்தேகம் பிறந்தது. எல்லோரையும் தூக்குப்போடு என்றான் அரசன்.

எ

கோமாளி வேலையை ஓர் ஒற்றன் கண்டு கோளேற்றிவிட்டான். லாபுஸ்ஸியேரை உடனே தூக்குப்போட உத்தரவு வந்துவிட்டது; இதோ கிங்கரர் வருகின்றனர்; கோமாளியின் அறை உள்ளே பூட்டியிருக்கிறது; கிங்கரர் உடைக்கின்றனர்; "டே கோமாளி! வா தூக்கு மேடைக்கு" என்று குடி வெறியும், அதிகார வெறியும் ஏறிக் குமுறுகின்றனர்; எதிரொலி தவிர அங்கே ஒன்றுமில்லை; ஆபிஸ் ரிகார்டுகள் எல்லாம் காலி! அங்குமிங்கும் வலைபோட்டுத் தேடுகின்றனர்;ஆள் மாயமானான்! எங்கே!

சிறையின் சமயலறையில் விறகு அடுக்கும் இடமுண்டு. அதில் காற்றும் புகாது; புழுக்கமான இடம். அங்கே ஏதோ மௌனச்சாடைகள் நடக்கின்றன; சிலர் இதயத்துடிப்பால் பேசுகின்றனர். திடீரென்று விறகுக்கட்டுகளைப் புரட்டுகின்றனர். ஓர் ஆள் எழுந்திருக்கமுடியாமல் அங்கே தவிக்கிறான்; அவனைத் தூக்கிவிட்டு வெளியே கொண்டு செல்கின்றனர். சிறைக்கு வெளியே சென்றதும் எல்லோ

ரும் "சுதந்தரம் வாழ்க!" என்கின்றனர். "சுதந்திரத்திற்காக நான் சாக!" என்னும் அவனே நமது புரட்சிக் கோமாளி.

கோமாளி மரண தண்டனைப் பத்திரங்களையெல்லாம் ஒரு சுமையாகக் கட்டி மறைத்துக்கொண்டு, ஒரு புதிய தனவான் போல் மாறுவேடம் போட்டு நடந்தான். இதற்குள் அவனைத்தேடி ஒற்றர் சுற்றினர். ஊரில் உள்ள கோமாளிகள், ஹாஸ்ய நடிகர்கள் அனைவரையும், அரசன் பிடித்து, பஸ்தீலுக்குள் தள்ளி விட்டான். லா புஸ்ஸியேர் ஒரு சந்து வழியே சென்றபோது, ஏய்லேர்ம் என்ற முரட்டு ஒற்றன் பின்தொடர்ந்து பற்றிக் கொண்டு, நீ யார் என்று மிரட்டினான். கோமாளி குரலை மாற்றி "என் பெயர் சொல்லமுடியாது" என்றான். ஒற்றப்புலி கோமாளியைப் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு சென்று சோதனை செய்தது.

'இதென்ன காகிதக்கட்டு?'

'என் மனைவிக்குக் கடிதம்கூட எழுதக் கூடாதா? எங்கள் காதல் கடிதம் நீ பார்க்கக்கூடாது'

'பார்க்கத்தான் வேண்டும்.'

இப்படி வாக்குவாதம் நடந்தபோது தடபுடலாக இராணுவ உடையணிந்து ஒரு நண்பன் வந்தான்.

"ஆ நண்பா நீயா......இங்கெப்படி வந்தாய்......" என்றான்.

ஒற்றன் திகைத்தான்.

புது ஆள். 'ஒற்றரே! இவர் பெரிய அதிகாரி. மரியாதை செய்யும்' என்றான்.

ஒற்றன் பயந்துபோய் வணங்கினான், பிறகு "தாங்கள் இந்த நேரம் இப்படி யேன் வந்தீர்கள்?" என்று கேட்டான். "ஒற்றா! உன்னைப்போன்ற ஆட்கள் குடி அரசுப் புரட்சியில் சேர்ந்தீர்களோ இல்லையோ? அதைச் சோதிக்கவே மாறுவேடம் போட்டுக்கொண்டு சுற்றினேன்." என்று கோமாளி நண்பனுடன் சென்றான். மரண சாசனங்களை உடனே தண்ணீரில் போட்டுப் பிசைந்து பிண்டம் பிடித்து ஆற்றில் எறிந்தான்.

இச் செய்தியறிந்த ரோபஸ்பியர் என்னும் புரட்சித் தலைவன், 'நண்பா லாபுஸ்ஸியேர்! உன் செயலால் பல வீரர் தலை பிழைத்தது; அரசாங்கம் களவுபோன பத்திரங்களையும் உன்னையும் வலைபோட்டுத் தேடுகிறது. நாளை ஒரு பிரளயம் நடக்கும்; அதில் நீந்தி நீ குடியரசுக் கொடியுடன் விளங்கவேண்டும்" என்றான்.

மறுநாளே பஸ்தீல் கைதிகள் புரட்சி செய்தனர். சிறைக்காவலர் புரட்சிக்காரருடன் சேர்ந்தனர்; கதவுகள் நொறுங்கின; மதில்கள் இடிந்தன; தேசவீரர் சுதந்தரக் கொடி யேந்தி—"ஒழிக முடியரசு! வாழ்க குடியரசு" என்று கர்ஜித்தனர். லா பாயத் (La fyette) என்னும் வீரன் சுதந்தரப்படை சேர்த்து லூயி மன்னனையே பிடித்துக் கைதியாக்கினான். இச்சமயம் முடியரசுக்காரர் ஒருவனைப் பிடித்து லாபுஸ்ஸியேர் என்றெண்ணிச் சுட்டனர். பாரிஸ் முழுதும் ஐயோ நம் அருமைக் கோமாளி போனானே என்று வருந்தியது.

அன்று மேரோ அரங்கில் புரட்சி நாடகம் நடந்தது. ஒரு புதிய ஆள் புரட்சிவீரனாக நடித்தான்.........யாரிந்த நடிகன் என்று பொது ஜனங்கள் வியந்து கேட்டனர்.

"நானே புரட்சிக் கோமாளி" என்று நின்றான் லாபுஸ்ஸியேர். எல்லாரும் வியந்தனர். பிரெஞ்சுப் புரட்சியில் இவன் அரிய பெரிய காரியங்களைச் செய்தான். புரட்சி வென்றதும் இவன் பட்டம் பதவி எதுவும் பெறவில்லை. "தேசம் குடியரசு பெற்றது; அதுவே என் பரிசு" என்றான்.

முன் தொடர்ச்சி

அழகாயி

''புனர்ஜன்மி''

காலபுருஷனின் காலடியினால் மிதியலாடப்பட்டு எண்ணிறந்த நாட்கள், வாரங்கள், மாதங்களாக உருமாறி வருடங்களாக உருண்டு ஓடின, சுமார் பன்னிரண்டு ஆண்டுகள் கழிந்தோடிவிட்டன! பன்னிரண்டு வருஷங்கள்! சரியாய் ஒரு மஹாமகம்! உலகில் எவ்வளவோ மாறுதல்களும் புத்தம்புதிய நிகழ்ச்சிகளும் நடந்தேறிவிட்டன மேலே சொன்ன காலவரைக்குள்! அவைகளை எல்லாம்பற்றி நமக்கேன் கவலை? நம் கதைக்குச் சம்பந்தப்பட்ட முக்கிய மாறுதல்களைமட்டும் குறிப்பிட்டு விட்டுக்கதையை முடிக்கும் வழியைப்பார்ப்போம்.

முன்ஸிப் வாஞ்சிநாத அய்யரின் பெண் லீலாவுக்கு விவாகமாகி இப்பொழுது இரண்டு குழந்தைகளுக்குத் தாயாராக விளங்கினாள். அவள் கணவன் டாக்டர் சேஷாத்ரி எம். பி. பி. எஸ். மைசூர் கிருஷ்ணராஜேந்திர ஆஸ்பத்திரியில் Xray ஸ்பெஷலிஸ்டாக வேலைபார்த்து வந்தான்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலை டாக்டர் தம்பதிகள், பொழுது போக்காக, காரிலேயே, கண்ணம்பாடி அணைக்குப் (பிருந்தாவனம்) போய் வரலாமென்று, குழந்தைகளுடன் கிளம்பினர். மைசூரிலிருந்து சுமார் பன்னிரண்டு மைல்கள் தூரத்தில் உள்ள கிருஷ்ணஸாகரத்தை (கண்ணம்பாடி) போய்ச்சேர இவர்களுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை.

மாலைப்பொழுதின் மஞ்சள் வெய்யில் மறைவதற்குள்ளாகவே டாக்டர் சேஷாத்ரியின் கார் 'டாம்' ரஸ்தாவிற்குள் நுழைந்துவிட்டது. காரை வெகு நிதானமாக ஓட்டிக்கொண்டு அங்கங்கே சில விஷயங்களை மனைவிக்கு விவரித்துக்கொண்டும் இருந்தான் சேஷாத்ரி. பின்ஸீட்டில் இரு குழந்தைகளுடன் ஒய்யாரமாய் வீற்றிருந்தாள் லீலா. குழந்தைகள் இருவரும் சந்தோஷ மிகுதியினால் கைதட்டிக் கூச்சல் போட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர். பெரியவன் ஸ்ரீதரனுக்கு ஆறுவயது. சின்னவனான பிரபாகரனுக்கு மூன்றரை வயது. ரிஸர்வாயரில் தேங்கிய அகண்டமான ஜலப்பரப்பையும், இந்தப்புறம் வேஸ்ட் வேரில் (Waste Weir) கதவுகள் மூலம் நீர் வீழ்ச்சி போல் வந்துகொட்டும் நுரை கொந்தளிக்கும் ஜலப்பிரவாகத்தையும் காணும் சில பெரியவர்களே மெய்மறந்து கூச்சல் இடுவார்கள் என்றால் சிறு குழந்தைகளின் ஆனந்தக் கூத்தாட்டத்திற்குக் கேட்கவேண்டுமா? மோட்டார்க்குள்ளேயே குதித்துக் கொம்மாளம் அடித்தபடி ஸ்ரீதரனும் பிரபாகரனும் லீலாவுக்குப் பொறுக்கமுடியாத தொந்தரவை உண்டுபண்ணினர்.

''அம்மா, அம்மா! அதோ இக்கம் (தண்ணீர்) நய்ய (நிறைய) இக்கம்! இங்கே இக்கம்! அதோ இன்னொண்ணு இக்கம் பாரும்மா!'' என்று மோட்டாருக்குள்ளேயிருந்து வெளியே தாவிக்குதித்துவிடுபவன் போல் ஆர்ப்பாட்டம் செய்தான் பிரபாகரன்.

''அப்பப்பா! இந்தக் குழந்தைகளைக் கட்டிச் சமாளிக்க யாரால் ஆகிறது? இப்படியா ஜலத்தைப் பார்த்துவிட்டுக் குதியாய்க் குதிக்கும் ஒண்ணு!'' என்று அலுத்துக்கொண்டாள் லீலா.

சேஷாத்ரி நகைத்துக்கொண்டே'' அதைவிட வேறுவேலைதான் என்னவாம் உனக்கு? குழந்தையைக் கதவருகில் நிற்கவைத்திருக்கிறாயே! கதவு 'ஸ்பிரிங்'கூடச் சரியாக இல்லை. எதிர்பாராதபடி அடிக்கடி தானாகத் திறந்துகொண்டுவிடுகிறது. அவனைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்'' என்று லீலாவை எச்சரித்துவிட்டு வாய் மூடியதுதான் தாமதம், சொல்லிவைத்தாற்போல் மோட்டாரின் கதவு தடாலென்று தானாகத் திறந்துகொண்டு விட்டது! இத்தனை நேரமும் அதன்மீது தன் வயிற்றை அமுக்கிக் கொண்டு கழுத்தை வெளியே நீட்டிய வண்ணம் வேடிக்கை பார்த்துக்கொண்டே வந்த குழந்தை பிரபாகரன் அப்படியே ரஸ்தாவில் குப்புறவிழுந்துவிட்டான்.

''ஐயோ! குழந்தை விழுந்துவிட்டதே!'' என்று பீதியுடன் கூச்சலிட்டாள் லீலா. சட்டென்று 'பிரேக்' போட்டுக் காரை நிறுத்தினான் சேஷாத்ரி.

குழந்தை விழுந்த வெகு சமீபத்தில் ஒரு தள்ளுவண்டியில் வெள்ளைக்காரக் குழந்தை

ஒன்றை உட்காரவைத்துக்கொண்டு, தள்ளிக்கொண்டு நடந்துபோய்க்கொண்டிருந்த ஆயா ஒருத்தி சட்டென்று கைவண்டியை அப்படியே நிறுத்திவிட்டு, காரிலிருந்து கீழே விழுந்த குழந்தையை வாரி எடுத்துக்கொண்டு, அதன் சொக்காயின்மீது படிந்திருந்த தூசியைத் தட்டினாள்.

இதற்குள் டாக்டர் சேஷாத்ரி அங்கே விரைந்துவந்து அவளிடமிருந்து குழந்தையை வாங்கிக்கொண்டான். கார் வெகு நிதானமாகவே போய்க்கொண்டிருந்தபடியால் அதிலிருந்து விழுந்த குழந்தைக்கு நல்ல வேளையாகக் காயம் ஏதும் ஏற்படவில்லை. திடீரென்று விழுந்துவிட்ட அதிர்ச்சியின் காரணமாக ஏற்பட்ட பயத்தினால் அழத்தொடங்கியது. பிரபாகரனை கொஞ்சிச் சமாதானம் செய்தபடி காருக்குத் திரும்பி லீலாவிடம் அவனைக் கொடுத்தான் சேஷாத்ரி.

"நல்ல வேளை! சுவாமி தயவில் காயம் ஏதும் படவில்லையே? இனிமேல் கதவோரத்தில் நிற்கமாட்டேயடா, பிரபு?" என்று குழந்தையைத் தழுவி நிம்மதியுற்ற உள்ளத்துடன் உச்சிமோந்தாள் லீலா.

குழந்தையின் கண்களில் இன்னும் ஜலம் தளும்பிக்கொண்டிருந்தது. அழுகை மாத்திரம் நின்றிருந்தது. தன் குஞ்சுக் கரத்தை வெளியே நீட்டி அங்கே கைவண்டியில் உட்கார்ந்திருந்த வெள்ளைக்காரக் குழந்தையைச் சுட்டிக்காட்டி, "அம்மா, அதோ பாரும்மா! சேப்பு பாபா! நன்னாருக்கில்லே?' என்று தன் சந்தோஷத்தைத் தெரிவித்தது.

லீலா காருக்கு வெளியே எட்டிப்பார்த்தாள். கைவண்டிக்கருகில் நின்றுகொண்டிருந்த அந்தத் தாதியின் கண்களும் லீலாவின் கண்களும் நேரடியாய்ச் சந்தித்தன. லீலா ஆச்சர்யத்தோடு ஒரு கணம் யோசித்துவிட்டு, பிறகு திடீரென்று நினைவு வந்தவளாய் அந்த ஆயாவைப் பார்த்து "அழகாயி அல்லவாடீ நீ?" என்று வியப்பும் மகிழ்ச்சியும் மேலிடக் கூவிக்கொண்டே காரைவிட்டுக் கீழே இறங்கிவிட்டாள்.

அந்த ஆயாவும் (நம் அழகாயிதான்) இப்பொழுது லீலாவை அடையாளம் கண்டுகொண்டாள். "லீலாம்மா? நீங்களா அம்மா? நல்லா இருக்கீங்களா தாயீ? இத்தனை வருசங்களாயும் என்னை எப்படியோ

S. K. R. & CO.

PERFUMERS

Arunachala Asari St. :: Jothy Building

SALEM TOWN

எஸ். கே. ஆர்.

& கம்பெனியாரால்

தயாரிக்கப்பட்ட மைசூர் சக்தி ஊதுபத்திகள், ஹேர் ஆயில், பேஸ் பவுடர் முதலிய வாசனை திரவியங்களை வாங்கி ஆனந்தியுங்கள்.

ஏஜண்டுகள் தேவை.

எஸ். கே. ஆர். & கோ.

பார்ப்யூமர்ஸ்

அருணசல ஆசாரி தெரு, சேலம் டவுன்

அடையாளம் கண்டு பிடிச்சுட்டீங்களே! ஒங்க கொயந்தயா விழுந்துடுச்சு? நல்ல காலம் அடிபடாமே தப்பிச்சுதே என் ராசா!'' என்று படபடவெனப் பேசிக் கொண்டே போனாள்.

லீலாவும் அழகாயியை இவ்வளவு வருஷங்களுக்குப் பிறகு அகஸ்மாத்தாய்ச் சந்தித்த ஆனந்தத்திலும் ஆச்சர்யத்திலும் ஒரேயடியாய் மூழ்கிப் போய்விட்டபடியால் தன் கணவனைக் காக்க வைத்துவிட்டதைப் பற்றி யோசிக்கவேயில்லை. மும்முரமாய் அழகாயியுடன் பேச்சுச் சுவாரஸ்யத்தில் ஆழ்ந்துவிட்டாள்.

சேஷாத்ரிக்குக் கோபம் கோபமாய் வந்தது. "என்ன லீலா இது? நட்ட நடுரோட்டில் யாருடனோ வம்புபேச நின்றுவிட்டாயே! போதாச்சு வா.'' என்று சொல்லிக் கொண்டே காரை ஸ்டார்ட் செய்தான்.

லீலா அதி வினயத்துடன் தன் கணவன் சமீபம் வந்துநின்று, தணிந்த குரலில் "நீங்கள் காரை விட்டுக்கொண்டு ஸ்ரீதரனோடு பிருந்தாவனத்திற்குப் போங்கள். இங்கிருந்து இன்னும் இரண்டு பர்லாங்கு தூரம் தானே இருக்கிறது தோட்டம்? நான் பிரபாகரனை எடுத்துக்கொண்டு, அந்தத் தாதியுடன் பேசிக்கொண்டே நடந்துவந்து சேருகிறேன். அவள் பல வருஷங்களுக்கு முன் எங்கள் வீட்டில் வேலைக்கிருந்தவள். அவளிடம் எனக்குக் கொஞ்சம் பழைய கதையெல்லாம் பேச வேண்டியிருக்கிறது. நீங்கள் மேல் டெர்ரேஸி (Terrace) லேயே இருங்கள். நான் சீக்கிரம் வந்துவிடுகிறேன்'' என்று கேட்டுக்கொண்டாள்.

சேஷாத்ரி "உம், சரி'' என்று அவளுக்கு அரைமனதுடன் அனுமதி அளித்துவிட்டு, பெரியபிள்ளையைத் தன் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டு டெர்ரேஸ் கார்டனுக்கு (Terrace Gardens) காரை ஓட்டிச் சென்றான்.

லீலா, அழகாயி இருந்த இடத்திற்குப் பிரபாகரனுடன் திரும்பிவந்து "அழகாயி! நாம் பேசிக்கொண்டே நடந்துபோகலாம் வா. அவர் முன்னால் காரிலே போய் எனக்காக அங்கே காத்துக்கொண்டிருப்பார்'' என்றாள்.

"இப்படி கொடுங்கம்மா புள்ளையை; வண்டியிலே குந்தவைத்து தள்ளியாறேன். நீங்க என்னாத்துக்கு சொமக்கணும்? (வண்டியில் உட்கார்ந்திருந்த அந்த வெள்ளைக் காரக் குழந்தையைப் பார்த்து) ஆலிஸ், திஸ் பேபி ஆல்ஸோ ஸிட், ஆல்ரைட்? யூ போத் பிரெண்ட்ஸ்? (Alice, this baby also sit. Alright? You both friends?)'' என்று பட்லர் இங்கிலீஷில்-இல்லை-ஆயா இங்கிலீஷில் கூறிக்கொண்டே வெள்ளைத் தோல்குழந்தையின் எதிர்ப்புறத்தில் பிரபாகரனை உட்காரவைத்துவிட்டு வண்டியைத் தள்ள ஆரம்பித்தாள். லீலாவும் அவளைப் பின்தொடர்ந்தாள். குழந்தைகள் முதலில் ஒன்றை ஒன்று முறைத்துப் பார்த்துக் கொண்டன. பிறகு சில நிமிஷங்களுக்கெல்லாம் தங்கள் சங்கோஜத்தைக் களைந்துவிட்டு, ஒன்றுக்கொன்று புரியாத பேச்சையும் ஜாடைமாடைகளையும் கலந்தடித்துக் குலாவ ஆரம்பித்தன.

இப்பொழுதும் லீலாவே முதலில் பேச ஆரம்பித்தாள். "அழகாயி, பல வருஷங்களுக்கு முன்னர் நம் வீட்டில் காணமல் போய், நீ திருடினதாகப் பொய்யும் புழுகுமாய் ஒப்புக்கொண்டாயே அந்த வெள்ளிப் பாலாடை அப்புறம் அகப்பட்டு விட்டதடீ! ஏதுக்கடி அப்படி, குற்றம் செய்யாமலே செய்ததாக அனாவசியமாகப் பழியை வாங்கிக் கட்டிக்கொண்டாய்?'' என்று அழகாயியின் முகத்தைக் கூர்ந்து பார்த்துக் கொண்டே கேட்டாள் லீலா.

சிறிதும் ஆச்சர்யமோ படபடப்போ தென்படாத சாவதானமான குரலில் "எங்கேம்மா இருந்துச்சு அது?'' என்று வினவினாள் அழகாயி.

"உன்னை வேலையை விட்டு நீக்கிய மறு வருஷமே எனக்குக் கல்யாணம் நிச்சயமாச்சு. அப்பொழுது கல்யாணத்திற்காக நம்வீடு பூராவும் ரிபேர் செய்தார்கள். ஓடு மாற்றும்பொழுது, கூடத்துத் தாழ்வாரத்து ஓட்டின் மீது பாலாடை கிடந்தது. ஒரு வருஷத்திற்கு மேலாக அது அங்கே ஒளிந்து கொண்டிருந்திருக்குப் பாரேன்! அப்போதெல்லாம் தஞ்சாவூரில் குரங்குகளின் தொல்லை பல வீடுகளில் ஏற்பட்டிருந்தது உனக்கு நினைவு இருக்கிறதா? தூண் ஓரத்தில் அம்மா வைத்துவிட்டுப் போயிருந்த அந்தப் பாலாடையையும் குரங்குதான் தூக்கிக்கொண்டுபோய் ஓட்டின்மேல் போட்டுவிட்டுப் போயிருக்க வேண்டுமென்று பிறகு எல்லோரும் ஊகித்துச் சொன்னார்கள். இந்த ஊகம் ஒருவருக்காவது உன்னைக் குற்றம் சாட்டியபொழுது தோன்றவில்லை. மேலும் நீயும் எடுத்ததாக ஒப்புக்கொண்டுவிட்டாய். நீ ஏதுக்கு அப்படி ஒரேயடியாய்ப் புளுகி இல்லாத

பழியை ஏற்றுக்கொண்டாய் என்ற காரணம்தான் ஒருவருக்கும் விளங்கவில்லை! உனக்கு அப்பொழுது பைத்தியம் பிடித்திருந்ததாடீ அழகாயி?'' என்று ஆச்சர்யத்தோடு கேட்டாள் லீலா.

பழைய சம்பவங்களின் வேதனைதோய்ந்த நினைவுகள் ஒன்றன்பின் ஒன்ருக அழகாயியின் மனத்திரையில் தோன்றி அவள் உள்ளத்தை ஒரு கலக்குக் கலக்கிவிட்டது. கண்களில் கண்ணீர் சுரந்து ததும்பியது. அதைத் துடைத்துக்கொண்டே தொண்டையைக் கனைத்துக்கொண்டாள். ''லீலாம்மா, நீங்க சரியானபடிதான் கேட்டீங்க! ஆமா, எனக்கு அப்போது பைத்தியம்தான் பிடிச்சிருந்தது! ஒரு ஆசாமிமேலே பலமா பித்து பிடிச்சிருந்துதுன்னு வச்சுக்குங்க. அநியாயமாய் அந்த ஆளு அடிபட்டு வலி தாங்காம துடிப்பதைக்காண என் மனம் சகிக்கவில்லை. அதைத் தடுக்கவே நான் செய்யாத ஒரு குத்தத்தை செய்ததாக ஒத்துக்கிட்டேன். திருடி எங்கற பட்டத்தை வாங்கிக் கட்டிக்கிட்டு நல்ல பெயரையும் வேலையையும் போக்கடிச்சுக்கிட்டேன்!'' என்று பெருமூச்சுவிட்டாள் அழகாயி.

''தோளப்பனைத் தானேடீ சொல்லுகிருய்? அவன் அடிபடுவதைக் காணச் சகிக்காமலா நீ, பொய்யும் புளுகுமாய்ப் பாலாடையைத் திருடினதாக ஒப்புக்கொண்டாய்? என்ன அதிசயண்டீ! எல்லாரும் நம்பும்படி ஒரேயடியாக அல்லவா சாதித்தாய் அன்றைக்கு! பாலாடையைக் கொடுத்து விட்டுப் பட்டைக்கொலுசு வாங்கினதாக வேறு பொய்சொல்லி ஒரு ஜதை புத்தப் புதுக் கொலுசையும் கொண்டு வந்து கொடுத்தாயே? அது ஏதுடீ?''

''ஆமாங்க லீலம்மா, ஒரு பொய்யைச் சொன்னப்பறம் அதை மறைக்க மேலே மேலே பல பொய் சொல்லாட்டா திருங்களா? அந்தப் பட்டைக் கொலுசைக் கேக்கிறீங்களா? அது நான் சம்பாதிச்ச காசிலிருந்து மாசம் கொஞ்சமாய் மீத்து மூணு வருசமா சேத்து வச்சிருந்த பணத்தைப் போட்டு வாங்கினது அம்மா, பாலாடையெ எந்தக் கடெலெ வித்தேன்னு போலீஸ் ஐயா கேட்டதும் எனக்கு சட்டுன்னு அந்தக் கொலுசு நெனப்பு வந்துச்சுங்க. அதை வாங்கி அப்பொதான் நாலு நாள் ஆகியிருந்துச்சுங்க. பாலாடையெ வித்துட்டு அதெ வாங்கினதாக ஒரு சரடு விட்டேனுங்க'' என்று கூறித் தனது பழைய திருசமனை நினைத்துப் பார்த்து லேசாய்ச் சிரித்தாள் அழகாயி.

''அதுபோகட்டும் அழகாயி! நீ யாருக்காக ஒரு பெரும் பொய்யைச் சொல்லி இல்லாத பழியையும், பொல்லாப்பையும் வேண்டுமென்றே சுமந்துகொண்டாயோ அந்த ஆசாமி அப்புறம் திரும்பிப் பார்த்தானு உன்னை என்றுதான் கேட்கிறேன்! நீ போனபிறகு அவன் நம்ம வீட்டில் அதிக நாள் இருக்கவில்லை. ஒரு மாதமோ என்னமோதான் இருந்தான். அந்த ஒருமாத காலமும் உன்னை வாய் ஓயாமல் திட்டித் தூற்றிக்கொண்டும் சபித்துக்கொண்டும்தான் இருந்தான். நான் வேண்டுமென்றே ஏதாவது சாக்கை வைத்துக்கொண்டு அவனிடம் உன் பேச்சை எடுப்பேன். அப்பொழுது அவன் மூஞ்சியைப் பார்க்கவேண்டுமே! கடுவன் பூனைமாதிரி முகத்தைச் சிடுத்துக்கொண்டு, 'போங்க லீலம்மா! இன்னொரு வாட்டி அந்தக் கள்ளச் சிறுக்கியின் பேச்சை என் காதுலே போடாதீங்க!' என்று எரிந்து விழுவான். பிறகு ஒரு மாதத்திற்கெல்லாம் தன் தாய்க்கு உடம்பு சுகமில்லையென்று பூங்குளத்தோடு போய்விட்டான். அப்புறம் அவனைப்பற்றித் தகவலே எங்களுக்குத் தெரியவில்லை. எனக்குக் கல்யாணம் ஆன அடுத்த வருஷம் அப்பாவைத் தெலுங்கு ஜில்லாவுக்கு மாற்றிவிட்டார்கள். பாலாடை ஒட்டுமேல் கிடந்து அகப்பட்டதிலிருந்து வீட்டில் எங்களில் ஒருவருக்காவது மனசு நிம்மதியே கிடையாது. அநியாயமாய் உன் மேல் சந்தேகப்பட்டு உன்னை வீட்டைவிட்டுத் துரத்தினேமே என்று எல்லோரும் ரொம்ப பச்சாத்தாபப்பட்டோம். பாலாடைதான் அகப்பட்டுவிட்டதே! உன்னுடைய சொத்தான அந்த வெள்ளிப்பட்டைக் கொலுசை என்ன செய்வதென்ற கேள்வி பிறந்தது. அதை வல்லத்திலிருக்கும் அழகம்மன் கோவிலில் சமர்ப்பித்துவிட்டு, அபராதக் காணிக்கையாக ஐந்து ரூபாய்களையும் அழகம்மன் சன்னிதானத்திலிருக்கும் உண்டியில் போட்டுவிடலாமென்று பாட்டியம்மா யோசனை கூறினர்கள்.

ஆனல் நான் அதற்கு இஷ்டப்படவில்லை. உன்னுடைய நினைவின் அடையாளமாக எனக்கு அந்தக் கொலுசுகள் வேண்டுமென்று பிடிவாதம் பிடித்து, அவைகளை வாங்கி என் பெட்டியில் பத்திரமாய் வைத்துக்கொண்டேன். பதினைந்து ரூபாய் பணத்தை, அதற்கு ஈடாக, அழகம்மன் உண்டியில் சேர்ப்பித்து விட்டேன். இன்றைக்கும் அந்தக் கொலுசுகள் என்னிடம்தான் இருக்கின்றன. அடிக்கடி அவைகளை எடுத்துப் பார்த்து உன்னைப்பார்க்கும் ஆனந்தத்தை அடைவேன். ஆமாம், என்னைத்தான் மைசூர் சீமையில் கட்டிக் கொடுத்தார்கள்

என்றால் நீ என்னமாடீ இந்தக் கன்னடச் சீமைக்கு வந்து சேர்ந்தாய்? தோளப்பன் இப்பொழுது எங்கே, என்ன பண்ணிக் கொண்டிருக்கிறானோ தெரியவில்லையே! நீ அவனைப்பற்றி இப்பொழுதெல்லாம் நினைக்கிறதேயில்லையா அழகாயி? அந்த நாளில் அவன் பேச்சை எடுத்தால் உன் வாயெல்லாம் ஒரே பல்லாகிவிடுமே! எப்படியடி உன்னால் அவனை மறக்கமுடிந்தது?'' என்று வியப்புடன் கேட்டாள் லீலா.

''மறக்கவாவது மண்ணாவது? அதாலே தானேம்மா மைசூர் சீமைக்கு நான் வந்தேனுங்க. என் கதையை சுருக்கமா சொல்லிப்புடறேன் கேளுங்க'' என்று ஆரம்பித்தாள் அழகாயி. 'சுருக்க'மாக என்ற பீடிகையுடன் ஆரம்பித்தும் கூட அழகாயிக்கும் லீலாவுக்கும் இடையே நடுநடுவே ரொம்ப விளக்கமாகவே சம்பாஷணை நடந்தேறியபடியால் அதையெல்லாம் விவரமாக இங்கே குறிப்பிடுவது இயலாத காரியம். சாராம்சத்தை மாத்திரம் கூறிவிட்டுக் கதையை முடிக்கலாமா?

பல ஆண்டுகளுக்கு முன் ஒருநாள் முன்ஸிப் வீட்டிலிருந்து வேலையைவிட்டு நீக்கப்பட்ட அழகாயி அன்று சாயந்திரமே தோளப்பனை நேரில் சந்தித்து உண்மை விஷயத்தை அவனிடம் வெளியிடலாம் என்ற உத்தேசத்துடன்தான் இருந்தாள். அவனைத் தனிமையில் சந்தித்து இரண்டு வார்த்தைகள் மனம்விட்டுப் பேச ஆனமட்டும் பாடுபட்டுப் பிரயத்தனம் செய்தாள் அழகாயி. ஆனால் முன் கோபமும் பிடிவாத குணமும் உள்ள தோளப்பன் ஒரே விறைப்பாய் விறைத்துக்கொண்டு அழகாயி நின்ற பக்கம்கூடத் திரும்பிப்பாராமல் அவளைக்கண்டால் காறி உமிழ்ந்து உதாசீனம் செய்து அவளுடைய உத்தேசம் நிறைவேறாதபடி நடந்துகொண்டான். எல்லாம் அவன் அவள்மேல் கொண்டிருந்த தப்பெண்ணமும் அதன் நிமித்தம் உதயமாகி இருந்த தீராத துவேஷமும்தான் காரணம். என்னென்னவோ தந்திரோபாயங்கள் எல்லாம் செய்துபார்த்து, தோளப்பனுடன் பேச்சுக்கொடுக்க அரும்பாடு பட்டாள் அழகாயி. அந்தக் கல்லுக்குண்டு ஒன்றுக்கும் மசியவில்லை. கேவலம் ஒரு திருடியை, தான் நல்ல பெண் என்று எண்ணி மதிப்பும் அன்பும் காட்டி, தன் மனதையே அவளிடம் பறிகொடுத்துவிட்டு, முட்டாள் தனமாய் மோசம் போய் விட்டதைப்பற்றி, நினைக்க நினைக்க, தோளப்பனின் உள்ளம் குரோதத்தினால் சீறும். எரியும் நெருப்பில் எண்ணெயை ஊற்றுவதுபோல் அழகாயி வேறு அவன் எதிரில் சில நாட்களாக அடிக்கடி தோன்றி அவனுடன் பேச வருவதைக்

இண்டோ கம்மர்ஷியல் பாங்க் லிமிடெட்

ரிஜிஸ்டர்டு ஆபீஸ்: மாயவரம் ★ ஸென்ட்ரல் ஆபீஸ்: மதராஸ்

ஸிட்டி ஆபீஸ்கள்:

சைனா பஜார், மாம்பலம், மயிலாப்பூர்,
திருவல்லிக்கேணி, பெரியமேட் எழும்பூர்

பிராஞ்சுகள்:

அமதலவல்ஸா	கும்பகோணம்	சாலூர்	திருச்சினாப்பள்ளி
அனகாபள்ளி	மதுரை	சீயாழி	திலாறு (சிகாகோல்)
சிதம்பரம்	மருடேரு	தாடபள்ளிக்கூடம்	வேலூர்
சித்தூர் (கொச்சி)	பாலக்காடு	தஞ்சாவூர்	விஜயபுரம் (திருவாரூர்)
காஞ்சீவரம்	பார்வதிபுரம்	திருநெல்வேலி ஜங்ஷன்	விருதுநகர்
ஈரோடு	புதுக்கோட்டை	திருநெல்வேலி டவுன்	விஜயநகரம்
காரைக்குடி			

எல்லாவிதமான பாங்கிங் அலுவல்களும் நடத்தப்படும்.

எஸ். என். என். சங்கரலிங்க அய்யர்,
மானேஜிங் டைரக்டர்.

கவனித்ததும் அவன் கோபம் பன்மடங்கு அதிகமாகும். அவள் சற்றுத்தூரத்தில் வந்துகொண்டிருக்கும் பொழுதே இவன் வேறு வழியாய்த்திரும்பி அவள் பார்வையி லிருந்து நழுவி விடுவான். இப்படியாகச் சில தினங்கள் கழிந்தன. அழகாயிக்கும் அலுத் துப்போய் விட்டது. தன் பேரில் அவனுக் குத் தப்பபிப்ராயம் பலமாக உண்டாகி வெறுப்பும் கோபமும் உச்சநிலையை அடைந் திருப்பதை அவள் நன்கு அறிந்துகொண் டாள். ஒருகால் பேச சந்தர்ப்பம் வாய்த்து அவனிடம் உண்மையைச் சொன்னால்கூட அவன் இனிமேல் தன் வார்த்தைகளை நம்ப வே மாட்டான் என்ற ஓர் எண்ணம் திர் மானமாய் அவளுக்கு ஏற்பட்டு விட்டது.

தன் குருட்டுத் தந்தையையும் அழைத்துக் கொண்டு தஞ்சையைவிட்டே வெளியேறித் திருச்சியில் குடிபுகுந்தாள், அந்த ஊரிலே யும் முன்போல் நாலு வீட்டில் பத்து பாத் திரம் தேய்த்தும் வீடுவாசல் கூட்டியும் ஏதோ அவர்களிருவருடைய ஜீவனத்துக்குப் போதுமான பணம் சம்பாதித்துக் காலத் தை ஓட்டிவந்தாள். திருச்சிவந்து சேர்ந்த மறுவருஷமே அவள் தந்தை இறந்துவிடவே ஒரு பந்தம் விட்டதென்று எண்ணி வாழ்க் கையில் கொஞ்சமும் சந்தோஷமோ, பிடிப்போ இல்லாமல் முடுக்கிவிட்ட இயந் திரத்தைப் போல் உணர்ச்சியில்லாமல் ஏதோ வேலை செய்துகொண்டு வந்தாள்.

அந்தச் சந்தர்பத்தில் ஓர் ஆங்கிலோ இந் திய ஸ்திரீயின் சிபார்சின்மேல் திருச்சி பெண்கள் உயர்தரப் பாடசாலை ஒன்றில் அழகாயிக்கு மாதம் பத்து ரூபாய் சம்பளத் தில் வேலை கிடைத்தது. அங்கே வாசிக்க வரும் பெண்கள் நகை ஒலியையும் குதூகல மான பேச்சையும் அடிக்கடி கேட்டுவந்த அழகாயியின் நடத்தையில் சிறுகச் சிறுக மாறுதல் ஏற்பட்டுவந்தது. முன் மாதிரி உணர்ச்சியற்ற கட்டைபோல் இல்லாமல் பள்ளிமாணவிகளுடன் வேடிக்கையாய்ப் பேசுவதும் அவர்கள் ஏவிய சில்லறை வேலை களை முகம் கோணாமல் செய்து கொடுப்பது மாய் இருந்து கூடிய வரையில் உத்சாக மாகவே காலம் கழித்து வந்தாள். பின்னும் இரண்டு வருஷங்கள் கழிந்தன. எவ்வ ளவோ முயற்சி செய்து பார்த்துங்கூட அவ ளால் தோளப்பனைப் பற்றிய அழியா நினைவைமட்டும் தன் மனதிலிருந்து அகற்ற முடியவில்லை. அவனைப்பற்றிஎண்ணி உரு கிப் பல இரவுகள் அழுது அழுது தூங்காமல் கழித்திருக்கிறாள்.

அந்த வருஷம் மேற்சொன்ன பள்ளிக் கூடத்தை இன்ஸ்பெக்ட் செய்ய மிஸ்டர் வின்க்ளேர் என்ற ஒரு ஆங்கிலேயர் வருவ தாக ஏற்பாடாகி இருந்தது. குறிப்பிட்ட தினத்தில் அவரைத் தங்கள் பள்ளிக்கூடத் திற்கு வரவேற்பதற்காக ஸ்கூல் உபாத்தி யாயினிகள் அனைவரும் வாசல் காம்பவுண் டில் காத்துக்கொண்டு ஆயத்தமாக நின் றிருந்தனர். மாணவிகள் எல்லாரும் தத்தம் வகுப்புகளில் இருப்புக்கொள்ளாமல் தவித் துக்கொண்டிருந்தனர்.

அழகாயியும் அன்று காம்பவுண்டிலிருந்த மரத்தடியில் நின்றுகொண்டபடி இன்ஸ் பெக்டர் துரையின் கார் கேட்டுக்குள் நுழை வதையும் அவர் இறங்கியவுடன் அவரை மரியாதையுடன் வரவேற்று உள்ளே அழைத்துச் செல்வதையும் வேடிக்கை பார் த்துக்கொண்டிருந்தாள்.

காரை ஓட்டிவந்த டிரைவர் ஒரு பீடியைப் பற்றவைத்துக்கொண்டு, தன்னுடன் வந்தி ருந்த க்ளீனரை காரைக் கவனித்துக்கொள் ளும்படி ஏவிவிட்டு, அப்பால் போய்விட் டான். க்ளீனர் காரின்மேல் படிந்திருந்த தூசியைத் துணியால் துடைத்துச் சுத்தம் செய்ய ஆரம்பித்தான். அகஸ்மாத்தாய் நம் அழகாயியின் பார்வை அந்த க்ளீனரின்மேல் விழுந்தது! அவ்வளவுதான்! அவள் உள்ளம் சொல்லமுடியாத ஒருவித இன்பவேதனை யினால் துடியாய்த் துடித்தது. படபடக்கும் இதயத்தை ஒரு கையால் அமுக்கிப் பிடித் துக்கொண்டு, சுற்று முற்றும் ஒருமுறை பார்த்துவிட்டு, மூன்றும் மனுஷர் யாரு மில்லை என்பதை அறிந்து, அந்த க்ளீனர் நின்ற இடத்தை நோக்கி வேகமாய் நடந்து வந்தாள்.

அந்த ஆசாமி வேறு யாருமில்லை. இவ் வளவு காலமாக அழகாயி தன்னுடைய இதயக் கோவிலில் இருத்திக் கும்பிட்டுவந்த அவளுடைய இஷ்ட தெய்வமான தோளப் பன்தான்! முதலில் அவளுக்கே சற்றுப் பய மாகத்தான் இருந்தது. எங்கே முன்போல் தன் முகத்தில் காறி உமிழ்ந்துவிட்டு அப் பால் போய்விடுவானோவென்று மனதை ஒருவிதமாய்த் தைர்யப்படுத்திக்கொண்டு, விடு விடு என்று நடந்து, அவன் எதிரில் வந்து நின்று, தனது இடுப்பில் கையை வைத்துக்கொண்டு "இந்தா, உன்னைத் தானே! இப்பவானும் நான் சொல்லப் போற இரண்டு வார்த்தைகளை உன் காது லே வாங்கிக்கொள்ளப் போறயா? இல் லாட்டி மூன்னைப்போல எதிரே நில்லாமெ நழுவிவிடப் போறயா?" என்று சற்று அதட்டினாப்போலவே கேட்டுவிட்டு அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

தோளப்பன் இதை எதிர்பார்க்கவே இல்லை. ஒரே யடியாய் முதலில் திடுக்கிட்டுப்போய், தன் எதிரில் நிஜமாகவே அழகாயி வந்து நிற்கிருளா அல்லது கனவுதான் காண்கிருேமா என்று சந்தேகப்பட்டு அவளை மேலும் கீழும் பார்த்தபடி சில விஞடிகள் ஸ்தம்பித்து நின்ருன். பிறகு தான் காண்பது நனவுதான் என்று உணர்ந்ததும் அவன் உள்ளத்தின் ஆழத்தில் புதைந்துகிடந்த உண்மையான காதல்தான் அந்த க்ஷணத்தில் மேலோங்கி நின்றது. நடுவாந்தரத்தில் ஏற்பட்டிருந்த மனக் கசப்பும் துவேஷமும் எங்கோ ஓடி ஒளிந்தன. ஆச்சர்யமும் ஆனந்தமும் ஒருங்கே கூடிய குரலில், "யாரு அளகாயியா? நீ இங்குட்டா இருக்கே? நல்லா இருக்கயா?" என்று அவளை க்ஷேமம் விசாரித்தான்.

"ஆமா, அளகாயியேதான்! வேறு யாருமில்லை! யோகச் சேமம் பின்ஞடி விசாரிச்சுக்கிடலாம். மொதல்லெ நான் சொல்லப் போறதெ கவனமா கேட்டுவச்சுக்கோ. மூணு வருஷத்துக்கு மின்னெ தஞ்சாவூரு முன்ஸிப் ஐயா வூட்டுலே காணுமெப்போன வெள்ளிப் பாலாடெயெ நான் எடுத்தேன்னு ஒத்துக்கிட்டது ஒனக்கு நெனப்பு இருக்கில்லே? ஒன் மேலே அனியாயமா சந்தேகப்பட்டு ஒன்னைப் போட்டு அந்தப் போலீசு ஐயா எரக்கம் இல்லாதெ அடிச்சுக் கொல்றதைப் பார்க்க மனம் சகிக்காமெதான் நான் இல்லாத பழியை என்மேல் போட்டுண்டு நீ வீணு அடிபடுவதைத் தடுத்தேன்! தெரிஞ்சுதா? அதுக்குச் சரியான பலனையும் கண்டாச்சு!" என்று துக்கம் தொண்டையை அழுத்தக் கூறிவிட்டுத் தேம்பித்தேம்பி அழ ஆரம்பித்துவிட்டாள் அழகாயி.

தோளப்பன் மின்சாரத்திஞல் தாக்குண்டவன்போல் அதிர்ச்சி யடைந்தான். அவனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. சிறிது நேரத்திற்கெல்லாம் சமாளித்துக்கொண்டு, "இந்தா அழுவாதெ அளகாயி! நீ சொல்றது நெசமா அளகாயி? சத்தியமா நீ அந்தப் பாலாடையைத் திருடல்லையா? பின்னெ ஏதுக்காக அப்படி ஒரேயடியாய் நெசம் போல சாதிச்சு பொல்லாப்பை வாங்கி கட்டிக்கிட்டே? நெசமாகவா? சத்தியமாவா? நம்ம சாமிமேலே ஆணையாவா?" என்று மேலும் மேலும் உரத்துக்கூவி அழகாயியின் தோளைப்பற்றி உலுக்கிஞன் தோளப்பன்.

"நம்ம கொலதெய்வத்துமேலெ ஆணையிட்டுச் சொல்றேன். பாலாடையெ நான் தொடவே இல்லை! அதான் சொன்னேனே. நீ அடிபடுவதைக் காண என் நெஞ்சு துடிச்சுப்போச்சு! நான் எடுத்தேன்னு ஒப்புக்கிட்டால் ஒன்னை அடிக்கமாட்டாங்கன்னு தோணிச்சு. அப்படியே பொய்யும் புளுகுமாய் ஒப்புக்கிட்டேன்! இன்னும் ஒனக்கு நம்பிக்கை வரலையா?" என்று மறுபடியும் கண்ணீர்விடத் தொடங்கிவிட்டாள்.

இதற்குள் சமீபத்தில் பேச்சரவம் கேட்டபடியால் தோளப்பனும் அழகாயியும் அன்று மாலை ஒரு குறிப்பிட்ட இடத்தில் சந்தித்துப் பேசிக்கொள்வதாக ஏற்பாடு செய்துகொண்டு பிரியமாட்டாமல் பிரிந்தனர்.

அவ்விதமே அன்றுமாலை சந்தித்துப்பேசி ஒருவர் மனதை ஒருவர் நன்கு அறிந்துகொண்டு பழைய சம்பவங்களை அடியோடு மறந்துவிட்டுப் புத்துயிர்பெற்ற காதலர்களாகக் கூடியிருப்பதெனத் தீர்மானித்தனர். தோளப்பன் தான் செய்த தவறுக்கு அழகாயியின் கால்களில் விழாத தோஷமாய் மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். முன்ஸிப் வீட்டுக்காரர்கள் மட்டும் அப்பொழுது தஞ்சாவூரிலேயே இருந்திருந்தால் தான் அப்பொழுதே ஓடிப்போய் அழகாயியின் நிரபராதித்தனத்தை அவர்களுக்கு வெளியிட்டுவிட்டு வந்திருக்கலாமே என்று தவித்தான் தோளப்பன். அவன் கருத்தை அறிந்த அழகாயி "நல்லாத்தான் இருக்குது; நீ சொல்றது? பாலாடெ காணுமெபோனது என்னமோ போயிடுச்சு! அதை எடுத்தேன்னு நான் அத்தனைபேருக்கும் முன்ஞடி ஒத்துக்கிட்டும் ஆச்சு. இப்பொ இத்தனெ வருஷம் கழிஞ்சப்பறம் நான் அதெ எடுக்கல்லைன்னு, அவுங்க நம்பிடுவாங்களா? ஒனக்கு பைத்தியம்தான் புடிச்சிருக்கு!" என்று தோளப்பனைப் பரிகாசம் செய்தாள்.

தோளப்பனுடைய தாய் இறந்த பிறகு அவன் திருச்சியில் ஒரு மோட்டார் கம்பெனியில் சிற்ருளாக வேலைபார்த்து வந்தான். பிறகு இன்ஸ்பெக்டர் துரையான மிஸ்டர் வின்க்ளேர் உதவியால் க்ளீனர் வேலைக்கு அமர்ந்தான். அப்படியே துரையின் அனுமதியைப் பெற்று மோட்டார் ஓட்டவும் கற்றுக்கொண்டுவந்தான். இந்தச் சந்தர்ப்பத்தில்தான் இவனுக்கும் அழகாயிக்கும் எதிர்பாராத சந்திப்பு ஏற்பட்டு, பழைய மனஸ்தாபம் தீர்ந்து, மீண்டும் ஒன்றுபட்ட அன்பர்களாயினர். கூடிய சீக்கிரத்திலேயே இருவரும் விவாகமும் செய்துகொண்டு மனமொத்த தம்பதிகளாயினர்.

விவாகம் ஆன ஆறுமாத காலத்திற்கெல்லாம் தோளப்பனுக்கு மோட்டார் ஓட்டுவதில் நல்ல பயிற்சியும் சாமர்த்தியமும்

ஏற்பட்டு லைசென்சும் பெற்றான். மிஸ்டர் வின்க்ளேர் துரையின் மூத்த மாப்பிள்ளை மைசூர் சமஸ்தானத்தில் எஞ்சினீயர் வேலையில் இருந்து வந்தார். அவரிடத்தில் போய் இருந்து டிரைவர் வேலைக்கு அமரும்படியாக இன்ஸ்பெக்டர் துரை கூறியவுடன் தோளப்பன் மிகுந்த சந்தோஷத்துடன் ஒப்புக்கொண்டு அழகாயியையும் அழைத்துக்கொண்டு தமிழ்நாட்டை விட்டுவிட்டுக் கன்னட சீமையில் குடி புகுந்தான்.

இன்ஸ்பெக்டரின் மகளும் மருமகனும் ரொம்ப தங்கமான மனுஷர்கள். தோளப்பனையும் அழகாயியையும் அவர்கள் வெகு விச்வாசத்துடன் நடத்தி அவர்களை வீட்டோடு தங்களுக்கு உதவியாக வைத்துக்கொண்டனர். தோளப்பனுக்கு மாதம் நாற்பது ரூபாய் சம்பளம். அழகாயியும் குழந்தைகளுக்கு ஆயாவாகவும் துரைசானி அம்மாளுக்குக் கூப்பிட்ட குரலுக்கு ஏனென்று கேட்டுச் சகியாகவும் இருந்து மாதம் இருபது ரூபாய் சம்பளம் பெற்று வந்தாள். இவ்வளவு சௌகர்யங்களும் அமைந்திருக்கும்பொழுது தோளப்பன் அழகாயியின் இல்வாழ்க்கைப்படகு அமைதியாகவும் ஆனந்தமாகவும் மிதந்தது என்றால் அது சகஜம் தானே?

இஞ்சினீயர் துரைக்குக் கிருஷ்ணராஜ ஸாகரத்திற்கு மாற்றலாகி அப்பொழுது தான் ஆறுமாதங்கள் ஆகியிருந்தன. பிரதி ஞாயிற்றுக்கிழமையும் துரையும் துரைசானியும் தங்கள் கைக்குழந்தையை மாத்திரம் அழகாயியிடம் ஒப்பித்துவிட்டுப் பெரிய குழந்தைகளைத் தம்மோடு காரில் உட்கார வைத்துக்கொண்டு மைசூருக்குச் சென்று 'ஷாப்பிங்' ஸினிமா பார்த்தல் முதலிய அலுவல்களை முடித்துக்கொண்டு இரவு பத்து மணிக்குமேல்தான் வீடு திரும்புவார்கள். தோளப்பன் கார் டிரைவ் செய்வான். இந்த மாதிரி ஒரு ஞாயிற்றுக்கிழமை குழந்தை ஆலீஸை அழகாயியிடம் கொடுத்துப் பார்த்துக்கொள்ளச் சொல்லிவிட்டு துரையும் துரைசானியும் மைசூருக்குச் சென்றிருந்தார்கள். தோளப்பன் வழக்கப்படி அவர்களுடன் கார் ஓட்டிக்கொண்டு போயிருந்தான். இங்கே, அழகாயி குழந்தையைத் தள்ளு வண்டியில் வைத்துத் தள்ளிக்கொண்டு பிருந்தாவனத்திற்குப் போய்க்கொண்டிருந்த சமயத்தில்தான் லீலாவும்

மேதாஸ்

"சுந்தரி எலிக்ஸர்"

ஸ்திரீகளின் சூதக சம்பந்தமான வியாதிகளுக்கு

★ சிறந்த டானிக் ★

ஆயுர்வேத முறைப்படி தயார்செய்தது.

பிரபல டாக்டர்களின் மதிப்பைப் பெற்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள் :—

K. S. மேதா & Co., மதராஸ்.

ஹைதராபாத் ஏஜண்டு :—

ஸென்ட்ரல் மெடிகல் ஸ்டோர்ஸ்,

ஸெகண்ட்ராபாத்.

அவளும் அகஸ்மாத்தாய்ச் சந்தித்து அளவளாவிப் பேசி மகிழ்ந்தனர்.

பேச்சுச் சுவாரஸ்யத்தில் தன் கணவன் தனக்காக டெர்ரேஸ் கார்டனில் காத்துக் கொண்டிருப்பானே என்ற விஷயமே மறந்துபோய்விட்டது. அதையும் அழகாயி தான் அவளுக்கு நினைவு மூட்டும்படி ஆயிற்று. "ஆமாண்டி அழகாயி, அவர் காத்துக்கொண்டுமட்டுமில்லாமல் கோபித்துக்கொண்டுமிருப்பார். ரொம்ப முன் கோபக்காரர்" என்று சொல்லிச் சிரித்துவிட்டு நடையின் வேகத்தை அதிகரித்துக் கொண்டு "தோளப்பனிடம் சொல்லுடீ அழகாயி, நான் அவனைக் கட்டாயம் பார்க்க வேண்டும். இந்தச் சீட்டில் எங்கள் வீட்டு விலாஸம் இருக்கிறது. கூடியசீக்கிரம் நீயும் அவனும் ஒருநாள் மைசூரிலுள்ள எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டுப் போங்கள். தவறக் கூடாது தெரியுமா? மேலும் உன்னுடைய உரிமைப் பொருளான அந்த வெள்ளிப் பட்டைக்கொலுசுகளை என்னால் இனிமேல் வைத்திருக்கமுடியாது, அவைகளை உன்னிடம் கொடுத்துவிடுகிறேன்" என்று புன் சிரிப்புடன் அவளைப் பார்த்தபடி தங்கள் விலாஸம் எழுதப்பட்ட ஒரு சீட்டை அழகாயியிடம் அளித்தாள்.

அழகாயி அந்தச் சீட்டை வாங்கி வைத்துக்கொண்டு "ஆகட்டும் லீலம்மா, கட்டாயம் வருகிறோம். 'அது'வும் (தோளப்பன்) ஓங்களைப் பார்க்க ஆவலாய்த்தான் இருக்கும். நானைக்கேகூட தொரைகிட்டே ரஜா கேட்டு வாங்கிட்டு ஓங்களைப் பார்க்கப் பொறப்பட்டுவிடுமுங்க" என்றாள்.

லீலா திடீரென்று நினைத்துக்கொண்டவள்போல் "உன்னைக் கேட்க மறந்தே போய்விட்டேனேடீ அழகாயி! உனக்கு குழந்தைகள் கிடையாதாடீ?" என்றாள் அழகாயியை ஏறஇறங்கப் பார்த்தபடி.

அழகாயி ஒரேயடியாய் நாணி கோணிக் கொண்டு அஷ்டவக்கிரம் செய்து உடம்பை நெளித்தபடி பதில்பேச நாவெழாமல் சில வினாடிகள் திண்டாடித் தவித்தாள். பிறகு சற்றுச் சமாளித்துக்கொண்டு "எட்டு வருசமா அந்தக் கடவுளும் கண் தெறந்து பாக்காமலேதான் இருந்தாரு! இப்பத்தான் நாலுமாசமா முழுவாமே............" என்று அரைகுறையாய் நிறுத்தினாள் அழகாயி.

லீலா அவள்படும் சங்கோஜத்தையும் சங்கடத்தையும் கண்டு கலகலவென்று நகைத்தாள்.

நிற்க, பிருந்தாவனத்தில், மேல் டெர்ரேஸில் நின்றுகொண்டு தன் மனைவியின் வருகைக்காகக் கிட்டத்தட்ட முக்கால் மணி சாவகாசமாய்க் காத்துக்கொண்டு அலுப்படைந்து போயிருந்த டாக்டர் சேஷாத்ரி, புன்சிரிப்புடன் அப்பொழுது தன்னை நோக்கி வந்துகொண்டிருந்த லீலாவைக் கண்டதும் "நல்ல ஊர்க்காரி வந்து சேர்ந்தாளப்பா இவளுக்கென்று! ஒரு ஞாயிற்றுக்கிழமை பிச்சுப் பிடுங்கல் இல்லாமல் கணவன் மனைவி இருவரும் உல்லாசமாய் இருப்போம் என்பதற்கில்லை!" என்று கோபத்துடன் முணுமுணுத்தான்.

அழகாயி சற்றுத் தூரத்திலேயே கைவண்டியை நிறுத்திவிட்டுக் குழந்தை பிரபாகரனை எடுத்து லீலாவிடம் கொடுத்துவிட்டு விடைபெற்று, மற்றக் குழந்தையை வண்டியில் வைத்துத் தள்ளிக்கொண்டு வேறு புறமாகத் தோட்டத்திற்குள் சென்றுவிட்டாள்.

தன் கணவன் முணுமுணுப்பை அரையும் குறையுமாய்க் கேட்டுக்கொண்டே அங்கு வந்த லீலா சேஷாத்ரியுடன் கொஞ்சலாய்ப் பேசி அவன் கோபத்தைத் தணித்தாள். பிறகு ஆளுக்கொரு குழந்தையைப் பிடித்து நடத்திக்கொண்டு, பிருந்தாவனத்தின் வனப்புமிகுந்த காட்சியை ரசித்தபடி உலாவத்தொடங்கினர். லீலாவும் நடந்து கொண்டே அழகாயி — தோளப்பன் கதையை ஒன்றுவிடாமல் ஆதிமுதல் அந்தம் வரையில் தன் கணவனுக்கு எடுத்துச் சொன்னாள். சேஷாத்ரியும் கதையை முழுவதும் வெகு கவனமாய்க் கேட்டுவிட்டு, "கற்பனையைவிட உண்மைச் சம்பவங்கள் தான் சில சமயங்களில் வெகு சுவாரசியமாக அமைந்துவிடுகின்றன பார்த்தாயா லீலா? இதையே ஒரு கதையாக எழுதிவிடலாம் போலிருக்கிறதே!" என்றான்.

"எழுதாமல் விடப்போகிறேனா?" என்று நகைத்தாள் லீலா.

லீலாவை ஆசையுடன் பார்த்துக் கொண்டே "நீ லேசுப்பட்டவளா? வெறும் வாயை மெல்லுகிறவளுக்கு அவல் அகப்பட்டால் போதாதா?" என்றான் சேஷாத்ரி. அப்பொழுது அவனுடைய கண்களில் ததும்பிய பெருமிதத்தைப் பார்த்திருக்க வேண்டுமே நீங்கள்!

தீபாவளி

டாக்டர் வே. ராகவன்

'வெள்ளியோடு வெள்ளி' எண்ணெய் காணாவிடினும் 'தீவுளிக்குத் தீவுளி' யாவது எண்ணெய் தேய்த்து நீராடுகிறோம்; இருட்டுடனேயே எழுந்து, விளக்கேற்றி வைத்து, மங்கள ஸ்னானம் செய்து, வணங்கிவிட்டு, புத்தாடைகள் கட்டிக்கொண்டு, மருந்தும் பக்ஷணங்களும் தின்றுவிட்டு, காலையில் நண்பரைக் கண்டு 'கங்காஸ்னானம்' ஆயிற்றா என்று விசாரித்துவிட்டு, விருந்துண்டு களிக்கிறோம். இன்று 'தீபாவளி! இன்று நரகசதுர்தசி!' என்கிறோம். என்ன அர்த்தம்? இப்பெயர்களின் பொருள் யாது? கதை எப்படி? நாம் இன்று செய்யும் ஒவ்வொன்றின் குறிப்பும் என்ன?

இந்த ஐப்பசி, கிருஷ்ணபக்ஷ சதுர்தசி, நரகசதுர்தசி என்று சொல்லப்படுவதின் கதை பூமி தேவிக்கும் பகவானுக்கும் பிறந்து, அரக்கனாயிருந்து பின் விஷ்ணு பகவானிடமே அடிபட்டு மடிந்துபோன நரகாசுரன், 'தன்னைக் கொண்டாடி மக்கள் ஓரிரவு மங்கள ஸ்னானம் செய்து, நல்லுடை தரித்துக் களிக்கவேண்டும்' என்று பகவானை வரம் கேட்க, அவர் அப்படியே அளித்தார் என்பது. மஹாராஷ்டிரம் முதலிய மாகாணங்களிலும் இந்தநன்னாளில் எண்ணெய் ஸ்னானமுண்டு. "நரகசதுர்தசீ சே திவஸீம் தேலா மத்யேம் லக்ஷ்மீ வ ஜலமத்யே கங்கா வாஸ கரிதேம்"—"இந்த நரக சதுர்தசியன்று எண்ணெயில் லக்ஷ்மியும், நீரில் கங்கையும் வஸிக்கிறார்கள்" என்று ஒரு மஹாராஷ்டிர வசனம். ஆனால் அவர்கள் இரண்டு ஸ்னானங்கள் செய்கின்றனர். ஒரு முழுக்கானதும், சிறுமிகளும், பெண்மணிகளும், ஆண் பிள்ளைகளுக்குமுன் ஒருமாவு விளக்கைச் சுற்றிக் கொட்டுவார்கள்; தங்கள் கால்முன் வைக்கப்படும் ஒரு காயை ஆண்கள் காலால் நசுக்குவார்கள்; 'சிராத்' என்ற இக்காய் நரகாசுரனைக் குறிப்பதாம்.

நாம் இன்று எண்ணெய் நீராடியதும் உட்கொள்ளும் மருந்தின் ரஹஸ்யம் என்ன? இது நரக சதுர்தசியையாவது, தீபாவளியையாவது சேர்ந்ததில்லை. எப்படி நரகனுடைய விழாவும், தீபவிழாவும் இன்று கலந்து போயினவோ அதுபோல, இந்தச் சதுர்தசியில், இதன் முந்திய நாளான திரயோதசியின் விழா ஒன்று கலந்துபோயிற்று. ஐப்பசி கிருஷ்ணபக்ஷ திரயோதசி நம் ஆயுர்வேத மூல புருஷரும், பகவானின் அவதாரமுமான தன்வந்தரியின் ஜயந்தி, பிறந்தநாள். சுக்கும், வெல்லமும் கலந்த மருந்து தன்வந்தரியின் நைவேத்யம். தன்வந்தரிக் கொண்டாட்டத்தை நம் ஸௌகர்யத்திற்காக, திரயோதசியிலிருந்து சதுர்தசிக்குக் கொண்டுபோய் மற்ற விழாக்களுக்கிடையே புகுத்திவிட்டோம்.

வடநாட்டில் நரகனைப்போல், பலிசக்ரவர்த்தியும் தீபாவளியில் தோன்றுகிறான். மாவிலோ, சாணத்திலோ பலிசக்ரவர்த்தியின் உருவத்தைச் செய்து ஊர்வலம் வருகிறார்கள் சிலர். நம் பஞ்சாங்கத்தில்கூட தீபாவளி பண்டிகையன்று பலிபூஜை என்று போடப்பட்டிருக்கிறது.

மற்றொரு ஐதிஹ்யம், இத்தீபாவளி வியாபாரிகளின் விழாவென்று. இன்று கடைகளில் பழைய கணக்குகள் முடிந்து புதுக் கணக்குகள் துவக்கமாகின்றன. இவ்வைப்பசி துலா மாதம்; துலா என்றால் தராசு; தராசு வியாபாரிகளையும், வியாபாரத்தையும் குறிக்கும். இன்றுமுதல் மூன்று நாட்களுக்கு லக்ஷ்மீ தேவியின் உருவம் செய்து பூஜை செய்வார்கள்;சில இடங்களில் லக்ஷ்மீ உருவத்திற்குப் பதிலாகப் பணத்தை வைத்தே பூஜை செய்கிறார்கள், நம் ஸ்ம்ருதி நூல்களில் தீபாவளிக்கு முந்திய திரயோதசியை 'தன திரயோதசி' என்றும், அன்று தனத்தைத் தொழவேண்டுமென்றும், அடுத்துவரும் அமாவாசையன்று லக்ஷ்மியைப் பூஜிக்க வேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த லக்ஷ்மி பூஜைக்காகவே இன்று தீபங்கள் ஏற்றப்பட்டு, தீபாவளி கொண்டாடப்படுகின்றது என்றும் ஒரு கொள்கை.

வடநாட்டில் வேறு சில இடங்களில் இன்றே அன்னியரான சகர்களை ஒழித்து விக்ரமாதித்யன் தன் சகாப்தத்தை ஆரம்பித்தான் என்றும், இன்றே லங்கா விஜயத்திலிருந்து திரும்பிய ராமர் பட்டாபிஷேகம் செய்துகொண்டார் என்றும் நம்பப்படுகிறது.

'தீபாவளி' என்ற பெயருக்கு 'விளக்கு வரிசை' என்று பொருள். இதை ஒட்டி நாம் வரிசை வரிசையாய் விளக்கேற்றிக் கொண்டாடும் விழா கார்த்திகையே. ஆனால் வடநாட்டில் இன்றே தீபவரிசைகள் ஏற்

றப்படுகின்றன. புராணங்களிலும் இவ்விரவையே 'தீபான் விதா', தீபத்தோடு கூடியது, என்று குறித்து வர்ணித்திருக்கிறது, வீடுகளிலும், கோயில்களிலும், தெரு, கடை, ஆறு, மலை, மயானம், மரங்கள்—முதலிய எல்லாவிடங்களிலும் அஸ்தமிக்கும் தறுவாயில் விளக்கு வரிசைகளை ஏற்றி, லக்ஷ்மியைப் பூஜை செய்துவிட்டு, பின்பு இரவில் புது உடைகட்டி, விருந்துண்ண வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இவ்வுலகில் பல நாடுகளிலும், பலவிதப்பட்ட மக்களுக்கிடையிலும் வழங்கிவரும் விதவிதமான விசித்ர விழாக்களையெல்லாம் ஆராய்ந்து பார்த்த ஆராய்ச்சியாளர் வந்த முடிபுகளில் முக்யமானது எது என்ருல்,—அனேகமாய்ப் பல விழாக்களின் மூலகாரணம் ப்ராணி வாழ்க்கைக்கே மூலாதாரமாய் இருக்கும், சூரியன், வெளிச்சம், மழை, பயிர் என்ற இயற்கையின் நிகழ்ச்சிகளே. இருள் அகன்று ஒளி மறுபடியும் வருவதே பல பண்டைப் பழக்க வழக்கங்களின் அடிப்படையாகக் காணப்படும் காரணம் என்கிருர்கள். விஷ்ணு என்ற தத்துவம் சூரியனைத் தவிர வேறில்லை என்று வேதத்தை ஆராய்ந்தவர்களுக்கு நன்கு தெரியும். ஆகையால் ஐப்பசியில் சரத் காலம் வந்ததும் இருளிலகப்பட்டுக்கொண்டிருந்த உலகிற்கு வெளிச்சம் ஏற்படும் இயற்கை நிகழ்ச்சியே நரகாசுரனை விஷ்ணு வென்ருரென்று கதையாய்ச் சொல்லப்படுகிறது. மேகங்கள் நீங்கி வானம் கண் திறப்பதே, பாம்பணையில் கிடந்து மழைக்காலம் முழுதும் உறங்கும் விஷ்ணுவும் சரத் காலத்தில் கண்விழிக்கிருர் என்ற கதையின் பொருள். வெளிச்சம் வந்துவிட்டது! அவன் கொடுத்த

Madras Stockists :—**M/s. RAJAN DRUG STORES**
155, Nyniappa Naick Street, MADRAS.

வெளிச்சத்தை, அவ்வெளிச்சத்தைக்கொண்டல்லாது வேறு எதைக்கொண்டு நாம் போற்றுவது? சிறு விளக்குகள் கொண்டே பெரு விளக்கான அவனைப் போற்றுவோம்.

வங்காளத்தின் சில பிரதேசங்களிலுள்ள தீபாவளியில் வேறு சில விசேஷங்கள் காணப்படுகின்றன. அஸ்தமனம் ஆகும் தருணத்தில் ஆறுகளிலும் வாய்க்கால்களிலும் படியிறங்கி, பெண்டுகளும், சிறுமிகளும் விளக்குகளை நீரில் மிதக்கவிடுவார்கள். விளக்குகள் அணையாமல் கவிழ்ந்துவிடாமல் மிதந்துபோனால் நல்ல சகுனமாம். இடைவிடாது ஓடிக்கொண்டிருக்கும் நதியைவிட வேறு என்ன பொருத்தமான உபமானம் இருக்கிறது நம் உலகப் போக்கிற்கு? அதில் மிதந்து செல்லும் விளக்கு ஜீவனுக்கு எவ்வளவு அழகான உபமானம்? நதிகளில் விடும் விளக்குகளுமல்லாமல், உயரிய கம்பங்களின் நுனியிலும் வங்காளிகள் தீபங்களை வைக்கிறார்கள்; இந்தத் தீபாவளி பிதிர்களுக்கு (நம் முன்னோர்களுக்கு) ஆன இரவு என்றும், இன்றிரவு வந்துபோகும் அப்பிதிர்களுக்கு இவ்விளக்குக் கம்பங்கள் வழிகாட்டியாக இருக்கும் என்றும் கருதப்படுகிறது. பிதிர்களுக்குச் சிராத்தமும் இத்தினத்தில் செய்யப்படுகிறது. புராணங்களில், தீபாவளியை ஒட்டிப் பிதிர் தர்ப்பணமும் சிராத்தமும் விசேஷமென்றும், மஹாளயத்தைத் தட்டினவனும், இன்று செய்தால் பெரும் சிறப்புண்டு என்றும் கண்டிருக்கிறது.

வங்காளத்திலிருந்து 'தாய்லாண்ட்' என்ற 'ஸையாம்' தேசத்திற்குச் செல்வோம். அங்கும் தீபவிழாக்கள் இருக்கின்றன. ஒரு தீப விழா புத்தருக்காக; இதில், வங்காளத்தில் நடப்பது போல, விளக்குகளைச் சிறு சிறு படகுகளில் வைத்து ஓடும் நீரில் மிதக்கவிடுவார்கள்; இது புரட்டாசியில் மூன்று நாள் நடக்கும். மற்றொரு விளக்கு விழா விஷ்ணுவிற்காக; கார்த்திகையில் வருவது இது. வங்காளத்தில் காணப்படுவது போல் இங்கும் உயர்ந்த கம்பங்களின்மேல் விளக்குகளை ஏற்றி வைப்பார்கள்; அமாவாஸையில் ஆரம்பித்து மூன்று நாள் நடக்கும். விழா முடியும்போது பாண வேடிக்கைகள் உண்டு. கம்பு நுனியில் வைத்த விளக்குகள் இருளில் ஸஞ்சரிக்கும் பேய் பிசாசுகளைப் பயமுறுத்தி விரட்டுவதற்காக; மேலும் இவ்விளக்குகள் மழைபெய்து நீர் நிரம்பி நிற்கும் வயல்களை இரவுகளில் காவல்காத்து, பயிர்கள்முற்றும் வரைக்கும், 'நீர்களே, நீங்கள் தங்கியிருக்க வேண்டும்' என்றும் வேண்டிக் கொள்வதாகவும் சொல்லப்படுகிறது. இப்படி உயர்ந்த கம்பங்களில் வயலுக்குக் காவல் விளக்குகள் வைப்பது வங்காளத்திலும் உண்டு.

நம் தீபாவளிக்குச் சீனவெடிகள் கொடுக்கும் சீன தேசத்தில் 'சைனீஸ் லேண்டர்ன்' என்ற விளக்குகள் அழகாயிருக்கும்; ஆனால் விளக்குவிழா ஒன்றும் இருப்பதாய்த் தெரியவில்லை. ஆகையால் சீனத்தைத் தாண்டி, ஜப்பான் போவோம்; அங்கே தீபோத்ஸவம் அவச்யம் உண்டு. நம் பஞ்சாங்கத்தை நாம் பார்த்தால் தீபாவளியுடன், யம தீபம், யம தர்ப்பணம், என்று போட்டிருக்கும். யமனுக்கும் அர்க்யம் கொடுக்கவேண்டிய நாளிது; யமன், சித்ரகுப்தன், யமதூதர்கள் —இவர்களை வழிபட வேண்டும். மேலே, வங்காள தீபாவளியில் காலஞ்சென்ற முன்னோர்கள் வந்து போவதைக் கவனித்தோம். தீப விழாவுக்கும், காலஞ்சென்ற முன்னோரான பிதிர்களுக்கும் இருக்கும் தொடர்பு ஜப்பானில் நன்றாய்த் தெரிகிறது. வருஷத்திற்கு ஒரு முறை காலமான ஜீவன்கள் தம் மாஜி உற்றார் உறவினர்களுடைய வீடுகளுக்கு வருகிறார்களாம்; இவர்களை வரவழைக்கவேண்டி உயரிய குன்றுகளின் மேல் இரவில் வரும் முன்னோர்களுக்கு வழிகாட்டப் பற்பல விளக்குகள் உயர்ந்த மூங்கில்களின்மேல் கட்டிவைக்கப்படும்; இது ஆகஸ்ட் மாதக்கடைசியில் நடக்கும்; வந்த பித்ருக்களை ஜனங்கள் கூடி ஊருக்குள் அழைத்துவந்து, மூன்று நாளுக்கு விருந்து செய்து, பின்பு வந்தவழியே அனுப்புவார்கள். ஊரெங்கும் விளக்குகள் ஏற்றப்படும்; விருந்தானதும் எல்லோரும் தம்தம் வேண்டியவர் வீடுகளுக்குச்சென்று ஒருவரை ஒருவர் குசலம் விசாரித்துக்கொள்ளுவர்; மூன்றாம்நாள் முடிவில், நாற்புறமும் வெளிச்சங்கள் எரிய, மடிந்த ஜீவன்கள் வந்தவழியே திரும்பும்; ஒன்றிரண்டு பழைய வாஞ்சை விடாமல் பதுங்கி ஒளிந்து நின்றுவிடும் என்று, வீட்டின்மேல் கற்களை விட்டெறிவார்கள், மூலை முடுக்குகளில் கம்புகளால் தட்டுவார்கள்.

பஸிபிக் கரைகளிலிருந்து மெடிடெரேனியன் கரைகளை அடைவோம்; அங்கு விளக்கோ, வெளிச்சமோ உண்டா என்று பார்ப்போம். பண்டை ஏகிப் தேசத்தின் முதன் மாதம், 17உ; நாடெங்குமுள்ள ஸமாதிகளிலும் கோயில்களிலும் வரும் வருஷம் முழுவதும் இருப்பதற்கான தீயும், தீபமும் அன்று ஏற்றப்படுகின்றன. அதே சமயத்தில் ஜனங்கள் நாடு முழுதும் வீடுவாசல்களில் கணக்கில்லாத தீபங்களை ஏற்றுகின்றனர். மிகவும் ஏழையானாலும், ஒரு விளக்கை ஏற்றி, அதில் உப்புக்கலந்த எண்ணெயைவிட்டு, வாயிலில் கொண்டுவந்து வைப்பார். இரவு முழுதும்

விளக்கு எரியும்; விருந்தும், வம்பும் நடக்கும்; இந்நாட்டிலும் ஆண்டிற்கு ஒருதரம் வந்துபோகும் முன்னோர்களுக்காகவே இவ் விளக்கு விழா கொண்டாடப்பட்டது. ஹெரோ டோடஸ் (Hero dotus) இவ் விழா ஸெய்ஸ் (Sais) என்ற இடத்தில், கீழ் எகிப்தில், நடந்ததாக வர்ணித்திருக்கிறான். இவ்விழா நவம்பர் நடுவில் மூன்று நாட்கள், 13௳—16௳; இவ்விழாவில் ஐஸிஸ் (Isis) என்ற தைவம் பசு ரூபமாயிருந்து, மடிந்து போன தன் மகனான ஆஸிரிஸ் (Osiris) என்ற தைவத்தைப் பிழைப்பிக்கும் நிகழ்ச்சி நடித்துக் காண்பிக்கப்படும். வானுக்கும், நிலத்திற்கும், அதாவது தியாவா—பிருதிவிக்கு, மகனான இந்த ஆஸிரிஸ் என்பது சூரியன், வெளிச்சம் என்று சொன்னால் பொருந்தும்.

கிரேக்க தேசத்திலும் விளக்கு விழா வுண்டு. இதாலியில் ரோமர்களின் பண்டை வாழ்க்கையைக் கவனிப்போம்: நேமி (Nemi) என்ற ஏரிகரையில் டையானா (Diana) என்ற பகவதி, தாய் ரூபமான தைவம்; இவளுடைய அருளால் மக்களுக்குக் குழந்தைகளும், சுகப்ரஸவமும் ஏற்படும். ஆகஸ்டு மாதத்தில் இவளுக்கு ஏற்பட்டிருந்த உத்ஸவத்தில் இவளுடைய தோட்டம் முழுதும் விளக்குகளால் ஜொலிக்கும். நாடு முழுதும் வீடுகளிலும் அடுப்புகளிலும் நெருப்பு எரிய விடப்படும். டையானா கையிலும் ஒரு விளக்கைக் கொடுப்பார்கள். தம் பிரார்த்தனை நிறைவேறிய மாந்தர் இவளுக்கு விளக்குகளைக் காணிக்கையாகக் கொடுப்பார்கள்.

கிரீஸிலும், ரோமிலும், எகிப்திலும், கிழக்குள்ள நாடுகளிலும் விளக்குகள் மத வழிபாட்டில் நிரம்ப இருந்தும், கிருஸ்து தோன்றி இரண்டு மூன்று ஆண்டுகள், கிருஸ்துவ மத வழிபாட்டில் விளக்கே உபயோகப்படுத்தப்படவில்லை. பிறரின் பழக்க வழக்கங்களைக் கையாளக் கூடாதென்பது இதற்கு முதற்காரணம்; ஆனால் மூன்று நூற்ருண்டுகள் ஆனதும் முன் வழங்கிவந்த விழாக்கள் கிருஸ்து மதத்திற்குள் புகுந்து ஆக்ரமித்துக் கொண்டன; மெழுகுவத்தி விளக்குகள் தாமும் நுழைந்துகொண்டன. உட்புகுந்த இவற்றிற்குக் கிருஸ்து ஸம்பந்தமாய் ஒரு புதுப்பொருளைக் கற்பித்து, தம் மனதையும் தேற்றி, சேர்த்துக் கொண்டனர். எல்லா விசேஷங்களிலும், பகலிலும், இரவிலும், மெழுகுவத்தி விளக்குகள் ஏற்றப்பட்டன. விளக்குகளுக்குப் பெரும் கௌரவமும், தத்வார்த்தமும் கொடுக்கப்பட்டன, தீக்ஷை, ஊர்வலம், கலியாணம், வழிபாடு, மரணம் — விளக்கில்லாமல் ஒன்றும் நடக்காதபடி ஆயிற்று. நோயிலிருந்து குணமடைய வேண்டி வேண்டுதலையும் விளக்குடனேயே செய்யப்பட்டது. முக்யமாய் தீபாவளி, தீபவிழா என்று சொல்லக்கூடிய கிருஸ்துவ உத்ஸவம் காண்டில்மஸ் (Candlemas) என்பது. இது கிருஸ்துக்கு முன்னிருந்த பழையவிழா; கிருஸ்து மதத்திற்குள் ஸ்வீகாரஞ்செய்து கொள்ளப்பட்டது; இவ்விழாவில் மெழுகுவத்திகளை ஸம்ஸ்காரம் செய்து எல்லோருக்கும் வழங்கி, அனைவரும் மெழுகு விளக்குகளுடன் ஊர்வலம் வருவார்கள். இப்படி அனுக்ரஹஞ்செய்து கொடுக்கப் பட்ட தீபங்கள் பயிர், ஆடுமாடுகள், வீடு, ஆரோக்யம் இவற்றிற்குக் காப்பு, ரக்ஷை, என உபயோகிக்கப்பட்டன.

தீபத்தை 'ஏற்ருத' நாடோ மக்களோ இடையவே, கிடையாது; தீபம், விளக்கு, சுடர், ஒளி, வெளிச்சம்—இதைக் கடவுளுக்கும் பரம்பொருளுக்கும் அறிகுறியாகப் பாடாதகவியும், ஞானியும் இல்லவே இல்லை; பிணி, துன்பம், பாவம், இருள், அக்ஞானம் இவற்றை விலக்குவதும், இன்பம், தூய்மை, வெளிச்சம், ஞானம் இவற்றை விளக்குவதும், ஸ்வயம்பிரகாசமான, அருட் பெருஞ் சோதியான பரம் பொருளே; அத்தீபமே 'இருளிலிருந்து நம்மை வெளிச்சத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்க்கட்டும்'. "தமஸோ மா ஜ்யோதிர் கமய,"

சேலத்தில்

கல்யாணப் பட்டு ஜவுளி ரகங்கள் வாங்க சிறந்த இடம்

கோபால பத்ம விலாஸ்

385, கடைவீதி, சேலம்.

Proprietors :

S. N. PATHMANABA CHETTIAR

P. R. JAYAGOPALA CHETTIAR

முன் தொடர்ச்சி

"ஆனை-ஐயா"

டாக்டர் வே. ராகவன்

VII. நாடகுருஞ்சி — ரூபகம்

பல்லவி

இன்னவிதமே பூஜை செய்திடு - எமபயம்விலகிட

அநுபல்லவி

தென்னை வனஞ்சூழ் வையை தன்னிலகஸ்தீசர்
திருவடிக்கமலத்தில் தினந்தோறும் நீ (இன்ன)

சரணம்

1. காலை மாலை நீரில் மூழ்கியோர் - காலால் நின்று தவம் பொருந்தி
காலகால கருணாலவாலனடி - கண்டு தொண்டு செய்து
மேலான மல்லிமுல்லை ஜாஜிஸம்பங்கி - வாச மலர்கொய்து வீசுபுகழாக
வாலை மங்கள நாயகி மணாளனை - வரமருள் கங்காளனை (இன்ன)

2. மெய்யில் நீறுமணி - யாடைகளுஞ்சாற்றி
மெய்யாகவே அர்ச்சனைகள் செய்து போற்றி
நெய்யினாலனேக தீபம் விளக்கிட்டு நெய்வேதனங்கள் செய்து
தெய்யதிமி தெய்யெனவே - தேவியுடன் வாதாடும் அய்யனருள்
செய்ய வேதநாத கீதமோதியே சேவ் - வடிகொண்டாடிப்பாடித் தினமும் (இன்ன)

3. காம்வைரி மெய்யில் வாழும் - காரணியுமாதாஸன் மகிழ்சிவ
காமியடியவர்க்கு வரமுதவும் - கற்பகத்தை மெய்ப்பொருளைத் தெரிந்து
நாமரஹிதாத்ம சுகந்தன்னை நாடி - நமச்சிவாயப் பொருளைத்தேடி
நாமவிகார நமனை யகற்றிடும் - ரஞ்சிதமே யெஞ்சயல் பொறுத்தருளேன் (இன்ன)

VIII. கேதாரம் — சாபு

பல்லவி

என்ன செய்குவேன் விதி - யெழுத்தை வெல்லநான்

அநுபல்லவி

தென்னை வனஞ்சூழ் வையை யகஸ்தீசன் தெரிசனையன்றி (என்ன)

சரணம்

1. முடிவில்லாத ஆசைப்பேய் பிடித்து ஆடுதே - ஒரு
மூச்சிலகிலத்தை விழுங்க ஓடுதே - துடித்
தடிக்கடி வீண் படுத்தி வாடுதே
துன்ப சாகரம் தன்னை நாடுதே (என்ன)

2. நன்மை செய்யும் பேர் மீதில் நாடாது ஓடுதே
நாரிவலையிலே மனம் நாடி ஆடுதே
தின்மையான செய்கை தன்னைத் தேடுதே
தினமும் லோபரைத் துதித்துப்பாடுதே (என்ன)

3. அம்பரத்தினிலாடும் அனாதியே -
அறம் வளர்த்தவற்கான சோதியே -
அன்பர்கலிதனை யகற்றும் நீதியே -
அனுதினமுமாதாஸன் பணியும் சோதியே (என்ன)

(மேற்குறித்த மூன்றும் சரணத்தை அடித்து, பின்வருமாறு மற்றோர் மூன்றும் சரணம் எழுதப்பட்டிருக்கிறது.)

3. உமாதாஸன் றன்னைக்காக்க உவந்தவளே
உலகம் பதினான்கிற் சிறந்தவளே
இமகுமாரி வையையிற் சிறந்தவளே
ஈச குலத்தில் வாழவந்து உறைந்தவளே

IX. பந்துவராளி — ஆதி

பல்லவி

ஸோமவார தரிசனஞ் செய்தவர்கள்
ஸொர்க்கந்தன்னை ஆசிப்பதில்லை சுந்தரி (ஸோம)

அனுபல்லவி

ஸோமனணி அகஸ்தியேசர் பங்கினிற்
சொந்தமாக வாழவந்த நாயகி (ஸோம)

சரணம்

1. மையலாகி மாதரை நாடாமல் (ஸோம)
மனது போன வழிபோய் விடாமல்
வையுமீது மூடரைப் பாடாமல்
வாய்க்குகந்தவனை மறந்திடாமல் (ஸோம)

2. மாரவைரி மெய்யிற்படரு மயிலே
மாதவற் குடன்பிறந்த குயிலே
ஆரணங்கள் மூன்றுமறியும் செயலே
அருள்புரிந்து வையை வாழ்கருமுகிலே (ஸோம)

3. நாரதாதி முனிவர் கீதம்பாட
நாளுமுமை உமாதாஸன் கொண்டாட
பாரயம பாசம் பறந்தோட
பஞ்சாக்ஷரப் பொருள் கைகூட (ஸோம)

X. காம்போதி — ரூபகம்

பல்லவி

நீயே கதியல்லாமல் எனக்கு
நிலையொன்றுங் காணேன் தாயே (நீயே)

அனுபல்லவி

தீயேந்திய கையரகஸ்நீசர் பங்கினிற்
தினமும் வாழவந்த மங்களநாயகியே (நீயே)

சரணம்

1. எற்றினை தெய்வங்கள் இருந்தாலும் எனக்கு
எதிரிலை யென்று சிறந்தாலும்
வெற்றியரசராய்ப் பிறந்தாலும் - உயர்
வேதாந்தப் பொருளைச் சோரிந்தாலும் (நீயே)

2. எண்ணிலாத ஜென்ம மெடுத்தாலும் - எனக்-
கினிப்பிறவா வரம் கொடுத்தாலும்
எண்ணிலாத செல்வமுடைத்தாலும் - நான்
எண்ணிய பொருள் கையிற் கிடைத்தாலும் (நீயே)

XI; முகாரி — ரூபகம்

பல்லவி

இப்படியில் நான் தபிக்கும் வேளையில்
இரங்கிக் காத்திடுவாய் ஈசனே கனகஸபேசனே (இப்படி)

அனுபல்லவி

எப்படி மீண்டிடுவேன் - யமதூதர்கள் வந்து
செப்படாவென்று சிறுபுலிபோல் - சீறிடும்போது (இப்படி)

சரணம்

1. இல்லாள் சுதனும் இதம்போல வந்து
இவனேது பிழைப்பதேன் றினிமேலே
சொல்லா யொருபுத்தி வாயாலே யென்று
சோகித்து விழுவாள் மெய்போல (இப்படி)

2. பரிகாரி வந்து கைபார்க்கு முன்னாலே
பகரக்கூடாதெனச் சொல்வார் பின்னாலே
தரியாது மெய் மெய் பாருங் கண்ணாலே
தடையன்றி நடையிற் கொண்டிடுவர் பின்னாலென்பர் (?) (இப்படி)

3. பஞ்சபூதமும் பறக்க விழித்திராமல்
பாரிலுமாதாஸன் சொல் தவறாமல்
வஞ்சனையாய் வழிதன்னைச் சேராமல்
வல்லமையா மெமபாசம் வாராமல் (இப்படி)

XII. பியாகடை — ரூபகம்

பல்லவி

ஆசை தன்னில் மோசம் போகாதே நீ மனதே.

அனுபல்லவி

வாசுதேவன் பதமறவாதே உமாதாஸன் துதிக்கும் (ஆசை)

சரணம்

1. பாசமகல வழியைத்தேடு - நீ மனதே
ஈசர் கேசவனை நிதமும் நாடு
வாசமலரால் அர்ச்சித்துக் கொண்டாடு
மாசறவே துதிகள் செய்து பாடு (ஆசை)

2. தேகந்தன்னை நானென்றிடாதே நீ மனதே
தேகி பாவனையை விடாதே
தேக ஜடம் சோகமென்று
ஊகத்தால் உன் மனத்தினின்று
ஏகமென்றும் ஸ்ச்சிதானந்
தோகமாம் சித்குருவைப் போற்று (ஆசை)

3. தத்துவபதந்தன்னை யறியாமல் - நீ மனதே
நித்தியவஸ்து நிலைதெரியாமல்
சத்தியன் தனைத் தொடுத்து, அ-
சத்தியன் தனை விடுத்து
மெத்தமீறிப்பிரமை கொள்ளாதே
பத்த ரக்ஷகனைப் பணிந்து இரு நீ (ஆசை)

4. மாயவாழ்வைச் சதமென்றெண்ணாதே - நீ மனதே
பேயா மனதைப் - பேதம் பண்ணாதே
காயம் நழுவிப் - போகுமுன்னே
ஆயவனது - நாமந்தன்னை
வாயினால் உச் - சரிக்கப்பின்னே
பாயும் கைவலிய - பதமே சொன்னேன் (ஆசை)

(தொடரும்)

கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் ஸ்நானம் செய்வது இன்புறவேண்டிய ஓர் முக்கிய காரியமாயிருந்தது. கல்லில் செதுக்கின மஞ்சத்தின்மீது இராஜவம்ச ரமணிகள் சொகுசாகச் சாய்ந்துகொண்டிருக்க, தாதிமார்கள் ஜலத்தில் ஊறவைத்துச் சுத்தமான நுரை வரும்படி செய்துள்ள ஸோப்புக் காய்கள் தேய்த்து அவர்களை ஸ்நானம் செய்வித்து வந்தனர். இன்றோ, இன்னும் மேலானதும் அதிக ஸௌகரியமுமான வழிதான் எல்லோருக்குமிருக்கிறதே—அதாவது ஹமாம் ஸோப்பு! ஹமாமின் நறுமணங்கமழும் ஏராள நுரையானது மயிர்க்கண்களினுள் ஊடுருவிப் பாய்ந்து நன்கு சுத்தம் செய்வதோடு, களைப்பை நீக்கி மட்டற்ற உற்சாகமும் சுகமும் அளிக்கவும் செய்கிறது.

ஹமாம்

உங்கள் ஸ்நானத்திற்குகந்த பெரிய ஸோப்பு

A TATA PRODUCT

டாம்கோ விற்பனை இலாகா
19, வாணியவீதி P. B. நெ. 31, சென்னை.

சலனம்

விஜயஸ்ரீ

கபிலவாஸ்து நகரம். இரவு நேரம். அரண்மனை அந்தப்புரத்தில் யசோதராதேவி தன் தோழிகளுடன் பேசிக்கொண்டு இருந்தாள். அவளுக்கருகில் ராகுலன் பொம்மைகளை வைத்துக்கொண்டு விளையாடிக்கொண்டிருந்தான். கன்னங்குழிய, கலகலவென்று வாய்விட்டுச் சிரித்தான். சித்தார்த்தரை அப்படியே கொண்டிருந்தான் குழந்தை. யசோதரை பேசிக்கொண்டிருந்தாளே ஒழிய அவளுடைய கண்களும் கவனமும் ராகுலனின்மீதே படிந்து இருந்தன.

ராகுலனிடம் அவள் சித்தார்த்தரைக் கண்டாள். அவருடன் தான் கழிக்கப்போகும் மோகன இரவைப்பற்றி எண்ணி இன்பத்தேன் மாந்தித் திளைத்துக்கொண்டிருந்தாள். ஆனால்—?......அவர் ஏன் சில நாட்களாகத் தன்னிடம் அவ்வளவு பிரியமாய் நடந்துகொள்ளவில்லை. அவர் அவளைக் கடிந்துகொள்ளவில்லை. இருப்பினும் அவருடைய நடத்தையில் ஒரு மாறுதல் தென்பட்டது. அம்புலியில் இருக்கும் களங்கம் பளிச்செனத் தெரிவதுபோல், அவர் வெள்ளையுள்ளத்தை ஒரு பாரம் அழுத்துகிறது என்று அவர்விடும் பெருமூச்சுக்களிலிருந்தே தேவி அறிந்தாள். தாமாகவே அவளிடம் பேசும் அவர், அவள் பேசினுல்கூடச் சரியாகப் பதிலளிக்காமல் இருந்தார். அடிக்கொரு தடவை ராகுலனைக் கொஞ்சும் சுபாவமுடையவர், குழந்தையே "அப்பா! இதென்ன தொல்லு அப்பா" என்று மழலையில் கொஞ்சி அவருடைய காலைக் கட்டிக்கொண்டபோதிலும் உணர்ச்சியேயின்றி இருந்தால் தாய் மனம் என்ன பாடுதான் படாது?

அன்று ஒருநாள் கபிலவாஸ்து நகர வீதிகளிலே முத்துப் பல்லக்கிலே சென்ருரே, அதிலிருந்துபிடித்தது சனி அவளுக்கு. இரவு வெகுநேரம் கழித்து அரண்மனையை அடைந்த அவர் சரியாகப் போஜனம் செய்யவில்லை. முகத்தில் என்றும் தவழும் புன்சிரிப்பைக் காணோம். நெற்றியில் கவலைக்கீற்றுகள் தென்பட்டன. போஜனம் முடிந்தவுடன் அந்தப்புரம் அடையும் அவர் அன்று அந்தப்பக்கத்திலேயே வரவில்லை. என்னதான் செய்கிருர் என்று அவர் இருந்த அறைக்குச்சென்று பார்த்தாள். மலர்களால் மூடப்பட்டிருந்த மஞ்சத்தில் அமராமல் தரையின்மீது அமர்ந்திருந்தார் சித்தார்த்தர். யசோதரை அறைக்குள் நுழைந்ததைக்கூடக் கவனிக்காமல் அவர் மிகுந்த யோசனையில் ஆழ்ந்திருந்தார்.

அவரை நெருங்கி, "பிரபோ!" என்ருள். திடுக்கிட்டுத் திரும்பினர். யசோதரையை மேலும் கீழும் பார்த்தார்.

"பிரபோ! குழந்தை ராகுலன் உங்களைக் கேட்டுக்கொண்டே இருக்கிருன். அந்தப்புரம் வருகிறீர்களா?"

"யசோதரா! எனக்கு இன்று உடம்பு சரியாய் இல்லை. சற்றுநேரம் கழித்து வருகிறேன். செல்."

"கபிலவாஸ்துவின் தெருக்களில் வீசும் விஷக்காற்றுத்தான் காரணமாயிருக்கும்."

சித்தார்த்தருடைய நெற்றியில் கையை வைத்துச் சுரத்தின் வேகத்தை ஆராய்ந்தாள் தேவி.

"பெண்ணே! கபில வாஸ்துவின் விஷக்காற்று என்று ஏன் கூறுகிருய். இவ்வுலகிலுள்ள விஷக்காற்று என்றுசொல். காரணம் அதுதான்."

யசோதரை பதில் பேசவில்லை. அந்தப்புரத்திற்கு உடனே திரும்பி விட்டாள். அன்று சித்தார்த்தர் அந்தப்புரம் பக்கமே வரவில்லை. சயன அறைக்காவது அவர் வருவார் என்று எதிர்பார்த்தாள். அவரும் வந்தார். ராகுலனை ஒரு தடவை முத்தமிட்டு விட்டுச் சயனித்துவிட்டார். யசோதரை அவரருகில் இருப்பதையே கவனிக்காதவர் போன்று காணப்பட்டார். தேவியின் மனம் இல்லாத எண்ணங்களையெல்லாம் எண்ணி எண்ணி அங்கலாய்த்தது. அன்று இரவு அவரும் தூங்கவில்லை, அவளும் தூங்கவில்லை; இருவரும் பேசவுமில்லை. பல பெருமூச்சுக்கள்............ இவ்வாருகப் பல நாட்கள் கழிந்தன.

ஏதாவது நாடகக் கணிகையின் நட்பு ஏற்பட்டு விட்டதா அவருக்கு? அந்த மாதிரியெல்லாம் இருக்காது என்று தைரியம் செய்துகொண்டாள். இல்லாவிடில் அவருடைய மாறுதலுக்குக் காரணமென்ன? வேறு ஒன்றுமிருக்கமுடியாது. அவருக்

கென்ன குறைவு? செல்வத்திலா, அழகிலா, சுகபோகங்களிலா, புத்திர சந்தானத்திலா, தாய் தந்தையரிலா?...... ஆம், காரணம் துடியிடையுடைய ஒரு பெண்ணின் கயல் மீன் போன்ற கண்கள்தான்.

அழகிலும் நற்குணங்களிலும் ஒரு களங்கமும் அற்ற தன்னைவிட்டு—அக்னி சாட்சியாகக் கைப்பிடித்த மனைவியை விட்டு, நாடகக் கணிகையின்மேல் மனம் ஊன்றும்படிக்கு என்ன நேரிட்டுவிட்டது. அவ்வேசையின் இன்ப மொழிகளில் மயங்கிவிட்டாரா? அல்லது உடல் மினுமினுப்பில், தீபத்தில் தன் தாபத்தால் கருகிப்போகும் விட்டிலைப் போல், தம் நினைவிழந்து விழுந்து விட்டாரா? அல்லது அவளது மாய மந்திரங்களில் கட்டுண்டு வெளிவர இயலாது தவிக்கிறாரா? எது எப்படி இருந்தபோதிலும் அவர் தன்னைப் புறக்கணிக்கிறார் என்பது மட்டும் அவளுக்கு நன்றாகப் புரிந்தது.

அவள் பெண்மையுள்ளத்தில் பொறுமை ஊற்றெடுக்கவில்லை. தன் நாயகனையே எப்பொழுதும் எந்நிலையிலும் தெய்வமெனக் கொண்டாடும் கற்பினை உடையவள் அவள்.

அவருக்கு அவளிடம் பயமென்ன? தமக்கு வேறு ஒரு பெண்ணிடம் இச்சை திரும்பிவிட்டது என்று அவர் தன்னிடம் சொல்லக்கூடாதா? உடனே தான் விலகிக் கொள்ளமாட்டாளா? அவருடைய புதுக் காதலிக்கும் அவருக்கும் பணிவிடை செய்வதிலேயே தன் வாழ்நாட்களைச் செலவிட மாட்டாளா?

இவ்வாறெல்லாம், ராகுலனைக் கண்ட யசோதரையின் மனத்தில் சிந்தனைச் சுருள்கள் விரிந்தன. "இன்று அவரிடம் வெளிப்படையாகக் கேட்டு விடுவது "என்று அவள் வாய் முணுமுணுத்தது.

காலில் அணிந்திருந்த காலணிகள் சப்திக்கப் பணிப்பெண்ணொருத்தி அந்தப்புரத்திற்குள் ஓடிவந்தாள்.

"சுமித்ரா! இளவரசர் போஜனம் செய்தாகிவிட்டதா? சயன அறைக்குச் சென்றுவிட்டாரா?"

"போஜனத்தை ஒரே நொடியில் முடித்துக்கொண்டு, சயன அறைக்குச் சென்றுவிட்டார், தேவி! அதைத் தெரிவிக்கவே ஓடோடியும் வந்தேன்."

ராகுலன் பின் தொடரச் சயன அறை அடைந்தாள் யசோதரை. சாளரம் ஒன்றனருகில் நின்றபடி வெளியே பார்த்துக் கொண்டிருந்தார் சித்தார்த்தர். அறையில் அவள் நுழைந்ததை அவர் கவனித்ததாகத் தெரியவில்லை. தம் யோசனைகளில் திளைத்துக்கொண்டிருந்தார்.

ராகுலனைத் தூங்க வைத்துவிட்டாள். பிறகு மஞ்சத்தினின்று எழுந்திருந்து சித்தார்த்தரை நெருங்கினாள். "பிரபு! வெண்ணிலவு செய்யும் ஜாலங்களைப் பார்த்தீர்களா? இவ்வழகிய இரவில்......"

"பெண்ணே! கடவுள் படைத்திருக்கும் ஒவ்வொரு பொருளிலும் அழகு இருக்கிறது. ஆனால், ஆனால்......"

"ஆனால் என்ன, பிரபோ?"

"ஒன்றுமில்லை." அவர் பேசிக்கொண்டிருந்தாரே யொழிய அவளை நோக்கித் திரும்பவில்லை. குரலும் உணர்ச்சியற்று இருந்தது.

சற்றுநேரம் யோசித்தாள் தேவி. எப்படியாவது தன் கேள்வியைக் கேட்டுவிடுவது என்று தீர்மானித்துக்கொண்டு சித்தார்த்தரை நெருங்கினாள். அப்பொழுதும் அவர் அவளைப் பார்க்கவில்லை.

"பிரபோ!"

"யசோதரா! ஏன்?"

"உங்களை வெகுநாட்களாகவே ஒரு கேள்வி......"

"என்ன கேள்வி கேட்கவேண்டும்?"

"நீங்கள் முன்பிருந்த மாதிரியில்லை. சில மாறுதல்கள் காணப்படுகின்றன. காரணம் அறியலாமா பிரபு?"

"காரணம் ஒன்றுமில்லை. மாறுதல் இருந்தால் அல்லவோ சொல்வதற்கு?" என்று அவர் கேட்டு உண்மையை மறைப்பார் என்று நினைத்தாள் தேவி. ஆனால் அவருடைய பதில் வேறுவிதமாக இருந்தது.

"பெண்ணே! மாறுதலின் காரணம் உனக்குத் தெரிந்தால் மன உடைப்புத்தான் உண்டாகும்."

அவளுடைய இருதயமே வெடித்துவிடும் போல் ஆகிவிட்டது. ஆகவே நாடகக் கணிகை......? தைரியத்தை வரவழைத்துக் கொண்டாள்.

"பிரபு! நீங்கள் சொல்லாவிடினும் எனக்குத் தெரியும். பூப்போன்ற மேனியுடைய மங்கை யொருத்தி உங்கள் மனதைக் கவர்ந்துவிட்டாள்."

பதிலைக் காணோம். யசோதரா தொடர்ந்து பேசினாள்.

"நீங்கள் அவ்வாறு இருப்பது எனக்கு வருத்தம் தரவில்லை. அவள் யாரென்று சொல்லுங்கள். அவளை உங்களுடன் சேர்ப்பிக்கிறேன். உங்களிருவருக்கும் பணிவிடை செய்கிறேன்."

குரலில் கண்ணீர் பெருகியது. கண்களில் துக்கம் கரையை உடைத்துக்கொண்டு கன்னங்களின் வழியே சித்தார்த்தருடைய பாதத்தில் விழுந்தது. அவர் திடுக்கிட்டார்.

"பெண்ணே! ஏன் அழுகிறாய்? என்ன விபரீதம் இது?"

பதிலில்லை. விம்மல்கள். அவளை மெதுவாக மஞ்சத்தில் உட்காரவைத்தார்.

"யசோதரா! உன்னைவிட்டு வேறு ஒரு பெண்ணை விரும்ப எனக்கு என்ன பைத்தியமா?"

"இல்லாவிடில் ஏனிந்த மாறுதல்?"

"மாறுதலொன்றுமில்லையே"

"பிரபு! மாறுதல் ஒன்றுமில்லையெனில் மிக்க ஆனந்தமே. அப்படியானால் முன்பிருந்தமாதிரி என்னிடமும் ராகுலனிடமும் பிரியமாய் இருப்பீர்களல்லவா? எவ்வளவு நிலா இரவுகள் உங்களுடைய இன்ப அணைப்பு இல்லாமல் வீணாய்ச் சென்றன."

சித்தார்த்தர் பதில் பேசவில்லை. நீண்ட பெருமூச்சொன்று அவரிடமிருந்து வெளிப்பட்டது.

சந்திரன் உச்சி வானத்தை யடைந்துவிட்டான். அவனுடை லாவண்யமான ஒளியில் பிரகிருதி மயங்கிக்கிடந்தாள். சயன அறையிலே மூவர். தன் பொம்மைகளைப் பற்றிக் கனவு கண்டு தூக்கத்தில் முறுவல் கொள்ளும் குழந்தை. தன் கணவனின் அருகில் படுத்துத் தூங்கும் மனைவி. தூக்கம் பிடிக்காமல் புரளும் கணவன்.

திடீரென்று சித்தார்த்தருடைய செவிகளிலே அமிர்தவர்ஷமென யாழினொலி கேட்டது. மஞ்சத்தின் அருகே வைக்கப்

விலைகள் குறைந்துவிட்டன!

நாடோறும்—
நம் தேவைக்குள்ள
பட்டு & நூல் ஜவுளிகள்
கிடைக்குமிடம்
M.N. நாகேந்திரம் சன்ஸ்
பட்டு ஜவுளி வியாபாரம்
மலைவாசல் உள்மண்டபம்
தெப்பக்குளம் P.O. - திருச்சினாப்பள்ளி

பட்டிருந்த யாழின்மீது தென்றல் தவழ்ந்து உறங்கிக்கிடந்த இசைகளையெல்லாம் எழுப்பிக் கொண்டிருந்தது.

சித்தார்த்தர் அக்கீதத்தைப் பருகினர். இன்பத்தைப் பொழிந்து தள்ளிய அதே யாழ் துன்பத்தின் ஆழத்தையும் அறிய, கீதம் பாடியது. அவர் மஞ்சத்தில் எழுந்து உட்கார்ந்தார். தாம் கேட்ட கீதம் கூறிய மொழி உண்மையா?

"சித்தார்த்தா! உலகிலே இன்பமுள்ளது. துன்பமும் உள்ளது. செல்வமும் உண்டு. ஏழைமையும் இருக்கிறது. சாவும் உண்டு. வாழ்வும் உண்டு. ஏன் அப்படி? ஏன் யாவரும் ஒரே மாதிரி, ஒரே நிலையில் இருக்கக் கூடாது? நீ போ, உடனே போ, உலகம் உய்யும் வழி காட்டு, செல், உடனே செல்" என்று அக்கீதம் கூறியது?

அவருடைய மனக் கண்முன் ஒரு பிணம் சென்றது; ஒரு குஷ்டரோகி சென்றான்; அம்பு மார்பிலே பாய்ந்து மாய்ந்த புறு தோன்றியது. பிறகு பல்லக்கில் அமர்ந்து சென்ற சீமான் சீமாட்டியார் தோன்றினர்; வேட்டையாடும் பிரபு குமாரர்கள் காட்சியளித்தனர்.

"ஏனிந்த வித்தியாசம்? வித்தியாசத்தை ஒழிக்க வழி கிடையாதா?" என்று சித்தார்த்தருடைய மனதில் ஒரு குரல் கேட்கும்.

"ஏனில்லாமல், இருக்கிறது; இருக்கிறது" என்று கூறும் மற்றொரு குரல்.

"எங்கே? எங்கே?" என்று வினவும் இன்னொரு குரல்.

ஆம், இருக்கிறது. ஆனால் எங்கே?

அவர் புரண்டு படுத்தார்.

"எங்கே வழி?"

"வழி கேட்டவுடன் கிடைக்குமா? அதைச் தேடிச் செல்லவேண்டும்."

"யார் செல்வது?"

"யார் வழியில்லையா என்று கேட்டதோ, அவர்தான்."

"வாஸ்தவம்."

வாஸ்தவம்.

எல்லாக் குரல்களும், "சித்தார்த்தா! நீ தான் செல்லவேண்டும். உடனே போ. இதுதான் தக்க சமயம்." என்றன.

ஆனால் ராகுலன்? யசோதரை?

"மனிதர்களின் துன்பத்தைத் தீர்க்க வழி உண்டு. அதை அறிய நீ தியாகம் செய்ய வேண்டும். அவர்களை மற. அவர்களை மற"

மஞ்சத்தினின்று எழுந்தார் சித்தார்த்தர். வாயில் வரை சென்றார். திரும்பவும் மஞ்சத்தை அடைந்தார். அழகு சொட்டும் மனைவியின் முகத்தைக் கண்டார்—இளமையுடன் நற்குணங்கள். பாலகன் ராகுலனைக் கண்டார்—மழலையின் இன்பத்துடன் உள்ளப் பரிசுத்தம்.

பாசத்தின் அறிகுறியாகச் சித்தார்த்தரின் கண்கள் இரண்டு சொட்டுக் கண்ணீரைச் சிந்தின.

"பாசத்தை உதறித் தள். தியாகம்! தியாகம்!!" என்று மனக்குரல்கள் மௌனமாக ஓலமிட்டன. அவற்றிற்கெல்லாம் மேலாக யாழின் கீதம், "நீ போ, உடனே போ, உலகம் உய்யும் வழிகாட்டு, உடனே காட்டு. செல். சீக்கிரம் செல்" என்று பணித்தது.

திர்மானத்துடன் சித்தார்த்தர் அரண்மனையினின்று வெளியேறினார். மறுபடியும் மஞ்சத்திடம் வரவில்லை.

அவர் பாசத்தைக் களைந்துவிட்டார்.

— 2. —

பதினைந்து வருஷங்கள் கனவே போல் தேய்ந்து மறைந்தன.

கபிலவாஸ்து. ஜனநடமாட்டமேயற்ற ஒரு வீதியிலே சிறு குடிசை. அதைச் சுற்றிலும் சுத்தமாகப் பெருக்கப்பட்டிருந்தது. மலர்ச்செடிகள், பூத்துக்கொட்டும் புஷ்பங்கள். அவற்றைப் பறித்து ஒரு குடலையில் போட்டுக்கொண்டிருந்தான் இளைஞன் ஒருவன்.

"ராகுலா!"

"அம்மா இதோ வந்தேன்."

பூக்குடலையுடன் குடிசையினுள் சென்றான் ராகுலன். யசோதரை உள்ளே தரையில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவளுடைய முகத்தில் அற்புதமான ஒரு சாந்தி பிரகாசித்தது.

ஏழைகள் சற்று நேரத்திற்கெல்லாம் வந்துவிடுவார்கள். வந்தவுடன் அவர்களுக்கு உணவு கொடுக்க வேண்டியிருக்கும்,

ஆகவே இப்பொழுதே பூஜையை முடித்துக் கொள்."

"ஆகட்டுமம்மா"

ராகுலன் பூக்குடலையைக் கீழே வைத்து விட்டு மறுபடியும் வெளியே சென்முன். சுவரில் மாட்டப்பட்டிருந்த சித்திரமொன்றை அன்பு பெருகும் கண்களால் உற்றுப் பார்த்தாள், பல மலர்கள் அச் சித்திரத்தின் பாதத்தை அலங்கரித்தன. வண்டுகள் மொய்க்கும் பூ மாலைகளும் அச்சித்திரத்திற்கு அழகூட்டின. சித்தார்த்தரின் சித்திரமே அது.

"பிரபு! நான் ஒரு குற்றமும் செய்யவில்லை. இருப்பினும் என்னைத் துறந்துவிட்டீர்கள். நான் வருத்தப்படவில்லை. பாரத தேசத்து ஸ்திரீ வம்சத்தில் தோன்றிய எனக்குப் பதியே தெய்வம். நீங்களே தெய்வம்" என்று அவள் வாய் முணுமுணுத்தது.

சித்தார்த்தருடைய சித்திரத்திற்கருகில் நிலைத்துப் பிரகாசித்த மணி விளக்கிலிருந்து சில நெருப்புப் பொறிகள் சுப சூசகமாகச் சிதறின. யசோதரை பழைய நினைவுகளில் ஆழ்ந்துவிட்டாள்.

தூங்கியெழுந்தவுடன் சித்தார்த்தரைக் காணுத அவள் மனம் பட்டபாட்டை யாராலும் சொல்லமுடியாது. சந்தேகப்பேய் அவளைப் பலமாகப் பிடித்துக்கொண்டுவிட்டது. நாடகக் கணிகையுடன் அவர் ஓடி விட்டாரா?

நாட்கள் கழிந்தன. சித்தார்த்தர் திரும்பி வருவதாகக் காணும், அரசராகிய சுத்தோதனர் யசோதரையின் துக்கத்தைக் கண்டு மனமிளகினர். தம் ஏவலாட்களைப் பல தேசங்களுக்கும் அனுப்பினர் சித்தார்த்தரைத் தேடிப்பிடிக்க.

நாட்கள் மாதங்களாக மாறின. சித்தார்த்தரைப்பற்றி ஒரு தகவலும் தெரியவில்லை. யசோதரையின் மனம் கடினமடைய ஆரம்பித்தது. அரண்மனையை வெறுத்தாள்; துறந்தாள். ஒரு குடிசை கட்டிக்கொண்டு ராகுலனுடன் வசிக்கலுற்றுள். அரசிக்குரிய சின்னங்களைக் களைந்தாள். ஏழைகளுக்குப் பணிசெய்து கிடப்பதையே தன் எஞ்சிய வாழ்நாட்களின் கடமையெனக் கொண்டாள். பலருக்கு அன்னதானம் செய்தாள். மனம் கடினமடைந்து விட்டபோதிலும், அவள் சித்தார்த்தரைப்பற்றி மறக்கவே இல்லை. அவருடைய சித்திரத்தைத் தன் குடிலில் வைத்து ராகுலனைவிட்டுப் பூஜை செய்வித்தாள்.

ஒரு நாள் அரண்மனையிலிருந்து சேவகனொருவன் வந்தான். "தேவி! அரசர் சுத்தோதனர் தங்களை அழைத்துவரச் சொன்னர், சித்தார்த்தரைப்பற்றி ஏதோ செய்தி வந்திருக்கிறதாம்."

யசோதரைக்குத் தூக்கிவாரிப் போட்டது உடனே அரண்மனைக்குக் கிளம்பி விட்டாள். சுத்தோதனர் தம் அறையில் அங்குமிங்கும் உலாவிக்கொண்டு இருந்தார். யசோதரையைக் கண்டவுடன் அவளை உற்றுப் பார்த்தார். அவருடைய கண்களில் கண்ணீர் ததும்பிக்கொண்டிருந்தது.

"பெண்ணே யசோதரா! சித்தார்த்தனைப்பற்றி செய்தி வந்து இருக்கிறது."

"அரசே! அவர் எங்கு இருக்கிருராம்? சுகமாக இருக்கிருரா? எப்பொழுது அவரைக் கண்டார்களாம்?" என்றெல்லாம் கேள்விகளை அடுக்கிக்கொண்டே போனுள்.

"பெண்ணே! அவன் சுகமாகத்தான் இருக்கிறன். கயைக்கருகில் கண்டார்களாம் ஆனல்............"

"அரசே! சங்கதியைச் சொல்லுங்கள்."

"சித்தார்த்தன் துறவறம் பூண்டுவிட்டானும் காஷாய உடையில் ஏவலாளர்கள் அவனைக் கண்டார்களாம்."

அவரால் மேலே பேசமுடியவில்லை. தம் கன்னங்களின் வழியே வழிந்த கண்ணீரை அவள் பார்க்காதிருக்கும்படி மறுபக்கம் திரும்பிக்கொண்டார்.

யசோதரை அச்செய்தியை எதிர்பார்க்காவிடினும் சமாளித்துக்கொண்டாள். பேரிடி போன்ற அச்செய்தியை மனதில் ஒருவிதக் கசப்புமின்றி ஏற்றுக்கொண்டாள். அவர் ஏன் துறவறம் பூண்டார் என்றுமட்டும் அவளுக்குத் தெரியவேயில்லை.

அன்றுமுதல் யசோதரை செய்த தான தருமங்கள் இன்னும் பெருகின. சுத்தோதனரும் அரசாங்க பொக்கிஷத்தை அவளிடமே கொடுத்துவிட்டார்.

வருஷங்கள் பறந்து சென்றன. பல செய்திகள் சித்தார்த்தரைப்பற்றி வந்து கொண்டேயிருந்தன. சித்தார்த்தர் கௌதம புத்தராகிவிட்டார்.

"பிராணிகளிடம் அன்பு காட்டவேண்டும் என்று போதிக்கிருர் அப்பிக்ஷு. உலகத்

தின் துன்பத்தை ஒழிக்க வழி கண்டுவிட்டா ராம்'' என்றனர் சிலர்.

"செத்தவளைப் பிழைக்க வைத்தார். யாக சாலையில் மிருக பலியைத்தடுத்தார்'' என்று கூறினர் மற்றும் சிலர்.

"பாரத தேசத்தில் தோன்றியிருக்கும் இணையற்ற ஜோதி சித்தார்த்தர். சுத்தோதனர் அதிர்ஷ்டம் செய்தவர் அத்தகைய மகனைப்பெற. யசோதரா பாக்கியசாலி அத்தகைய கணவனைப்பெற'' என்றெல்லாம் கூறினார்கள்.

யசோதரை இவை யாவற்றையும் கேட்டாள். பெருமையாகத்தானிருந்தது. உலகத்தின் துன்பத்தை ஒழிக்க வழி தேடி விட்டாராம். என்ன வழியாய் இருக்கும்?

தான் சந்தேகப்பட்டது என்ன மதியீனம்!

அவரைப் பார்க்கவேண்டுமென்ற ஆசை உண்டாயிற்று அவளுக்கு. அவர் கண்டு பிடித்த வழியை அறிய விரும்பினாள். மேலும் அவரை ஒரு கேள்விகேட்கவேண்டும் என்று அவள் உள்ளம் துடித்தது. அவரால் அதற்குப் பதில் கூறமுடியுமா? தன்னிடமிருந்து அக்கேள்வியை அவர் எதிர் பார்ப்பாரா?

அவள் மற்றொரு தியாகமும் செய்யத் துணிந்தாள்.

யோசனையில் ஆழ்ந்திருந்த யசோதரா தேவி ராகுலனின் காலடியோசை கேட்டு நிமிர்ந்தாள். சுபசூசகமாக நெருப்புப் பொறி சிதறியதைக் கவனித்த அவள் தனக்குள், ஆம் இன்று நன்னாள்தான். கபில வாஸ்துவுக்கும் எனக்கும் நன்னாள். சித்தார்த்தர் வரும் நாள்.'' என்று சொல்லிக்கொண்டாள்.

"ராகுலா!"

"அம்மா!"

"உன் தந்தை இன்று கபில வாஸ்துவுக்கு வருகிறாராம் அப்பா"

"நிஜமாகவா அம்மா! அப்படியானால் கௌதம புத்தரைத் தரிசிக்கும் பாக்கியம் பெறப் போகிறோமா அம்மா?"

இந்தியன் பாங்கு லிமிடெட்

"இந்தியன் பாங்கு பில்டிங்ஸ்"

நார்த் பீச் ரோடு :: மதராஸ்

மதராஸ் ஆபீஸ்கள் :

எஸ்பிளனேட், திருவல்லிக்கேணி, மயிலாப்பூர், மவுண்ட் ரோடு, எழும்பூர், தியாகராயநகர், புரசைவாக்கம்.

தென்னிந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	...	...	ரூ. 67,23,400
செலுத்தப்பட்ட மூலதனம்	....	...	ரூ. 40,21,923
ரிஸர்வ் நிதி	...	...	ரூ. 53,92,408
டிபாஸிட்டுகள்	...	...	ரூ. 12½-கோடிக்குமேல்

எல்லாவித பாங்க் அலுவல்களும் கவனிக்கப்படும்

N. கோபால அய்யர்,
செக்ரடரி.

"அவரைப் பார்க்கப் போகும் பாக்கியம் மட்டுமல்ல ராகுலா. அவருக்குச் சேவை செய்யும் பாக்கியத்தையும் பெறப்போகி ேறாம் அப்பா."

ராகுலன் தன் தாயாரை ஆச்சரியத்துடன் நோக்கினுள்.

"எப்படி அம்மா?"

"சொல்கிறேன்" என்று அவனுடைய காதில் சில மொழிகளைக் கூறினாள். அவனுடைய முகம் மலர்ந்தது.

"அப்படியே ஆகட்டு மம்மா"

கபிலவாஸ்து திமிலோகப்பட்டது. மகர தோரணங்கள் தெருக்களை அலங்கரித்தன. மாடங்களிலிருந்து கன்னியர் மலர்களை தூவிக்கொண்டு இருந்தார்கள். தெருவில் இரு ஓரங்களிலும் அரசாங்கச் சேவகர்கள் அணிவகுத்து நின்றனர்.

திடீரென்று, "வருகிறார், வருகிறார்." என்ற கூச்சல் கிளம்பியது. யாவரும் அத் திக்கில் நோக்கினர்.

பல்லக்கின்றி, பரிஜனங்களின்றி ஒரு பிக்ஷு நடந்து வந்துகொண்டிருந்தார். தலை மயிர் முண்டிதம் செய்யப்பட்டிருந்தது. உடலில் காஷாயம். கண்களில் ஒரு அபூர்வ சாந்தி.

"அவரா கௌதம புத்தர்? அவரா கௌதம புத்தர்?" என்று பலர் ஆச்சரியப்பட்டனர். புன்னகை பூத்த முகத்துடன் நடந்தார் கௌதமர் தந்தையின் அரண்மனையை நோக்கி. சுத்தோதனருடன் பேசிக்கொண்டிருந்தார். மகனைச் சான்றோனாகக் கண்ட மகிழ்ச்சியும், இள வயதில் காஷாயம் தரித்ததைக் கண்ட துக்கமும் சுத்தோதனருடைய முகத்தில் பிரதிபலித்தன.

அப்பொழுது கௌதம புத்தரை நெருங்கி ஒரு சேவகன், "பிரபோ! யசோதரா தேவி தங்களுடன் ஒரு வார்த்தை பேசவேண்டும் என்று ஆசைப்படுகிறார். தம் குடிலில் இருப்பார்கள். வருகிறீர்களா?" என்று வினயத்துடன் கேட்டான்.

"ஆகா, வருகிறேன் என்று சொல்" என்று கௌதமர் பதில் கூறினார். சேவகன் சென்றான்.

யசோதரையும் தன்னைப்போல் மனிதனின் துக்கத்துக்கு மூலத்தை அறிந்துவிட்டாளா என்ன? இல்லாவிடில் சுகபோகங்களைத் துறப்பானேன்?— என்றெல்லாம் சிந்தித்தபடி அவளுடைய குடிசையை நோக்கிப் புறப்பட்டார்.

பளிச்சென்றிருந்த வானம் இருண்டது. எங்கு இருந்தோ நீருண்ட மேகங்கள் குழுமின. காற்று, சற்றுக் கடுமையாக வீச ஆரம்பித்துவிட்டது. மின்னல் இடி. இரண்டொரு மழைத்துளிகள்.

யசோதரையின் குடிலை அடைந்து கதவைத்தட்டினார். ராகுலன் கதவைத் திறந்தான். தன் தந்தையைக் கண்டவுடன் சாஷ்டாங்கமாகத் தரையில் விழுந்து அவரை நமஸ்கரித்தான். "ராகுலா! எழுந்திரு" என்றார் கௌதமர். அவருடைய குரலில் சற்றே உணர்ச்சி பொங்கியது. வெளியே கடுமையாக வீசிக்கொண்டிருந்த தென்றல் மிகக் கடுமையாக மாறியது. வேகமாகச் சில மழைத்துளிகள் விழுந்தன. மரங்கள் பயங்கரமாக அசைந்தாடின.

யசோதரா தேவியும் புத்தரை நமஸ்கரித்தாள். அவருடைய பாதத்தைக் கண்ணீராலும், கங்கை நீராலும் சுத்தம் செய்தாள்.

"ஆகவே உலகம் உய்யும் வழியை யசோதரை இன்னும் அறியவில்லை" என்று கௌதமர் தமக்குத்தாமே சொல்லிக் கொண்டார்— அவளுடைய கண்ணீரையும் உணர்ச்சிப்பெருக்கையும் கண்டு. உணர்ச்சிக்கடிமை அவ்வழியைக் காண முடியுமா?

"பிரபு! தங்களுடைய முதல் சிஷ்யனாக என் மகன் ராகுலனை ஏற்றுக்கொள்ள வேண்டும்." என்று யசோதரை வேண்டிக் கொண்டாள்.

"பெண்ணே! ஆகட்டும்" என்றார் புத்தர் புன்சிரிப்புடன்.

ராகுலன் உடனே தான் அணிந்திருந்த உடையைக் களைந்துவிட்டு காஷாயம் தரித்துக்கொண்டான்.

முதலில் கணவனைத் தியாகம் செய்தாள். பிறகு மகனைத் தியாகம் செய்தாள். எதற்காக? உலகம் உய்வதற்காக.

உ—ல—க—ம்

"ராகுலா! உன் தந்தையுடன் நான் சில விஷயங்கள் பேசவேண்டும். சற்று நீ வெளியே சென்று வா."

ராகுலன் குடிசையினின்று வெளியேறினான்.

பேரிடி. கண்ணைப் பறிக்கும் மின்னல். பெருமழை. பேய்க்காற்று.

புத்த பகவானுக்கருகில் வினயத்துடன் அமர்ந்துகொண்டு யசோதரை, "உலகம் உய்ய வழி கண்டீர்களா பிரபு?" என்று வினவினாள்.

"பெண்ணே! கண்டேன். கண்ட உண்மையைப் போதிக்கிறேன். போதிக்கும் உண்மையை நானும் பின்பற்றுகிறேன். உலகத்தின் துன்பத்திற்கு ஆசைதான் காரணம். ஆசையைத் துற; துன்பம் பறக்கும். பாசத்தை அறு; இன்னல்கள் அகலும். அஹிம்சையைக் கடைப்பிடி; முக்தி சீக்கிரம் கிட்டும்." என்று தம் உணர்ச்சி அற்ற குரலில் மொழிந்தார் கௌதமர்.

"ஒரே ஒரு கேள்வி பிரபு"

"கேள்"

"நீங்கள் என்னைத் துறந்ததற்கு நான் வருத்தப்படவில்லை. அரண்மனையில் வாழ நான் ஆசைப்படவில்லை. ஆசையைத் துறந்தேன்; துறக்கப் பார்க்கிறேன். ஆனால்,...... ஆனால்! பாரதப் பெண்மணிகளின் உயிர்நிலையான பதியை மட்டும் மறக்க முடியவில்லை. ஏதேதோ பிதற்றுகிறேன். கேட்கவேண்டிய விஷயத்தைப்பற்றிக் கேட்க நான் மனைவி என்ற முறையில் தயங்குகிறேன்."

அந்தக் கேள்வி. அதற்கு அவரால் பதிலளிக்க முடியாது.

"யசோதரா! உன் கேள்வியைச் சொல்."

"பிரபோ! உங்களை எதிர்த்துப் பேசுகிறேன் என்று நினைக்கவேண்டாம். உலகுய்ய வழிகாட்டினீர்கள். உங்களுடைய மனைவியாகிய நானும், மகனான ராகுலனும் கூட உலகத்தவர்தானே. நாங்கள் உய்ய வழிகாட்டினீர்களா? கணவனென்ற முறையிலும், தகப்பனென்ற முறையிலும் நீங்கள் எங்களைக் காப்பாற்ற வேண்டாமா? மன்னித்துவிடுங்கள், எங்களையும் உய்விக்க வேண்டாமா? உலகம், பாழும் உலகம். அது சந்தோஷமாயிருந்தால் என்ன? நாங்கள் படும் துன்பம்......"

உணர்ச்சியால் கௌதமர் ஸ்தம்பித்துவிட்டார். அவருடைய பார்வை குடிசைக்கு வெளியே திரும்பியது. அங்கே கடுங்காற்று. பேரிரைச்சல், மழை, இடி, மின்னல், மரங்கள் முறிதல்...மனதில் சலனத்தின் சாயை.

அவரால் பதில்சொல்ல முடியவில்லை. ஆம், முடியவில்லை! அவளும் ராகுலனும் மட்டும் உலகத்தார் அன்றோ? உலகத்தார் அன்றோ?

கௌதமருடைய தயக்கத்தைக் க யசோதரை "கணவனை எதிர்த்து வாதா என்னை மன்னிப்பீர்களா?" என்று அ ருடைய பாத கமலத்தைத் தொழுத் தலை குனிந்தாள். தலை நிமிர்ந்தபோது குடிசையினுள் கௌதமரைக் காணவில்லை. பளிச்சென்று வெட்டிய மின்னலில் அவர் மழையில் விரைந்து செல்வது தெரிந்தது.

"என்னை மன்னிப்பீர்களா?" என்ற ஒலம் குடிசையினுள்ளும் குடிசைக்கு வெளியிலும் எதிரொலித்தது.

* * *

மழை நின்றுவிட்டது. தரையில் ஆங்காங்கு நீர் தேங்கியிருந்தது. அவ்வாறு தண்ணீர் தேங்கிய இடம் ஒன்றினருகில் கௌதமர் அமர்ந்திருந்தார். அவருடைய கண்கள் சலனமற்று நின்ற நீரை நோக்கின. ஒரு சிறுகல்லைத் தேக்கத்திற்குள் எறிந்தார். சிற்றலைகள் பல தோன்றின. அவை மறையுமட்டும் பார்த்துக்கொண்டே இருந்தார். சிற்றலைகள் மறைந்தவுடன் கௌதமருடைய முகத்தில் புன்முறுவல் ஒன்று தோன்றியது.

மனித சமூகத்திற்கென நூதன ஆராய்ச்சி

மேதாவின்

ஈரல் கட்டி நிவாரணி

நீண்ட ஆராய்ச்சியின் பயனாக இப்புதிய சிகிச்சை முறையைக் கண்டு பிடித்துள்ளோம். ஈரல் கட்டியைப் போக்கடிக்க கைகண்ட மருந்து.

குழந்தைகள் வியாதியைக் குறித்து கவலைப்படாதீர்கள்.

மேதாவின் ஔஷதம் வைத்திய உலகில் ஓர் புரட்சி உண்டுபண்ணி விட்டது.

கே. எஸ். மேதா & கோ.,

மதராஸ்

கண்ணும் கண்ணனும்

''வள்ளுவன்''

— 1 —

"இந்த ஓரணாவை நீங்கள் அப்போதே சேர்த்துக் கொடுப்பதானா நான் சந்தோஷமா பிளந்திருப்பேனே! என் கண்ணும் போயிருக்காதே'' என்ற அவன் வார்த்தை விசாலத்தின் உள்ளத்தில் முட்க ளெனத் தைத்தன.

அவன் கண்களில் உதிரம் சொட்டிக் கொண்டிருந்தது. விசாலம் கொண்டுவந்து கொடுத்த பஞ்சு தெப்பமாக நனைந்துவிட் டது. அவள் இன்னும் பஞ்சும் துணியும் எடுக்க உள்ளே போனாள்.

* * * *

விசாலம் அப்படி ஒன்றும் பொல்லாத வளல்ல, நல்லவள்தான்; கொஞ்சம் தாராளமும்கூட, ஆனால் 'பேரம்' என்று வந்துவிட்டால் விறகு உடைப்பவன் சொன் னதையா கொடுத்துவிடுகிறது? என்று ஒரே பிடியாய் மூன்றணாவுக்குமேல் கொடுக்க முடியாது என்று மறுத்துவிட்டாள்.

''ரொம்ப முண்டும் முடிச்சுமாக இருக்கு தம்மா, உடைக்கிறது கஷ்டம். நாலணா கொடுத்துடுங்க உடைச்சுப் போட்டுட றேன். ஓரணாவுக்குப் 'பால்மாறுதிங்க' மவ ராசங்க; உங்களுக்கு இதெல்லாம் பெரி தில்லே'' என்று பல்லைக் காட்டிக் கெஞ்சி னான் அவன்.

ஆனால் விசாலம் என்னவோ பிடிவாத மாக ''மூணணாத்தான் கொடுப்பேன் இஷ் டமிருந்தால் பிள, இல்லாவிட்டால் போ'' என்று சொல்லிவிட்டாள்.

கோடாலியைத் தூக்கித் தோளில் போட் டுக்கொண்டு அவன் நான்கைந்து அடி தூரம் கூட நடந்துவிட்டான். பிறகு ஏதோ நினைத்துக்கொண்டு, பையை எடுத்து அன் றைய சம்பாத்தியத்தை எண்ணினான். ''ஏழரையணா'' — ''இது எந்த மூலைக்கு இந்த விலைவாசியிலே'' என்று முணகிக் கொண்டு கோடாலியைத் திரும்பவும் தோளில் எடுத்து வைத்துக்கொண்டு விசா லத்தின் வீட்டுக்கு வந்து கட்டைகளைப் பிளக்க ஆரம்பித்தான்.

மூன்று கட்டைகளைப் பிளந்துவிட்டான். நான்காவது கட்டையைப் பிளக்கும் போது தான் அது துள்ளி எழுந்து கண்ணைத் தாக்கிவிட்டது.

* * * *

பஞ்சும் துணியும் கொண்டுவந்து கொடு த்துவிட்டு அவனையே பரிதாபத்துடன் பார்த்தவாறு நின்றுகொண்டிருந்தாள் விசா லம். அவ் வறண்ட மெலிந்த உடலில் அவ் வளவு இரத்தம் எங்கிருந்து வந்தது?

விசாலத்தின் உள்ளம் நெகிழ்ந்தது. ''அப்பா கண்ணைக் கசக்கிவிடாதே. அப் படியே திண்ணைலே உட்காரு. அய்யாவுக் குச் சேதி சொல்லி உன் கண்ணுக்கு மருந்து போட்டுக் கட்டச் சொல்றேன்'' என்றாள்.

''நம்பய்யா டாக்டருங்களா?''

''ஆமாம். கண் - டாக்டர். கண்ணை சொஸ்தப்படுத்திடுவாரு.''

''மகராசி! செய்ங்கம்மா! கண்ணைக் கெடுத்த தெய்வம் கோலைக்கொடுத்த மாதிரி யாச்சு! உங்களுக்குக் கோடி புண்ணிய முண்டு.'' — இப்படிச் சொல்லும்போது அவன் இரு கைகளையும் சிரசிலேகூப்ப முய ன்றான். அப்போது புண்ணுண்ட கண்ணி லிருந்து இரத்தம் கசிவதை விசாலம் பார்த் தாள். அவள் கண்கள் துடித்தன. உள்ளே ஓடினாள்.

விசாலத்திற்குக் கல்யாணமாகிப் புக்க கத்திற்கு வந்து இரண்டு வருஷங்கள் ஆகின் றன. இதுவரை அவள் தன் கணவரை அவசரமாக அழைக்க, 'டெலிபோன்' உப யோகித்ததே இல்லை. இன்று 'போனை' எடுத்து நன்றாகப் பழகியவள் போலப் பேச ஆரம்பித்தாள்.

* * * *

"அவசரமான காரியம் உடனே வீட்டுக்கு வாருங்கள்'' என்ற சமாசாரத்தைக் கேட்டு, தூக்கிவாரிப் போட்டது டாக்டர் சங்க ருக்கு. கன வேகமாக வீடு வந்து சேர்ந் தார். காரைவிட்டு இறங்கி நேரே வீட்டி

னுள் ஓடி, "விசாலம் என்ன சமாசாரம்?" என்ருர்.

"வாசலில் விறகு உடைத்தவன் கண்ணில் விறகு அடித்துவிட்டது. அவன் கண்ணில் ரத்தம் கொட்டிக்கொண்டிருக்கிறது."

"அதற்காகவா கூப்பிட்டாய்?"

"ஆமாம்......பாவம்......கூலிக்காரன்"

"கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரிக்குப் போகச் சொல்வதுதானே?"

"ஐயோ பாவம், கண்ணில் இரத்தம் சொட்டச் சொட்ட அவன் எப்படிப் போவான்?"

"காரில் கொண்டுபோய் விடச்சொல்ருயா?"

"இல்லை நீங்களே சிகிச்சை செய்தால்..."

"இந்த நாடோடிகளுக்கெல்லாம் சிகிச்சை செய்யத்தான் நான் ஆஸ்பத்திரி வைத்திருக்கிறேனு?"

"பாவம் ஏழை புண்ணியமுண்டு......"

"புண்ணியமுமாச்சு பாவமுமாச்சு. அவனைக் கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரிக்குப் போகச் சொல். எனக்கு வேறு அவசரமான வேலை இருக்கிறது" என்று சொல்லிவிட்டுக் காரில் ஏறிச் சென்றுவிட்டார் டாக்டர் சங்கர் எம். பி. பி. எஸ்.

— 2 —

விசாலம் பெருத்த ஏமாற்றமடைந்தாள். தன் கணவர் இவ்வளவு கடின சுபாவம் உடையவரென்று அவள் கனவிலும் நினைக்கவில்லை. பிணங்களையும் ரண காயங்களையும் அறுத்துக் கிளறினல் மனம் கல்லாகாமல் வேறு என்னவாகும்?

விசாலம் மேலும் நினைத்தாள்:-"அடடா, என்னிடந்தான் எவ்வளவு அன்பாகப் பேசுகிருர். சில வேளைகளில் அவர் என்மீது பொழியும் ஆசைக்கு அளவுகூட உண்டா? அவர் மனம் கல்லானல் அதில் எங்ஙனம் இவ்வன்பு ஊற்று உதிக்கிறது? அவர் என்மீது வர்ஷிப்பது உண்மை அன்புதானு அல்லது விளக்கொளியைக் கண்டு மயலுற்று அதைச் சுற்றிச் சுற்றி வந்து தழுவும் விட்டிலைப்போல் என் மேனி அழகில் உண்டான காம மயக்கமா?"

அவளால் ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லை. விறகு உடைப்பவனின் முனகல் சப்தம் இன்னும் அவள் காதில் கேட்டுக் கொண்டிருந்தது.

ஏன் அவனுக்குத் தன் கணவர் சிகிச்சை செய்ய மறுத்தார்? "அவன் ஏழை, சிகிச்சைக்கேற்ற பணம் அவனிடமிருந்து கிடைக்காது" இதுதானே அவர் எண்ணம். பணத்தைத்தானே அவர் பிரதானமாக எண்ணினர். அவ்வேழையின் கண்ணையும் அன்புள்ள மனைவியின் வேண்டுகோளையும் புறக்கணிக்கும் சக்திவாய்ந்த அப்பணத்தைக்கொண்டே ஏன் காரியத்தை முடிக்கக் கூடாது?

இவ்வெண்ணம் உண்டானதும் தன் பெட்டியில் வைத்திருந்த பணத்தின் ஞாபகம் வந்தது விசாலத்திற்கு. வேகமாகத் தன் அறைக்குச்சென்று பெட்டியைத் திறந்தாள். கையில் ஐம்பது ரூபாய் பணத்துடன் வாசலுக்கு ஓடினுள். அதை அவன் கையில் கொடுத்து தன் கணவரின் கண்ணாஸ்பத்திரிக்கே அனுப்பிவைத்தாள். அவள் பணம் கொடுத்து அனுப்பியதாகச் சொல்லவேண்டாம் என்றும் அவனே எதேச்சையாக வந்ததாகச் சொல்லும்படியும் சொல்லி அனுப்பினுள்.

— 3 —

டாக்டர் சங்கர் அன்று பூராவும் அவ்வேழையின் கண்ணிற்குச் சிகிச்சை செய்வதில் ஈடுபட்டிருந்தார். "எக்ஸ்ரே" போட்டோ எடுத்தார். கண்ணில் குத்தியிருந்த விறகுச் சிலாம்பை அப்புறப்படுத்தி மருந்திட்டுக் கட்டினர். நோயாளியின் அதிர்ச்சி நீங்கக் கொடுக்கப்பட்ட மயக்க மருந்தின் விளைவாக அவன் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான்.

இவைகளை எல்லாம் முடித்துவிட்டு டாக்டர் சங்கர் வீட்டுக்குக் கிளம்ப இரவு பதிஞெரு மணிக்குமேல் ஆகிவிட்டது. கன வேகமாக வந்து உடைகளைக் களைந்துவிட்டு அன்றைய வரவை எண்ணிப் பெட்டியில் வைக்கப் போனவர் புதிய காகிதம் ஒன்றைப் பார்த்துப் பிரமித்தார்.

...அண்ணுவா? அப்படியும் இருக்குமா? அவர் சிந்தனை சுழன்றது. மனதில் ஒரு பெரும் சோர்வும் பரபரப்பும் உண்டாயின. சாப்பிட்டுப் படுத்த பிறகும் படுக்கையில் நீண்ட நேரம் புரண்டு கொண்டி

ருந்தார். அதிகாலையிலேயே எழுந்து ஆஸ்பத்திரிக்குப் போய்விட்டார்.

*   *   *   *

கண்ணின் மேல் பஞ்சுப் பொதி வைத்தது போல் பெரிய கட்டுடன் படுத்துக்கொண்டிருந்தான், அவன். டாக்டர் சங்கர் அவன் படுக்கையருகில் சென்றார். கால் சிறு விரலைப் பார்த்தார். அது எல்லா விரல்களையும்விடச் சிறுத்திருந்தது. விலாப்புறத்தை உற்றுப்பார்த்தார். ஆம்! மச்சம் இருக்கிறது. இனிச் சந்தேகம் இல்லை. அண்ணா தான்! அடடா! இவர் ஏன் இப்படி உருக்குலைந்து போய்விட்டார்?

— 4 —

கண்ணில் சிறு கட்டுடன் சங்கரின் தோள்களில் சாய்ந்த வண்ணம் உள்ளே வந்து கொண்டிருந்தது யார்? விசாலம் உற்றுக் கவனித்தாள்! 'ஆம்! அன்றுவிறகு உடைத்த அதே மனிதன். யாருக்கு வைத்தியம் செய்ய மறுத்தாரோ அவனையே தன் தோள்மேல் தாங்கிக்கொண்டு வருகிறார், சங்கர். ஆ! மனிதர்கள் மனந்தான் என்ன விசித்திரமானது! பணம் என்றால் தங்களைக்கூட விற்று விடுவார்கள் போல் இருக்கிறதே!'' விசாலம் அவர்கள் இருவரும் வாசலைத் தாண்டி அறைக்குள் நுழைந்த பிறகும் அப்படியே பிரமித்து நின்று கொண்டிருந்தாள்.

''விசாலம்! ஏன் அப்படிப் பிரமித்து நிற்கிறாய்? நான் உன்னிடம் சொல்வேனே, இவர்தான் என் அண்ணா! என்னை ஆதரித்து முன்னுக்குக் கொண்டுவந்து விட்டவர் இவர் தான். இந்த ஜன்மத்திலேயே அவரை அடையும் பாக்கியம் கிடைத்து விட்டது, உள்ளே வா! அவருக்கு நமஸ்காரம் செய்.''

— 5 —

பூர்வாசிரமத்தில் பஞ்சு என்றழைக்கப் பட்ட பஞ்சாபகேசன் சங்கரையும் விசாலத்தையும் மாறி மாறிப் பார்த்தவண்ணம் சொல்கிறார்:— அப்பாவிடம் கோபித்துக் கொண்டு சென்னைக்குப் போகும்போது மலேய கண்காணி ஒருவன் சிநேகமானான். மலேயா வந்தால் ராஜோபசாரமாக இருக்கலாம்; படித்தவர்களுக்கு 500, 1000 என்று சம்பளம் கிடைக்கும் என்று ஆசை காட்டினான். நானும் வேறு வழியின்றி அவனுடன் சென்று ஒரு பாங்கியில் குமாஸ்தா வானேன். மலேயாவில் இருந்த பாங்கிக் கெல்லாம் என் பாங்கிதான் தலைமைதாங்கி

பட்டுவாடாசெய்யப்பட்டது
மொத்த தொகை
ரூ. 3. 8 கோடிக்கு மேல்.
மொத்தவியாபாரம்
அமுலில் உள்ளது
ரூ. 19. 32 கோடிக்குமேல்
புதியவியாபாரம்
1944-ல் பூர்த்தியானது
ரூ. 4. 73 கோடிக்குமேல்
N.F.a/ta-1
நாஷனல்
இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்
7. கவுன்ஸில் ஹவுஸ் ஸ்டிரீட், கல்கத்தா.
மதராஸ் பிராஞ்சு:
நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்
362, சைனாபஜார் ரோடு எஸ்பிளனேட்.
கிளை ஆபீஸ்கள்:
பங்களூர்.   மதுரை.

நடத்திக்கொண்டிருந்தது. லாபம் ஒவ்வொருவருஷமும் இருமடங்கு மும்மடங்காகிக்கொண்டு வந்தது. அந்தச் சமயத்தில் நான் சில கப்பல் கம்பெனிகளுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு சொந்தமாகச் சில கப்பல்களும் வாங்கிவிட ஆரம்பித்தேன்.

என் சொந்தக் கணக்கைக் கவனித்து ஒத்தாசை செய்ய அந்தரங்கமான ஆள் வேண்டியிருந்தது. எவ்வளவு நம்பிக்கை உள்ளவர்களாய் இருந்தபோதிலும் அங்குள்ளவர்களை நம்ப என் மனம் இடந்தரவில்லை. உன்னை அழைத்துக்கொள்ளலாம் என்று உத்தேசித்தேன். ஆனால் அப்பாவை நிராதரவாக விட்டுவிடுகிறோமே என்று எண்ணவேண்டியிருந்தது. பிறகு எனக்கு ஒரு யோசனை தோன்றிற்று. லாபத்தை வரவு வைத்துப் பத்திரப் படுத்தினால்தானே தொந்தரவு அதிகம். அதைக் கணக்கில் வைப்பதும், பாங்கியில் போடுவதும், அதை இருமடங்கு மும்மடங்காக்கவேண்டுமே என்ற கவலையும்! நீ அங்குவந்து அவைகளுக்குக் கணக்கு வைத்து விருத்தி செய்வதை இங்கு இருந்துகொண்டும் செய்யக் கூடுமல்லவா? ஆகையால்தான் அந்தந்த வருஷத்து லாபத்தை அப்படி அப்படியே உனக்கு அனுப்பிவிட்டேன். நீ அப்போது எனக்கு எழுதிய கடிதந்தான் இப்போது என்னை உனக்கு அறிமுகப்படுத்தி வைத்தது. அந்தக் கடிதத்தில் நீ மிக உருக்கமாக உன் நன்றியைத் தெரிவித்திருந்தாய்! அதை நான் எப்போதும் என் மணிபர்ஸில் வைத்திருந்தேன், அதுதான் அந்த 50 ரூபாயுடன் சேர்ந்து வந்தது.

என் கப்பல்கள் நல்ல லாபகரமாக ஓடிக்கொண்டிருந்த சமயத்தில்தான் ஜப்பான் சண்டை வந்தது, என் கப்பல்கள் இரண்டும் ஜப்பான் கரையிலேயே பறிமுதல் செய்யப்பட்டுச் சிக்குண்டதாகச் செய்தி கிடைத்தது. பிறகு எவ்வளவு முயன்றும் ஒருவிதத் தகவலும் கிடைக்கவில்லை. இதைத் தொடர்ந்துதான் மலேயாவில் ஜப்பான் குண்டுவீச்சு நடந்தது. இந்தக் குழப்பத்தில் ஒரு வங்காளி பாங்கியின் கையிருப்பைச் சுருட்டிக்கொண்டு ஓடிவிட்டான். பாங்கி முறிந்து மூடப்பட்டது. என் கையில் இருந்த சொற்பத்தொகையுடன் பர்மா வந்தடைந்தேன். என்னை இந்தியாவுக்குக் கப்பல் ஏற்றுவதாக ஆசைகாட்டி ஒரு நய வஞ்சகன் கையிலிருந்த பணத்தைப் பறித்துக்கொண்டு போய்விட்டான். பிறகு கால்நடையாக இந்தியாவுக்குத் திரும்ப நடந்தவருடன் நானும் நடந்தேன். வழியில் கிடைத்த பழங்கள், கிழங்குகள், கிராமங்களில் ஏழைகள் இரக்கப்பட்டு அளித்த உணவுகள்—இவைகளால் கழுகுக்கிரையாகாமல் இவ்வுடலைக் காப்பாற்றிக்கொண்டு அஸ்ஸாமை அடைந்தேன். இந்தியாவில் அடி எடுத்து வைத்தபிறகு வறுமை அதிகரித்தது. கல்கத்தா வந்தபோது அங்கே பஞ்சமும் கொள்ளை நோயும் அட்டகாசம் செய்துகொண்டிருந்தன. இதைத்தப்பி சென்னை சேர்வதற்குள் என் மனம் விரக்தியடைந்துவிட்டது. ஏதோ கடவுள் செயலால் பைத்தியம் மட்டும் பிடிக்கவில்லை. உன் விலாசத்தை முற்றும் மறந்து விட்டேன்.

'மாங்குடி மிராசுதார் மகன் சங்கரைத் தெரியுமா?' என்று சிலரைக் கேட்பேன். அவர்கள் என் உடையையும் கோலத்தையும் கண்டு நகைத்துவிட்டுச் சென்றனர். மகாமகக்கூட்டத்தில் மொட்டைத்தாதனைக் கண்டாயா என்று கேட்பதுபோல் ஆகிவிட்டது. இரண்டு மூன்று முறை தற்கொலை செய்துகொள்ள முயன்றேன். ஏனோ அவைகள் தவறிவிட்டன. பிறகுதான் விசாலம் எனக்கு உயிர்ப்பிச்சை அளித்தாள்.

காசியில் அம்மை விசாலாக்ஷியின் சந்நிதியில் நின்றுகொண்டு என் நிலையைச் சொல்லிப் புலம்பினேன். அவள்கூட கால் வயிறு கஞ்சிவார்க்கவில்லை. இந்த விசாலம் எனக்குக் கண்ணைக் கொடுத்தாள்; உனக்கு அண்ணனைக் கொடுத்தாள்! அவளுக்கு நான் என்ன செய்யப்போகிறேன்? வெண்ணெயுண்ணும் கண்ணனைப்போல் குழந்தை பிறந்து அவள் அத்துடன் கொஞ்சிக் குலவுவதைப் பார்க்கவேண்டும். பிறகு நான் செத்தாலும் பாதகமில்லை'' என்று சொல்லி முடித்துக் கண்ணைத் துடைத்துக்கொண்டார், பஞ்சாபகேசன்.

சங்கர் விசாலத்தை நோக்கிப் புன்னகை புரிந்தார். விசாலம் அறையில் மாட்டியிருந்த வெண்ணெயுண்ணும் கண்ணன் படத்தைப் பார்த்துப் பெருமூச்சுவிட்டாள்,

அம்மாளின் வீரச்செயல்

கௌரீ

“ரெயில்வண்டிகளிலோ துளி இடம் கிடையாது. பணத்தையும் கொடுத்துவிட்டு நின்று கொண்டுதான் போகவேண்டும். காலை வேளை. உட்கார்ந்துகொண்டே வேடிக்கையாகப் போகலாம். எழும்பூரோ புறப்படும் இடம். நல்லதாய் ஓர் இடம் பிடித்துக்கொண்டு விடலாம். இவ்வளவு தைர்யம் இருக்கும்பொழுது ஏன் வீணாய்ப் பணத்தை ரெயில்காரனுக்குக் கொடுக்கவேண்டும்? ஒரு தடவை மூன்றாம்வகுப்பில் ஏறித்தான் பார்க்கிறது” என்று மனதில் நிச்சயம் செய்துகொண்டேன். டிக்கெட் ஒன்றை வாங்கிக்கொண்டு வந்து வண்டியில் ஏறினேன். அப்பொழுது கூட்டமில்லை. இடம் தாராளமாகத்தான் இருந்தது. நானும் நல்ல இடமாய்ப் பிடித்துக்கொண்டேன். வண்டி புறப்படுவதற்குள் அப்பாடா! புளி மூட்டைதான். அப்படிவந்து அடைந்துவிட்டது கூட்டம். மூச்சுவிட இடமில்லை. நல்ல வேளையாய் ஜன்னல் ஓரமாய் உட்கார்ந்தேனோ பிழைத்தேன். ‘உஸ் அப்பாடா!’ என்று இடத்தைச் சரிப்படுத்திக்கொண்டு மூச்சு விடுவதற்குள் வண்டி செங்கற்பட்டுக்கு வந்துவிட்டது.

வண்டி நின்றதோ இல்லையோ நாலைந்து டின், இரண்டு மூட்டைகள், இரண்டு கூடை, இரண்டு மூன்று பெட்டிகள் எல்லாம் நான் உட்கார்ந்திருந்த ஜன்னலின் வழியாய் உள்ளேவர ஆரம்பித்தன. “அப்பாடா” என்றேன் நான். “பொதேர்” என்று இரண்டு பெட்டிகளும் என் மடியின் மேல் வந்துவிழுந்தன. உட்கார இடமில்லை; மூச்சுவிட இடமில்லை; புளி அடைகிறது போல் அடைந்திருக்கிறது கூட்டம். இன்னும் வண்டிசாமானை ஏற்றிக்கொண்டு வந்தால் ஜனங்கள் எங்கே தலைக்குமேலா உட்கார்ந்துகொள்கிறது? எனக்கு வந்த கோபத்திற்குக் கணக்கில்லை. வண்டியில் யார் ஏறுகிறார்கள் என்பதையும் பார்க்கவில்லை, “சாமானைத் தூக்கித் தலைமேலேயே போடுகிறீர்களே? உட்கார்ந்திருப்பது கண் தெரியவில்லை? வந்து எங்கே தலையிலா உட்கார்ந்து கொள்ளப் போகிறீர்கள்?” என்று எரிந்து விழுந்தேன். ஐந்தாறு குழந்தைகளை முன்னே விட்டுக்கொண்டு வண்டியில் ஏறினாள் ஒரு ஸ்திரீ. அவள் பின்னால் அவள் புருஷனாகத்தான் இருக்கவேண்டும். ஒருவர் வந்தார். அவரைவிட அந்த அம்மாள் சற்றே தைர்யமாகவே தென்பட்டாள். கூட்டத்தில் எப்படியோ சமாளித்துக் கொண்டே முன் வந்தாள். வந்துகொண்டே “அங்கேதான் இருந்த இடத்தைவிட்டு நகராமல் நின்றுகொண்டிருந்தேள், இங்கேயாவது குழந்தைகளுக்குக் கொஞ்சம் உட்கார இடம் பண்ணித்தரப்படாதோ? போங்கோளேன் முன்னால்” என்றாள் அவரைப் பார்த்து. ஆனால் அவர் நின்ற இடத்தைவிட்டு நகரவில்லை.

“எங்கே போகிறது முன்னாலே? கால் வைக்க இடம் ஏதாவது இருக்கா வண்டியில்? பக்கத்து வண்டியில் ஏறிக்கொள்ளலாம் என்று சொன்னேனே, ஏதாவது சொல்வதைக் கேட்டால்தானே? இப்பொழுது யாரைப்போய் எழுந்திரு என்று சொல்லுவது? எப்பொழுதும் இப்படித்தான். நன்றாய்நில்லுங்கோ எனக்கென்ன?” என்று விடுவிடு என்றார் அவர். இருந்தாலும் அந்த அம்மாளுக்கு அஸாத்திய சாமர்த்தியந்தான். “இப்படி வழியில்லாத புருஷாளுடன் வெளியில் கிளம்பலாமோ? அழகு தெரிந்திருந்தும் கிளம்பினேனே? செருப்பாலதான் அடித்துக்கொள்ளவேண்டும் என் புத்தியை” என்று சொல்லிக் கொண்டே எல்லோரையும் தாண்டி மிதித்துக்கொண்டு வந்தாள். “கொஞ்சம் குழந்தைக்குமட்டும் இடம் கொடுங்களேன்” என்று கேட்டுக்கொண்டே ஒவ்வொன்றாய்த் தூக்கிவிட ஆரம்பித்தாள். அவள் சாமர்த்தியம் அல்லவோ சாமர்த்தியம்? கடைசியில் என் மடியில்கூட ஒரு குழந்தை ஏறிவிட்டது. அசாத்திய கோபம்தான் வந்தது எனக்கு. ஆண்பிள்ளைகள் உட்கார்ந்திருப்பதையும் கவனியாமல் ஒரு ஸ்திரீ இப்படி வந்தால் அவளை என்ன செய்வது?

“என்ன ஸார், நீங்களும் பார்த்துக்கொண்டு இருக்கிறீர்களே? அப்படி எங்கேயாவது இடம்செய்து கொடுக்கக்கூடாதா?” என்றேன் அவரைப் பார்த்து. அவர் ஒன்றுமே பேசவில்லை. “என்ன புருஷன்! வண்டியில் குழந்தைகளையும் அவளையும் அழைத்துக் கொண்டுவந்துவிட்டு இப்படியா பேசாமல் இருப்பார்?” எனக்கும் அந்த அம்மாள் கூறுவது ஸரி என்றுதான் தோன்றிற்று.

"பாவம் அந்த அம்மாள்." என்று நினைத்துக் கொண்டேன். எப்படியோ ஸாமான்களின் பேரில் இடம் பார்த்துக்கொண்டு அவளும் உட்கார்ந்து விட்டாள். வண்டியில் ஒரே சத்தம்.

உட்கார்ந்து கொண்டே தலைப்பை அவிழ்த்து டிக்கட்டுகளை எண்ணினாள். "இந்தாங்கோ, இதைச்சித்தே பையில் போட்டுக்கோங்கோ, தலைப்பில் இருந்தால் எங்கேயாவது விழுந்துடும்" என்று டிக்கெட்டுகளை அவரிடம் நீட்டினாள். நானும் என்ன நடக்கிறதென்று பார்த்துக்கொண்டேதான் இருந்தேன். அப்பொழுதும் அவர் முன் வரவில்லை, இருந்த இடத்திலேயே நின்றுகொண்டு, "இந்தக் கும்பலைத் தாண்டிக்கொண்டு என்னால் வரமுடியாது. என் கையில் ஒன்றும் கொடுக்கவேண்டாம், எல்லாம் நீயே வைத்துக்கொள்" என்றார். வண்டியில் அம்மாளின் சொற்பொழிவு தொடங்கிவிட்டது, வண்டியில் எல்லோருக்கும் கொஞ்சம் சுவாரஸ்யம் உண்டாகி விட்டது; எல்லோரும் அவளையே பார்க்க ஆரம்பித்தார்கள்.

"பாருங்கோன்னா, டிக்கெட் புருஷா வாங்கமாட்டாளோ? ரெயிலடியில் வந்து வண்டிவர நாழியாய் விட்டது. கூட்டமாம் நாட்டமாம், இருந்த இடத்தைவிட்டு நகர்ந்தால் தானே? நமக்கென்ன ஆளா கைகட்டிக் காத்துக்கொண்டிருக்கான் ஓட? புறப்படும் வரையிலும் தர்க்கம்தான். வேண்டாமென்கிறதும் வேணுமென்கிறதும் ரொம்ப நன்றாய்த்தான் இருக்கு. நாலுபேர் நடுவில் இதுவேறையா? புருஷாள் இப்படி இருந்தால் பொண்டுகள் என்ன செய்கிறது? நீங்களே சொல்லுங்கள்" என்று என் முகத்தைப் பார்த்தாள். எனக்கும் அவளைப் பார்த்ததால் சற்று அங்கலாய்ப்பாய்த்தான் இருந்தது. "பாவம் முரட்டுப்புருஷன். குழந்தைகளையும் குட்டியையும் வைத்துக்கொண்டு என்ன செய்வது" என்று நினைத்துக் கொண்டேன்.

வண்டியும் நகர்ந்துகொண்டே இருந்தது. வெய்யிலா வறுத்து எடுக்கிறது. கூட்டம் குறைவதும் அதிகரிப்பதுமாய் இருந்தது. குழந்தைகளா அதற்குள் பிணமாய்ப்

அடியாத மாடு படியாது

ஆனால் •
படியாத •
கேசத்திற்கு
?

ஜாப்கோ பிரில்லியன்டைன்

பிடுங்க ஆரம்பித்துவிட்டன. "குழந்தைகள் அடித்துக்கொள்கிறதே? கையில் தயிர் சாதம்தான் இருக்கிறது. ஒரு சாம்பார் பொட்டணம் வாங்கினுல் எல்லாருமாய் நிரவிச் சாப்பிடலாம். வாங்கிண்டு வருவேளோ? அதற்கும் நான் தான் போகணுமோ?" என்ருள் அந்த அம்மாள் மறுபடியும் அவரைப் பார்த்து. "வேண்டுமென்ருல் வாங்கிக் கொண்டு வருகிறேன். வாயாய் வார்த்தையாய்ச்சொல்லக்கூடாதோ? ஏன் வண்டியில் வந்து இப்படிச் சத்தம் போடுகிருய்?" என்ருள் அவர் நிதானமாய்.

அம் :—ஆமாம் நான்தான் கத்துகிறேன். பேசாமல் டிக்கெட்டுகூட வாங்காமல் நின்று கொண்டு இருந்தேளே? பேசாமல் இருந்தால் வண்டி கிடைத்துவிடாதோ? எல்லாம் இழுத்துக் கட்டிக்கொண்டு செய்வதற்கு ஒருத்தி இருந்தால் சொல்லுவேள்.

அவர் :—என்ன அவசரம் அப்படி. முந்திரிக் கொட்டையைப்போல் அலேந்தால் நாணு பாத்தியம் அதற்கு? வாங்குவதற்குள் அப்படி என்ன அவசரம் அடித்துக்கொண்டு போகிறது? கல்யாணமா கார்த்தியா? ஒரு நாள் பிந்தி பிந்தி போனுல் போகிறது. டிக்கெட்டை நாணு போய் வாங்கச் சொன்னேன்?

இவர்களுடைய சண்டை வேடிக்கையாகத்தான் இருந்தது. பொழுது போவதே தெரியவில்லே. ஆனல் அந்த அம்மாளுக்குக் கோபம் தாங்கவே முடியவில்லே. உறுத்துக் கொட்டிக்கொண்டே இருந்தாள். "ரொம்ப நன்ன சவரணேயாய் இருக்கு. பொம்மனுட்டி தானே எல்லாம் செய்வாள்" என்ற வார்த்தைகள் தான் என் காதில் பட்டன. அதற்குள் விழுப்புரம் வந்தது. வண்டியும் நின்றது.

"சாதம் வாங்கிக்கொண்டு வரப் போறேளோ இல்லேயோ?" என்று சத்தம் போட்டாள் அந்த அம்மாள்.

"இந்தாடீ, தொலேந்து போகிறேன். சத்தம் போடவேண்டாம். பிரசங்கங்களும் பேச்சும் வீட்டோடு இருக்கக் கூடாதா? நான்குபேர் இருக்கும்பொழுது கூடவா இப்படி?" என்று சொல்லிக்கொண்டே கீழே இறங்கினர் அவர்.

"அப்பாடா, இவ்வளவு வேண்டியிருக்கிறது இந்த ஆஸாமிக்கு. இல்லாவிட்டால் கல்லுப்பிள்ளேயார் மாதிரி அசையமாட்டான் போலிருக்கிறது" என்று நிணேத்துக்கொண்டே நானும் வண்டியை விட்டுக் கீழே இறங்கினேன்.

மறுபடியும் நான் வண்டியில் ஏறும் பொழுது ஒரு சாம்பார் சாதப் பொட்டணத்துடன் அவரும் வந்து ஏறினர்.

வண்டியில்என்னமோ ஏகசத்தம், எங்கள் வண்டியில் டிக்கெட் பரிசோதகர் நின்று கொண்டிருந்தார். அந்த அம்மாளும் ஏதோ சத்தம் போட்டுக்கொண்டிருந்தாள் "கட்டையிலே போற பிள்ளே" யார் என்று எனக்குத் தெரியவில்லே. ஏதாவது திருட்டுப் புரட்டு நடந்துவிட்டதோ என்று தூக்கிவாரிப்போட்டது எனக்கு. "நீங்கள்தானு ஸார் அந்த அம்மாளுடன் வந்தவர்" என்று டிக்கெட் பரிசோதகர் என்னேக்கேட்டாரோ இல்லேயோகிலிபிடித்துக் கொண்டுவிட்டது எனக்கு. நான் சாமான்கூட எடுத்துவரவில்லேயே என் பதுதான் எனக்கு. "இல்லே ஸார், அவர்" என்று பின்புறத்தில் நின்றுகொண்டிருந்த அந்த அம்மாளின் புருஷனை பிரகிருதியைக் காண்பித்தேன். டிக்கெட் பரிசோதகர் கையிலிருந்த டிக்கெட்டுகளே அவரிடம் கொடுத்தார், அதைப் பார்த்தவுடன் அவர் தேகம் அப்படியே ஓர் உலுக்கல் உலுக்கியது. கையிலிருந்த சாம்பார் சாதத்தை வீசி எறிந்தார்.

"ஐயயோ! கட்டையிலே போகிற பிள்ளே பாக்கிக் காசையும் எடுத்துண்டு போயிடுத்தே, மாயவரத்துக்கின்னு டிக்கெட் வாங்கச்சொன்னேன். மதுராந்தகத்திற்குன்னு வாங்கித் தொலேச்சுடுத்து" என்று சத்தம் போட்டாள் அந்த அம்மா.

டிக்கெட் பரிசோதகர் தம் வேலேயைப் பார்த்துக்கொண்டு போய்விட்டார்,

"என்ன ஸார்" என்றேன் நான்,

இவ்வளவு நேரமாய் வாய் அடைத்துக் கிடந்த அப்புருஷனின் பிரசங்கம் மடை உடைந்ததுபோல் பெருக ஆரம்பித்தது. அம்மாளும் மௌனத்தை மேற்கொண்டாள்.

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami
at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

2000 வருஷங்களுக்குமுன்

முனனோாகள் சந்தணத்தை குறைவற்ற நன்மைக்கு ஒப்பிட்டார்கள். இன்று நாம், ஒரு நல்ல பொருளை அந்த வர்க்கத்தின் "ரோல்ஸ ராய்ஸ்" என்று சொல்லுகிறோம். அதேபோல முன்னோர்கள் ஒவ்வொரு உயர்ந்த பொருளையும் சந்தணத்திற்கு சமமாகச் சொல்லுவார்கள். ஸ்நானத்திற்கு அனுகுணமான வாசனைத் திரவியங்களின் சேர்க்கைக்கு சந்தணத்தைலம் இன்றியமையாததாக இருபபதின் காரணம் அதன் சுகந்த மணமும் குளிர்ச்சியளிக்கும் குணமுமேயாம். அசோகனுண்ட காலத்தின் உண்மை என்றும் உண்மையே.

மைசூர்
சந்தண சோப்

சந்தணம் குறிப்பது குற்றமற்ற குணமே

★ ★ மைஸூர் கவர்மெண்டு தயாரிப்பு ★ ★

Regd. No. M. 4405 CAUVERI

டி. எஸ் ஆர். கோகுல் தைலத்தை
தொடர்ந்து உபயோகித்த இம்மங்கை தனது கூந்தல்
அடர்ந்து கவர்ச்சியாக வளர்ந்திருப்பதைக் கண்டு
அகமகிழ்கிருள்.

இம் மகிழ்ச்சியை நீங்களும் எளிதில் அடையலாம்

டி. எஸ். ஆர்
கோகுல் கூந்தல் தைலம்,
சந்தனுதித் தைலம், அரைக்கீரை விதைத் தைலம்
இவைகள் குற்ருல ஸ்நானத்தின் குளிர்ச்சிக்கு நிகரானவை!

மதராஸ் ஸிடி ஏஜண்டு: **புஷ்பவனம் ஸ்டோர்ஸ்** பைக்ராப்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி.

T. S. R. & CO.
PERFUMERS
KUMBAKONAM

Cauveri Colour Press, Kumbakonam.